இத் தகைய உணர்ச்சி ததும்பும் சித்திரம்
இதுவரை வெளிவந்ததில்லை...



ஜெமினி சக்ரதாரி

இப்பொழுது சென்னை

கிரௌன், ஸ்டார் இரு தியேட்டர்களிலும்

மற்றும்

பெங்களூர்		ஸ்ரீ, விஜயா, சென்ட்ரல்	போடி நாயக்கனூர்		பொன்னு
மதுரை	...	ஸ்ரீ தேவி	கரூர்	...	அம்பிகை
கோயமுத்தூர்	...	ஷண்முகா	புதுச்சேரி	...	நியூ கமர்ஷியல்
திருச்சி	...	ஜெயிட்டி	பெஜவாடா	...	மாருதி
சேலம்	...	நியூ ஸினிமா	விஜயநகரம்	...	மினர்வா
மைசூர்	...	பிரபாதேவ்	விசாகப்பட்டணம்		மினர்வா
திருநெல்வேலி		பாலஸ் டி வேல்ஸ்	காக்கிநாடா	...	மினர்வா
காரைக்குடி	...	சரஸ்வதி	மசூலிப்பட்டணம்		மினர்வா
கும்பகோணம்	...	விஜயலக்ஷ்மி	ராஜமஹேந்திரம்	...	கிருஷ்ணா
காஞ்சீபுரம்	...	கண்ணன்	எல்லூர்		கோபால கிருஷ்ணா
சிக்பலபூர்	...	வாணி	குண்டூர்	...	நியூ பாம்பே
தவணகிரி	...	மஹாலக்ஷ்மி	பெல்லாரி	...	முபாரக்
சித்தல்தூர்க்	...	ரூபவாணி	தெனாலி	...	ரத்னா
அம்பாசமுத்திரம்	...	கிருஷ்ணா	கர்னூல்	...	சந்த்

ஆகிய நகரங்களிலும் இப்பொழுது நடைபெறுகிறது

படை மறைந்து போகும்



சரும வியாதிக்கு சீக்கிரம் குணம் காண "சைபால்" மேல் பூசுங்கள். மற்ற இடங்களுக்குப் பரவாமல் தடுப்பதுடன், சருமத்தை சுத்தப்படுத்தும். சொப்புளங்கள், சொரி, சிரங்கு, படை, பரு, கரு, கால் வெடிப்பு, புண்களுக்கு ஆச்சர்யமாய் குணமளிக்கவல்ல மருந்து.

CIBOL

ஸைபால்

தயாரிப்பவர்கள்:

ஸைனோ இந்தியன்
மான்யுபாக்சரிங் கம்பெனி
மதுரை.

ஏஜண்டுகள்: மெஸர்ஸ். சீதாராம ஜெனரல் ஸ்டோர்ஸ் ஏஜென்ஸீஸ், பெஜவாடா, செகந்திராபாத் & பேர்ஹாம்பூர்: ஸ்ரீ கிரிஜா மெடிகல் ஸ்டோர்ஸ், பெங்களூர் ஸிடி: மெஸர்ஸ். ராஜன் டிரக் ஸ்டோர்ஸ், மதராஸ்

பருத்தி நூல்களுக்குப் பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிட்.

மதுரை - தூத்துக்குடி - அம்பாசமுத்திரம்


5,00,000 நூற்கும் கதிர்கள் நம்பர் 80 வரை நூல்கள்

எங்களுடைய விசேஷமான நூல்கள்: ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக்கேற்றிய நூல்.

நாங்கள் சப்ளை செய்வது: கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள் கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள். எங்கள் எழெப்பிய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றவை. நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

மானேஜர்கள்: ஏ. & எப். ஹார்வி லிமிடெட்.


மேஜர் மேஸ்ட்ரோ



5 வால்வுகள் AC & AC/DC உறுதியான வால்நட் பெட்டி. தூக்கிப்போகும் கைப்பிடியுடன்.

பைலட் ரேடியோக்கள்
ஒரே தரமான சிறப்பு

உங்கள் அருகாமையிலுள்ள ரேடியோ வியாபாரியிடம் காணுங்கள்.



பாண்ட்ஸ்ப்ரெட் மாடல் BS 647
6 வால்வுகள் AC அழகான வால்நட் பெட்டி

சமஸ்தானங்கள் உள்பட சென்னை ராஜதானிக்கு ஏகபோக பார்ட்னர் பிரதிநிதிகள்:

[illegible]

1/17 மவுண்ட் ரோடு, சென்னை-2.

4PZ-2-1M

அஜீரணமா ?

......நீங்கள் அவசியம்
அறிய வேண்டியது
கொஞ்சம் இருக்கிறது



வயிற்றுக் ... அதிக
அமிலம் சேருவதால் ஏற்படும் வாயு
உபத்திரவம் இதர உபாதைகளும்
ஏற்படலாம். அதைத் தவிர்க்க
“பிஸ்மாக்” போன்ற மாற்று
இல்லை. வயிறு சரியாக வேலை செய்
யப் போதிய சக்தியை அளிக்கிறது.
வயிற்று நோயால் அவதியுறுபவர்
களுக்கு “பிஸ்மாக்” சிபாரிசு
செய்கிறேன். ...
முன்பே ... உணவு
தெரியும்.

உங்களுக்கு வேண்டியது


எல்லா கெமிஸ்டுகளிடமும் ஸ்டோர்களிலும் பவுடராகவும் மாத்திரையாகவும் கிடைக்கும்.

BISMAG

சோல் ஏஜண்டுகள் :

ஜீயாப்ரே மானர்ஸ் & கோ., லிட்.

பம்பாய்-கல்கத்தா-மதராஸ்-லாகூர்



மனைவி :—காதா! தேசத் தலைவர்களின் சித்திரம் வரையப் புகுந்த நீங்கள், எல். ஜி. பெருங்காயத்தைப் பற்றி எழுத ஆரம்பித்து விட்டீர்களே! ஏன் இந்தத் தடுமாற்றம்?

சைத்திரிகர் :—பிரியே! நேற்று நீ எல். ஜி. பெருங்காயத்தை உபயோகித்து சமைத்த பதார்த்தங்களின் மணமும், சுவையும் அபாரிதம். அவை என் உடலிற் கலந்து, என் உணர்ச்சியையும் கவர்ந்து விட்டது.

மனைவி :—அதனால்தான் நேற்று தூக்கத்திலும் எல். ஜி. என்று ஸ்மரித்தீர்களோ!

சைத்திரிகர் :—அன்பே! என் வாழ்நாளில் நான் நேற்றுத்தான் நன்றாக சுவைத்துச் சாப்பிட்டேன். இனி நீ தவறாது எல். ஜி. பெருங்காயத்தையே உபயோகிக்க மறந்து விடாதே.

மனைவி :—காதா! தங்கள் சௌக்கியமே என் பாக்கியம். நீங்கள் வயிறாரச் சாப்பிட்டு அகமும், முகமும் மகிழ்ந்திருப்பதே நான் வேண்டுவது. ஆதலின் இன்னும் இரண்டு பாக்கெட்டுகள் எல். ஜி. மார்க்கைக் கவனித்து எல். ஜி. பெருங்காயத்தையே வாங்கி வர வேண்டுகிறேன்.

சைத்திரிகர் :—ஆஹா! அப்படியே செய்கிறேன்.

●

லால்ஜி கோது & கம்பெனி

பிரபல பெருங்காய வியாபாரிகள் :

சௌகார்பேட்டை :: சென்னை

"லங்கர்" மார்க்
வாசனை பாக்குத் தூள்



★

அசல்

பாதாம் எண்ணை

★

ரோஜாப்பூ
குல்கந்து

★

ரஷிக்லால் & கோ.,
கோவிந்தப்ப நாயக்கன் தெரு
மதராஸ் - 1



தலையில்

தலை மயிர் தெரிகிறதா, அல்லது அடித் தலை தெரிகிறதா? அடித் தலை புலப்படும் பக்ஷத்தில், உதிர்ந்த கேச ராசிகளுக்குப் பதில் புதுக் கூந்தல் முளைக்க வில்லை என்பது நிச்சயம். அச் சமயம் கேசவர்த்தினியைக் கொண்டு பரிஹரிக்காமல், பாதி வழுக்கையைப் பூரண வழுக்கை யாக விடுவானேன்? வழுக்கை யால் ஏற்படும் இழத் தோற்றத் தையும் அனுபவிப்பானேன்?

உதிர்ந்த இலைகள் மறுபடி முளைத்து விடும், ஆனால் சில சமயங்களில் உதிர்ந்த கூந்தல் சிகிச்சை யில்லாமல் முளைப்ப தில்லை. அச்சமயங்களில் கேச வர்த்தினியை உபயோகித்து மயிர் உதிர்வதை நிறுத்தி, இளம் கூந்தலையும் இளமையும் ஒருங்கே பெறுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணா 14
(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்:
தென் இந்திய ரஸாயனசாலை.
ஆர். எஸ். புரம், கோயமுத்தூர்

தனிமையாக்கப்பட்ட கல்லூரி மாணவி





இப்போது பிரபல பரிசைப்பெற்றவள் 'க்ருஷனு'க்கு வந்தனம்.

ஒரு வருட காலத்துக்கு முன் சீதா தன் களையான வதனத்தையும் சோதிகளையும் இழந்தாள். அவள் களைப்பும் கவனமின்மையும் பெற்று அவளது மேனி சுருக்கிட்டு விட்டது. எல்லோரும் அவளை மந்தம் என்றும் முன் கோபி என்றும் கூறினர். தன் தாயாரிடம் தன் கல்லூரியை விட்டுவிடப் போவதாகக் கூறியபோது அவளது தாய் "தினம் காலை உண்டிக்கு முன் "க்ருஷன்" சாப்பிடு" என்று புத்தி கூறினாள்.

ஒரு வருடத்துக்குப் பின் சீதா ஓர் பரிசு பெற்ற மாணவி. இண்டர் மீடியேட் பரீக்ஷையில், "அழகும் புத்தியும் அடைவது அதிர்ஷ்டமே" என்று அவள் நண்பர்கள் கூறினர். முறுவலித்து தனது தாயின் யோசனையைக் கூறினாள்.

மனித வர்க்கத்தைத் தாக்கும் பாதி நோய்கள் ஓர் மூலகாரணத்தைக் கொண்டதாகும். அதுதான் உள்ளச் சோர்வு. உங்கள் உடம்பின் உட்புறத்தை ஒழுங்காக வைத்துக்கொள்ள ஓர் நிச்சயமான ஜாக்ரதையான முறை சிறிதளவு தினமும் 'க்ருஷன் ஸால்ட்' எடுத்துக் கொள்வதுதான். 'க்ருஷன்' ஆறுவகை இயற்கை உப்புகளின் சேர்க்கையாதலால் உங்கள் வெளிப்போக்கு அவயவங்களை சரியான முறையில் பாதுகாத்து, குடலை மந்தப்படுத்தி ரத்தத்தை விஷமாக்கும் மலத்தை அப்புறப் படுத்துகிறது. 'க்ருஷன்' உங்களை அதிக வலுவுடனும், அதிக களையுடனும் விளங்கச் செய்கிறது.

இன்றே 'க்ருஷன்' வாங்குங்கள். கெமிஸ்டுகளிடமும் வியாபாரிகளிடமும் எங்கும் கிடைக்கும் விலை ரூ. 1-10 (மஞ்சள் பெட்டியில்)



நீங்கள்கூட அந்த 'க்ருஷன்' உணர்ச்சியை அடையலாம்

கல்கி
பொருளடக்கம்

மலர் 8 } இதழ் 24 }

ஜனவரி 9

{ சர்வதாரி ௵ { மார்கழி 27

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

நம் தேச சீதோஷ்ண ஸ்திதிக்கேற்க செய்யப்பட்ட



அழகிய பிளாஸ்டிக் பெட்டி

பில்கோ ரேடியோ

சாதாரண கிராமபோன் விலையில்

இப்போது உங்களுக்குக் கிடைக்கும்

ரூ. 385

உங்களுக்கு இஷ்டமான ஸ்டேஷன்களைக் கேட்கலாம்

விவரங்களுக்கு எழுதுங்கள்:

சென்னை மாகாண, சமஸ்தான விநியோகஸ்தர்கள்:

மகமத் இப்ருஹிம் & கம்பெனி, லிமிடெட்

"விஜய மாளிகை" 7-8, மவுண்ட் ரோடு :: மதராஸ்-2

ஸ்ரீ புரந்தரதாஸ சங்கீத வித்யாலயா, கோயமுத்தூர்



மேற்படி வித்யாலயத்தின் கட்டிட நிதிக்காக
ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி
உதவும் சங்கீதக் கச்சேரி

★

சங்கீத ரத்ன
மைசூர் சௌடய்யா ... பிடில்
எம். எஸ். சக்திவேல் ... மிருதங்கம்
ஆலங்குடி ராமச்சந்திரன் ... கடம்

19-1-1949 புதன்கிழமை மாலை 6 மணிக்கு

கோவை, ஆர். எஸ். புரத்தில் வித்யாலயத்தில்
ஸ்பெஷலாக அமைக்கப் பட்டிருக்கும் பந்தலில்

★

கனம் மந்திரி ஸ்ரீ H. சீதாராம ரெட்டியார் அவர்கள் தலைமை வகிக்கிறார்கள்

C. P. நாச்சியப்பச்சாரி, கௌரவ காரியதரிசி

டிக்கட்டுகள் விபரம்:— ஆதரவாளர்கள்:—A—ரூ 500/- B—ரூ 250/- C ரூ 100/-
1-ம் வகுப்பு ரூ. 25/- 2-ம் வகுப்பு ரூ. 10/- 3-ம் வகுப்பு ரூ. 5/-

டிக்கட்டுகள் கிடைக்கு மிடங்கள்:—
● C. P. நாச்சியப்பச்சாரி, தெலுங்கு பிராமணாள் வீதி, கோவை
● ஸ்ரீ புரந்தரதாஸ வித்யாலயா கொட்டகை, R.S. புரம், கோவை

ஜெய் ஹிந்த்!

எல்லோர்க்கும் வாழ்வளிக்கும் வழி எது?
என்பதைத் திட்டவட்டமாக விளக்கிக்காட்ட,

1949 ஜனவரி 23 நேதாஜி ஜெயந்தி யன்று வெளிவருகிறது

நேதாஜி

(தேசிய முற்போக்கு வார வெளியீடு)

கௌரவ ஆசிரியர்: பசும்பொன் உ. முத்துராமலிங்க தேவர்

ஆசிரியர்கள்:
டி. எஸ். சிவர்ணம், சக்தி மோஹன், கோ. ராமகிருஷ்ணன்

வருட சந்தா ரூ. 6. ஆறு மாதம் ரூ. 3-4-0

★

ஏஜென்ஸி விபரங்கட்கு: டி. எஸ். சிவர்ணம்
"நேதாஜி" காரியாலயம் :: 220 வடக்கு மாசி வீதி, மதுரை

கல்கி

மலர் 8 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 24

என்ன செய்தி?

சொல்லும் செயலும்

பாகிஸ்தான் மந்திரி ஷஹாபுதீன் சமீபத்தில் கராச்சியில் பேசியபோது, "பாகிஸ்தானிலுள்ள பெரும்பான்மை சமூகத்தினர், அதாவது முஸ்லிம்கள் சிறுபான்மையோரான ஹிந்துக்களிடம் பெருந்தன்மையுடனும் அன்னியோன்னிய பாவத்துடனும் இருந்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டியதே தங்களுடைய உயர்ந்த கடமை என்பதை உணர்ந்திருக்கிறார்கள்" என்று சொன்னார் "அதே போன்று இந்தியாவிலுள்ள பெரும்பான்மையோரும் சிறுபான்மையோரான முஸ்லிம்களிடம் பெருந்தன்மையாக நடந்து கொள்ள வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

ஆனால், அவரது வேண்டுகோளை நிறைவேற்ற இந்தியாவிலுள்ள பெரும்பான்மை சமூகத்தினர் தயாராக இல்லை! ஏனெனில் இந்தியாவிலுள்ளவர்கள் அதை நிறைவேற்ற முற்படுவார்களாயின் நிலைமை விபரீதமாய் விடும்! சிந்து, மேற்கு பஞ்சாப், வடமேற்கு எல்லைப்புற மாகாணங்களிலிருந்து பெரும்பாலான ஹிந்துக்கள் வெளியேறி விட்டார்கள். கிழக்கு வங்காளத்திலிருந்தும் வெளியேறி வருகிறார்கள். பாகிஸ்தானில் பாலும் தேனும் வழிந்தோடப் போகிறது என்று எண்ணிச் சென்ற முஸ்லிம்கள்கூடப் போன வழியே திரும்பி வருகிறார்கள்.

அதற்கு மாறாக, இந்தியாவில் நாம் காண்பதென்ன? முஸ்லிம்கள் கவர்னர்களாக இருக்கிறார்கள்; மந்திரிகளாக இருக்கிறார்கள்; நீதிபதிகளாக இருக்கிறார்கள்: வெளிநாடுகளில் இந்தியாவின் ஸ்தானீகர்களாகவும் இருக்கிறார்கள்; இன்னும் எத்தனையோ பேர் உயர்தர உத்தியோகங்களில் இருக்கின்றனர். ஆனால் பாகிஸ்தானிலோ ஹிந்துக்கள், "எங்களுக்கு உத்தியோகமே வேண்டாம். உயிருக்கு ஆபத்து ஏற்படாமல் இருந்தால் போதும்" என்கிறார்கள். அப்படியிருக்க, சிறுபான்மையோருக்கு நீதி வழங்கும் விஷயமாகப் பாகிஸ்தானின் உதாரணத்தை இந்தியா பின்பற்ற வேண்டும் என்று பாகிஸ்தானின் மந்திரி கூறுவது விந்தையே யல்லவா?

நோய் தீர்ந்த பாடில்லை!

இந்தியாவின் இன்னல்களுக்கு மூல காரணமான பிரிவினை நோய் இன்னும் கூடப் பலரை விட்டபாடில்லை. இந்த உண்மை, இந்திய அரசியல் நிர்ணய மகா சபையின் நடவடிக்கைகளிலிருந்து நன்கு வெளியாகியிருக்கிறது. அரசியல் நகல் திட்டத்தில் மந்திரிகள் நியமன சம்பந்தமான ஷரத்தை யொட்டி விவாதம் நடந்தபோது, ஒரு முஸ்லிம் லீகர் மந்திரி சபையில் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார். இந்திய சர்க்கார் மந்திரி சபையில் முஸ்லிம் லீகர்களைச் சேர்த்துக் கொண்டபின் தான் கூட்டுப் பொறுப்பு முறை குட்டிச் சுவராகி, இந்தியா பிளக்கப்படுவதற்கும் இடம் ஏற்பட்டது. எனவே, மீண்டும் தனித் தொகுதி, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் போன்ற பிரிவினை முறைகளை அமுலுக்குக் கொண்டு வருவதைக் காட்டிலும் தேசத்தின் ஐக்கியத்தைக் குலைப்பதற்கு வேறு எதுவும் வேண்டியதல்ல. நல்ல வேளையாக இனி அத்தகைய பிரிவினை வாதிகளின் முயற்சி பலிக்காது என்பதையும் அந்தச் சபையின் நடவடிக்கைகளே நிரூபித்திருக்கின்றன.

நிகழ்ச்சிச் சித்திரம் -சாஸ்திரி



மலைபோல் வந்தது....!

ஞானிகளைப் பலர் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

மகா மேதாவிகளைப் பலர் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

பைத்தியக்காரர்களையும் பலர் சுற்றிக் கொண்டுதான் இருக்கிறார்கள்!

"பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேறினால், உலகம் புகழும் வகையில் இந்தியாவை ஆளும் திறன் இந்தியர்களுக்குப் பூரணமாக உண்டு" என்று மகாத்மா காந்தி சொல்லி வந்தார்.

அந்த மகானின் தீர்க்கதரிசனம் பொய்த்துப் போகாமல் அதைக் காப்பாற்றும் மகத்தான முயற்சியில் இந்தியாவை ஆட்சி புரியும் நமது மாபெரும் தலைவர்களும் அவர்களுடன் ஒத்துழைக்கும் கோடிக்கணக்கான ஜனங்களும் வெற்றி பெற்று வருகிறார்கள்.

"பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேறினால், இந்தியா முழுதும் இரத்த வெள்ளம் ஓடும்" என்று வின்ஸ்டன் சர்ச்சில் சொன்னார்.

சர்ச்சிலின் தீர்க்க தரிசனம் பொய்த்துப் போகாமல் அதைக் காப்பாற்றும் முயற்சியில் பலர் தாற்காலிகமாக வாவது வெற்றியடைந்ததுதான் துக்ககரமானது.

எனினும் சர்ச்சிலின் சீடர்களுடைய வெற்றி நீடிக்கவில்லை, நீடிக்கவும் முடியாது என்பதை ஹைதராபாத், காஷ்மீர சம்பவங்கள் நிரூபித்து விட்டன.

• • •

சரீரம் பிளக்கப்பட்டால் உதிரம் பெருகுவது போன்று, இந்தியாவின் மேற்குப் பாகமும் கிழக்குப் பாகமும் பிளக்கப்பட்டபோது உதிர வெள்ளம் ஓடியது.

மதவெறி காரணமாகக் கற்பனையும் செய்து கொள்ள முடியாத அளவுக்குக் கொலைகளும் கொள்ளைகளும் நிகழ்ந்தன.

ஒரு கோடி ஜனங்கள் உடைமைகளையும் உற்றார் உறவினரையும் விட்டுவிட்டுப் பரிதாபகரமாக இடம் பெயர்ந்து இடம் ஓடி வந்தார்கள்.

"நான் அப்போதே சொல்லவில்லையா?" என்று சர்ச்சிலும் திருப்தியடைந்தார்.

எனினும் மேற்படி மதவெறி மற்றவிடங்களுக்கும் பரவாமல் தடுப்பதில் நமது தலைவர்கள் வெற்றி பெற்றது, சர்ச்சிலையும் அவருடைய கோஷ்டியினரையும் பெரும் ஏமாற்றம் அடையும்படி செய்ததுடன், உலக ஜனங்களையும் பிரமிக்குமாறு செய்தது.

சுதந்திரம் பெற்றதும் பெருததுமாக இந்தியாவுக்கு ஏற்பட்ட சோதனை அத்துடன் நின்றுவிடவில்லை.

மத வெறிக்கு விதை விதைத்த பாகிஸ்தான் அதிகாரிகள் காஷ்மீரத்தின் மீது மலைவாசிகளைத் தூண்டி விட்டார்கள்.

கிராமங்களின் மீது படையெடுத்துக் கொலைகளும் கொள்ளைகளும் புரிவதையே தங்களுடைய பிறப்புரிமையாகக் கொண்ட மலைவாசிகளுக்கு ஒரு சர்க்காரின் ஆதரவும் நவீன ஆயுத சாதனங்களும் கிடைத்து விட்டால் கேட்கவா வேண்டும்?

அவ்வளவுதான்; உலகிலே மிக்க வனப்பு வாய்ந்த காஷ்மீரத்துக் கிராமங்கள் தீக்கு இரையாயின. அங்கு ஜனங்கள் பட்ட கஷ்டங்கள் விவரிக்க இயலாதவை.

இந்திய சர்க்கார் உற்ற சமயத்தில் இந்திய வீரர்களை அனுப்பி உதவி புரிந்திராவிடில், உலகிலேயே உயரமான எவரெஸ்டு சிகரத்தைப் போன்று உலகிலேயே சிறந்த இயற்கை அழகின் சிகரமாக விளங்கும் ஸ்ரீநகரும் இதர காஷ்மீரப் பிரதேசங்களும் சீரழிந்து போயிருக்கும்.

எனவே, காஷ்மீரத்தின் கதி அவ்வாறு ஆகிவிடாமல் காப்பாற்றிய இந்திய சர்க்காருக்கும், குறிப்பாக இந்திய சேனா வீரர்களுக்கும் காஷ்மீர் பிரதம மந்திரி ஷேக் முகமது அப்துல்லா வந்தனமும் நன்றியும் செலுத்தியிருப்பது முற்றிலும் பொருத்தமாகும்.

காஷ்மீர் போர் மூண்டது வருந்தத்தக்கதெனினும், அதன் மூலமாகவும் ஒரு மகத்தான நன்மை ஏற்பட்டது.

அதாவது முஸ்லிம்கள், ஹிந்துக்கள், சீக்கியர்கள் முதலியோர் சகோதரர்கள் போன்று சேர்ந்து வாழ முடியும் என்பதைக் காஷ்மீர் சம்பவம் நிரூபித்து விட்டது.

மதத்தின் பெயரால் செய்யப்படும் பிரசாரத்தைக் கண்டு மதியங்க மாட்டோம் என்பதைக் காஷ்மீர முஸ்லீம்கள் காட்டி விட்டார்கள்!

வெள்ளத் தனைய இடும்பை,
அறிவுடையான்
உள்ளத்தி னுள்ளக் கெடும்

பிரளயம் போல் திரண்டு வரும் எவ்வளவு பெரும் இடையூறையும் பொருட்படுத்தாமல் சமாளிக்கும் சக்தியும் தைரியமும் வாய்ந்த ஒரு மகா புருஷரை இந்திய சர்க்கார் தலைவராகப் பெற்றிருக்கும்போது, மலைபோல் வரும் எத்தகைய ஆபத்துக்களும் பனிபோல் நீங்காமல் என்ன செய்யும்?

* * *

இந்தியாவைப் பொறுத்தவரையில் 1949-ம் வருஷம் சுபமான அறிகுறியுடனேயே ஆரம்பமாகியிருக்கிறது.

காஷ்மீரத்தில் சென்ற பதினெட்டு மாதங்களாக நடந்து வந்த கோரமான யுத்தம் இந்த ஜனவரி மாதம் முதல் தேதியிலிருந்து நின்றிருப்பது ஒரு பெரிய நற்செய்தி அல்லவா?

புது வருஷத்தின் ஆரம்ப தினத்தில் செயலுள்ள யுத்த நிறுத்தத் தீர்மானத்தின் பயனாக, காஷ்மீரத்தில் நிரந்தரமான அமைதியும், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் நெருங்கிய நட்பும் உண்டாகும் என்று நம்புவதாக இந்திய சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

பாகிஸ்தான் சர்க்கார் அறிக்கையும் அவ்விதமே கூறுவதால், காஷ்மீரத்தில் அமைதியும் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் நெருங்கிய உறவும் நிலவுவதற்கு இனி எவ்வித இடையூறும் இல்லை எனலாம்.

சில மாதங்களுக்கு முன் யுத்தத்தை நிறுத்துமாறு ஐ. நா. சபைக் கமிஷன் கோரியபோதே இந்திய சர்க்காரைப் போல் பாகிஸ்தான் சர்க்காரும் அதற்கு இணங்கியிருந்தால், ஏராளமான உயிர்களும் பொருள்களும் காப்பாற்றப்பட்டிருக்கும். இப்போதாவது யுத்தத்தை நிறுத்த பாகிஸ்தான் சர்க்கார் இசைந்தது பாராட்டத் தக்கதுதான்.

யுத்தம் நின்று விட்டதெனினும் இன்னும் பல சில்லறை விஷயங்களையொட்டிய முடிவு ஏற்பட வேண்டும். ''ஆஸாத் சர்க்கார்'' என்ற மலைவாசிகள் அடங்கிய கோஷ்டியின் நிலைமை தெளிவுபட வேண்டும். பாகிஸ்தான், மலைவாசிகளின் துருப்புகள் காஷ்மீரத்திலிருந்து வாபஸாக வேண்டும். அடுத்தபடியாக சர்வஜன வாக்கு எடுக்கும்போது பாகிஸ்தான் சர்க்காரும் ஆஸாத் சர்க்காரும் நேர்மையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

காஷ்மீர ஜனங்கள் செய்யும் முடிவு எப்படியிருந்தாலும், அதற்கு விரோதமாக இந்திய சர்க்கார் நடந்துகொள்ள மாட்டார்கள் என்பதைப் பாரபட்சமற்றவர்கள் ஒப்புக் கொள்வர்.

எனவே, யுத்த நிறுத்தத்துக்கு இசைந்ததன் மூலம் தங்களுடைய புத்திசாலித்தனத்தைக் காட்டிய பாகிஸ்தான் சர்க்கார், தொடர்ந்து நியாயமாக நடந்து கொள்ளுவார்களாயின் ஏன் தகராறு எழப் போகிறது?

எந்தப் பிரதேசமாயினும், அங்குள்ள ஜனங்களின் அபிலாஷைக்கு விரோதமாகவோ அல்லது பலாத்கார முறைகளைக் கைக்கொண்டோ அதன் எதிர்காலத்தை நிர்ணயிக்க இந்திய சர்க்கார் விரும்பவில்லை.

எனினும், ரஸாக்கர்களின் அட்டூழியம் சகிக்க முடியாமல் போனதால்தான், இந்திய சர்க்காருக்கு ஹைதராபாத்தில் தலையிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

காஷ்மீர ஜனங்களின் அபிலாஷையைத் தெரிந்து கொள்ளாமல் பலாத்கார முறைகளால் அதைத் தன் வசப்படுத்திக் கொள்ள பாகிஸ்தான் முற்பட்டதால்தான், இந்திய சர்க்காருக்குக் காஷ்மீரத்தில் தலையிட வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாயிற்று.

● ● ●

யுத்த நிறுத்த சம்பந்தமாக இந்தியா, பாகிஸ்தான் சர்க்கார்கள் ஓர் ஒப்பந்தத்துக்கு வந்து விட்டதால், யுத்தத்தை நிறுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபையின் கட்டளையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கவில்லை.

சபையின் கட்டளை கிடைக்கும் வரையில் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதால் அனாவசியமான உயிர்ச் சேதமும் பொருட் சேதமும் உண்டாகும் என்ற எண்ணத்துடன் இருநாடுகளும் உடனே போரை நிறுத்தியது மற்ற

நாடுகளுக்கு ஓர் உதாரணமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இச் சந்தர்ப்பத்தில் மற்ற நாடுகளில் நடப்பதென்ன என்பதைக் கவனிப்பவர்கள் தான். மேற்படி முன்னுதாரணத்தின் சிறப்பை அறிந்து கொள்வது சாத்தியமாகும்.

பாலஸ்தீனத்தில் நடந்து வரும் போரைத் தீர்த்து மத்தியஸ்தம் செய்வதற்காகச் சென்ற ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதியையே அத்தேசத்தினர் 'க்ளோஸ்' செய்துவிட்டார்கள்.

இந்தோனேஷ்யாவில் போரை நிறுத்தி டச்சுக்காரர்களிடமிருந்து இந்தோனேஷ்யர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காகச் சென்ற ஐ. நா. சபை மத்தியஸ்தர்களின் பாடு இப்போது திண்டாட்டமாகி யிருக்கிறது. இந்தோனேஷ்யர்களுக்குப் பாதுகாப்பு அளிக்குமுன் முதலில் மேற்படி மத்தியஸ்தர்களுக்கு ஐ. நா. சபை பாதுகாப்பு அளித்தாக வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது!

இந்த நிலையில் அந்தச் சபையின் கட்டளையை எதிர்பார்க்காமலேயே இந்தியாவும் பாகிஸ்தானும் முழு மனதுடன் யுத்தத்தை நிறுத்தியது மிகவும் போற்றுதற்குரிய காரியம்.

* * *

இந்தோனேஷ்யாவில் யுத்தத்தை நிறுத்த வேண்டும் என்றும், இந்தோனேஷ்யத் தலைவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்றும் ஐ. நா. சபை டச்சு சர்க்காருக்குக் கட்டளையிட்டது.

டச்சு சர்க்கார் என்ன செய்தனர்? மேலே குறிப்பிட்ட இரண்டு காரியங்களைச் செய்யாததுடன், அந்தச் சபையின் முகத்தில் கரியைப் பூசுவதற்கொப்ப செய்யத் தகாத மற்றொரு காரியத்தையும் செய்யத் துணிந்துவிட்டனர்.

அதாவது ஜாவாவிலுள்ள இந்தோனேஷ்யக் குடியரசுப் பிரதேசங்களைக் கைப்பற்றியது போதாதென்று, சுமத்ராவிலுள்ள குடியரசுப் பிரதேசங்களையும் கைப்பற்ற ஆரம்பித்திருக்கிறார்கள்.

டச்சுக்காரர்களின் அட்டூழியத்தை நிறுத்த ஐ. நா. சபையோ வல்லரசுகளோ ஆதியிலேயே உறுதிகொண்டு காரியங்களைச் செய்திருந்தால், நிலைமை இவ்வளவு மோசமாகியிராது.

ஆனால், உற்ற சமயத்தில் அவை இந்தோனேஷ்யாவுக்கு நீதி வழங்கத் தவறியதுடன், டச்சு சர்க்கார் மனம் நோகாமல் கவைக்குதவாத ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றினர்.

எனினும் இந்தோனேஷ்யக் குடியரசுக்கு அவை நீதி வழங்காவிடினும், ஆசிய நாடுகள் இந்தோனேஷ்யாவுக்கு நீதி வழங்கி, டச்சுக்காரர்களின் ஆதிக்கத்திலிருந்து அதை விடுவிக்க உறுதி கொண்டிருக்கின்றன.

அவ்விஷயமாகத் தகுந்த முறைகளை எடுத்துக் கொள்வதற்காக இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு பல ஆசிய நாடுகளுக்கும் அழைப்புக் கடிதங்கள் அனுப்பியுள்ளார்.

அவரது மகத்தான நன் முயற்சியைப் பல நாடுகளும் உற்சாகத்துடன் ஆதரித்திருப்பது ஏகாதிபத்திய வெறி பிடித்துக் கண்மூடித்தனமாகக் காரியங்களைச் செய்து வரும் டச்சுக்காரர்களைக் கூட கிலி கொள்ளும்படி செய்திருக்கிறது.

அது மாத்திரமா? ஜவாஹர்லால்ஜியின் முயற்சி வெற்றி பெறுமாயின் ஐக்கிய நாடுகள் சபையின் மானம் போய்விடுமே என்று அமெரிக்கா, பிரிட்டன் முதலிய வல்லரசுகளும் கலக்கம் அடைந்திருக்கின்றன.

“உலகில் அமைதியும் உலக நாடுகளுக்குப் பாதுகாப்பும் ஏற்படும் விஷயமாக இந்தியர்கள் தங்களால் இயன்ற சகலவற்றையும் செய்யத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் ஐ. நா. சபையின் பிரதிநிதிகள் கொள்கைகளை விட்டுவிட்டுச் சுயநலனையே முக்கியமாகக் கருதுவார்களாயின், உலக அமைதிக்கு வழி ஏது?” என்று சமீபத்தில் அந்தச் சபையின் கூட்டத்துக்குச் சென்றிருந்த ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி கூறினார்.

எனினும் ஐ. நா. சபையிலுள்ள வல்லரசுகள் சுயநலவாதிகளாக இருக்கின்றன என்று கூறுவதுடன் இந்தியா நின்றுவிட விரும்பவில்லை.

குறிப்பாக ஆசிய நாடுகளுக்குப் பாதுகாப்பு அளிக்க மேற்படி சர்வதேச சபை தவறிவிடுமாயின், அந்தப் பொறுப்பை இந்தியா ஏற்றுக் கொண்டு சர்வதேச நீதியையும் உலக அமைதியையும் நிலைநிறுத்தத் தீவிரமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளத் தயங்காது என்பதையே ஜவாஹர்லால்ஜியின் சீரிய முயற்சி உலகத்துக்குப் பறை சாற்றுகிறது.



ஆடல் பாடல்



"கர்நாடகம்"

சென்னையில் சங்கீதத் திருவிழாக்கள் நடந்து முடிவுற்றன. மூன்று விழாக்களிலும் நடந்த கச்சேரிகளிலிருந்து முக்கியமான பகுதிகளை ரேடியோ நிலையத்தார் ஒலிப்பதிவு செய்து கொண்டுவந்து வானொலியின் மீது ஏவி விட்டார்கள். இதனால் ஏகமாக எல்லாப் பிரபல வித்வான்களின் பாட்டுகளையும் கேட்க முடிந்தது.

ரேடியோ ஒலிப்பதிவு நிகழ்ச்சிகளையெல்லாம் தவறாமல் கேட்டவர்கள் அவ்வளவாக உற்சாக மடைந்திருக்க மாட்டார்கள். கர்நாடக சங்கீதத்தின் துர்க்கதியைக் குறித்து வருத்தமும் அடைந்திருப்பார்கள். பழைய பெரிய வித்வான்களின் சாரீர வசதி குறைந்து வருவதையும் புதிய வித்வான்கள் யாரும் முன்னணிக்கு வாராததையும் எண்ணிச் சோர்வு அடைந்திருப்பார்கள்.

* * *

சங்கீத விழாக்களில் கச்சேரி செய்த வித்வான்களுக்குள்ளே இந்த வருஷத்தில் ஸ்ரீ ஜி. என். பாலசுப்பிரமண்யத்தின் நட்சத்திரம் உச்சத்தை அடைந்திருந்தது. அவர் நிகழ்த்திய கச்சேரிகள் மூன்றும் ஒவ்வொரு விதத்தில் உயர்தரமாக அமைந்தன. சாரீர வசதி சௌகரியமாயிருந்தது. தமிழிசையில் ஆந்தோளிகா — கல்யாணி ராக ஆலாபனங்கள் அபார திறமையைக் காட்டின. கோகலே ஹால் கச்சேரியில் "ஸரஸ ஸாம தான" "சல மேலரா" என்னும் மத்யமகாலக் கீர்த்தனங்கள் செவிக்கு உணவாயிருந்தன. அகாடமி கச்சேரியும் நன்றாயிருந்தது. ஜி. என். பி.க்கு ஒரு 'ஜே!' போடுவோமாக. அவருடைய சங்கீத பாணி மேலும் சிறப்படைய 'வாழி' கூறுவோமாக.

அடுத்தபடியாக, ஸ்ரீ அரியக்குடி ராமாநுஜ அய்யங்கார் அவர்கள், சாரீரத்தில் தளர்ச்சியிருந்தாலும் சங்கீதத்திலுள்ள சிரத்தையினால் அது தெரியாமற்போகும்படி அருமையாகக் கச்சேரி செய்தார். அய்யங்காருக்கு ஒரு 'பல்லாண்டு' கூறி மகிழ்வுறுவோமாக.

ஸ்ரீ செம்பை வைத்தியநாத பாகவதர் மங்காத பெருமை வாய்ந்த குரலில் வெண்கலக் கடையில் யானை புகுந்தது போன்ற கலகலப்புடனும் ஹாஸ்ய இடை நிகழ்ச்சிகளுடனும் பக்க வாத்திய ஜமாக்களை அடிக்கடி உற்சாகப் படுத்திக் கொண்டு ஜமாய்த்து விட்டார்.

ஆலத்தூர் சகோதரர்கள் தானக் கட்டு அமைந்த விறுவிறுப்பான பாணியில் கச்சேரி செய்தார்கள். ஐந்துக்கு மூன்று பழுதில்லை என்று சொல்லலாம்.

மதுரை மணி ஐயர் நமது சங்கீத வித்வான்களுக்குள்ளே சுருதி சுத்தத்தில் கவனம் செலுத்தித் தம்புராவுடன் குரல் இழையும்படி பாடக் கூடியவர். துரதிர்ஷ்ட வசமாக உடல் நலக் குறைவினால் அவருடைய அகாடமி கச்சேரி பெரிதும் பக்க வாத்தியக் கச்சேரியாகவே முடிந்தது.

* * *

'சுருதி சுத்தம்' என்ற விஷயம் சங்கீத வித்வத் சபை சதஸ்ஸில் பிரதம நீதிபதி ராஜமன்னார் நிகழ்த்திய பிரசங்கத்தை நினைவூட்டுகிறது. நமது பிரபல சங்கீத வித்வான்கள் சுருதியோடு குரலை நன்றாகச் சேர்த்துப் பாடுவதில் அதிக கவனம் செலுத்தி அப்பியாசம் செய்ய வேண்டும் என்றும், இந்த விஷயத்தில் வட இந்தியாவின் ஹிந்துஸ்தானி சங்கீத வித்வான்களைப் பின்பற்ற வேண்டுமென்றும் நீதிபதி ராஜமன்னார் கேட்டுக் கொண்டார்.

இந்த யோசனையை ஏறக்குறைய சென்ற பதினைந்து வருஷங்களாக யாராவது ஒருவர் புதிய விஷயம்போல் எடுத்துச் சொல்வது வழக்கமாயிருந்து வருகிறது. எனினும், ஏதாவது பயன் ஏற்பட்டதா என்றால் கையை விரிக்க வேண்டியதுதான்!

—இந்தப்
பூமியில் எவர்க்குமினி அடிமை செய்யோம்!

என்று மகாகவி பாரதியார் பாடியிருக்கிறார் அல்லவா? ஆகையால்,

—இந்தப்
பூமியில் சுருதிக்குமினி அடிமை செய்யோம்!

என்று நம் சங்கீத வித்வான்கள் திடசங்கல்பம் செய்துகொண்டு, "சுருதியின் கொடுங்கோன்மையி லிருந்து விடுபட்டு

ஆனந்த சாகரம் அடைந்து விட்டோம்!" என்று பாடுவது போலத் தோன்றுகிறது.

வட இந்தியாவைச் சேர்ந்த ஹிந்துஸ்தானி சங்கீத வித்வான்கள் சாரீரப் பயிற்சி செய்து சுருதியோடு நன்றாகச் சேர்ந்து பாடுகிறார்கள் என்பதை மியூசிக் அகாடமியார் கேள்விப்பட்டு, நமது சங்கீத வித்வான்களுக்கு அந்த விஷயம் தெரிய வேண்டும் என்பதாக நினைத்து வட இந்திய வித்வான்கள் சிலரை இந்த வருஷத்தில் தருவிக்க ஏற்பாடு செய்தார்கள் போலும்! ஆனால் நமது வித்வான்களின் அதிர்ஷ்டம் குறுக்கே நின்று உஸ்தாத் பயாஸ்கானை வரவொட்டாமல் செய்துவிட்டது. 'ஷெனாய்' வாத்தியத்தில் புகழ் பெற்ற பிஸ்மில்லா சாஹிபுவும் குல்லாப் போட்டு விட்டார். ஆனால் லக்னெளவிலிருந்து பிரபல சங்கீத வித்வான் ஸ்ரீ ரத்தன் ஜங்கார் என்பவர் வந்திருந்தார். அவருடைய கச்சேரி ரேடியோவில் கேட்டது. ஹிந்துஸ்தானி சங்கீத பாணியில் அவர் ராக விஸ்தாரம் செய்த போது 'நாய் நாய் நாய்' என்னும் அபூர்வ ஒலிக்குறியை உபயோகப்படுத்தினார். அந்த 'காய் காய்' சத்தம் காதுக்கு அவ்வளவு நயம் தருவதாய் இல்லாவிட்டாலும் ரத்தன் ஜங்கார் அவர்களின் குரல் தம்புராவின் ஓங்கார சுருதியுடன் ஜம்மென்று சேர்ந்து இணைந்தது அதி ஆச்சரியமாயிருந்தது. நம் வித்வான்களில் சிலர் அதை அவசியம் கேட்டிருப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம். கேட்டிருந்தால் அதனுடைய பலன் அடுத்த வருஷத்து சங்கீத விழாவிலாவது தெரிய வேண்டும்.

*   *   *

சங்கீத விழாவில் அன்றாடம் நடந்த கச்சேரிகளை ரேடியோ நிலையத்தார் மிகச் சுறுசுறுப்புக் காட்டி அன்றன்றைக்கே ஒலிபரப்பி விட்டார்கள். மறுநாளைக்கு ஒலி பரப்பியிருந்தால் பாடிய வித்வான்கள் தங்கள் தங்கள் கச்சேரிகளைத் தாங்களே கேட்டுப் பிரமித்துப் போயிருப்பார்கள். இப்படியெல்லாம் நாம் பாடினோமா என்று அவரவர்களும் மூக்கிலே விரலை வைத்து வியந்திருப்பார்கள். விஷயம் என்னவென்றால், மேடையில் உட்கார்ந்து கச்சேரி செய்யும்போது சபையில் எழும் ஆரவாரமும் பக்க வாத்தியங்களின் ஆர்ப்பாட்டமும் வித்வானுடைய சாரீரத்திலும் சங்கீதத்திலும் உள்ள குறைகளை மறைத்து விடுகின்றன. கொஞ்சம் காது கூர்மையுள்ள வித்வான்கள் காதுக்குள் விரலைச் செலுத்தி அடைத்துக் கொண்டு மன நிம்மதியுடன் பாடுகிறார்கள். ரேடியோவில் ஒலி பரப்பப்படும் போதுதான் அந்தந்த சங்கீதத்தின் உண்மை ஸ்வரூபம் வெளியாகிறது. மோகன ராகம் பேய் பிசாசின் வடிவம் எடுத்து நிற்கிறது. கல்யாணி ராகம் யம கிங்கரனின் பயங்கர ரூபம் கொண்டு தாண்டவம் ஆடுகிறது. சங்கராபரணம் பாம்பாக மாறிச் சீறுகிறது. பைரவி ராகம் மகா கால பைரவரின் உருக்கொண்டு ரஸிகர்களைப் பயமுறுத்துகிறது.

சாதாரணமாகச் சுருதியோடு சேர்ந்து நல்ல குரலோடு பாடுகிறவர்கள் எந்த ஸ்வரத்தில் நிற்கவேண்டும் என்று நினைத்து நிற்கிறார்களோ, அதற்கு அரைக்கால் ஸ்வரம் அல்லது கால் ஸ்வரம் கீழேயே நிற்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது!

வித்வான்களின் சாரீரம் செய்யும் கோளாறு ஒருபுறமிருக்க, ரேடியோ ஒலிப் பதிவு செய்தவர்களும் தங்கள் கைங்கரியத்தைச் செய்தார்கள். சில வித்வான்கள் பாடிய ராக ஆலாபனத்திலும் கீர்த்தனத்திலும் ஒரு பாதி ஒரு சுருதியிலும் இன்னொரு பாதி இன்னொரு சுருதியிலும் கேட்டது ஒலிப்பதிவு செய்த கருவிகளின் கோளாறுகளாய்த்தானிருக்க வேண்டும். இதைக் கொஞ்சம் சீர்திருத்தம் செய்தால் சங்கீத சேவையின் சித்திர வதையை நிறுத்தியதாகும்.

சில பிரபல கர்நாடக சங்கீத வித்வான்களுடைய பாட்டை எலெக்ட்ரிக் ரிக்கார்டிங் செய்ய வேண்டுமென்று அக்காடமியார் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். அவசியம் செய்ய வேண்டியதுதான். அப்படி ஒலிப்பதிவு செய்வதற்கு முன்னால் வித்வான்கள் தங்களுடைய பாட்டை ஒரு தடவை தாங்களே கேட்டுவிட வசதி செய்யப்பட வேண்டும். பிறகு அதிலுள்ள குறைபாடுகளை நீக்கிவிட்டு வித்வான்கள் ஒலிப் பதிவு செய்வது நலமாயிருக்கும்.



ஜி. என். பி.க்கு ஒரு ஜே!

ரேடியோவின் மூலம் தெரிந்த வரையில், அகாடமி சபையில் பாடிய பாட்டெல்லாம் ஆழமான கிணற்றில் போட்ட கல்லைப் போல் எங்கேயோ அதல பாதாளத்தில் போய்க் கொண்டிருந்ததாகத் தோன்றியது. சபையோர் எந்தக் கச்சேரியிலும் எந்த விதமான உற்சாகமும் காட்டியதாகத் தெரியவில்லை.

தமிழிசைக் கச்சேரிகளில் அவ்வப்போது சபையோரின் உற்சாகத்துக்கு அறிகுறிகள் காணப்பட்டன. நிதானமாகக் கரகோஷம் செய்து சபையோர் தங்கள் மகிழ்ச்சியை மிதமாகத் தெரிவித்துக் கொண்டார்கள்.

கோகலே மண்டபத்தில் கூடியிருந்த சபையினர் உற்சாகத்தில் மற்ற இரு சபைகளையும் எளிதில் வென்றார்கள். பாடகர்களோ பக்க வாத்தியக்காரர்களோ கொஞ்சம் தடபுடலாக ஸ்வரம் பாடவேண்டியது தான், சபையோர் பனிப்பழம் உடைப்பது போலச் சடசடவென்று கையைக் கொட்டி தெறித்துத் தள்ளிவிட்டார்கள். கோகலே ஹால் சபை போன்ற உற்சாகமான சபையிலே பாடுவதற்குத்தான் சங்கீத வித்வான்கள் அதிகம் விரும்புவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

• • •


அகாடமியில் பாடப்பட்ட சாஹித்யங்களில் முதலில் தியாகராஜரும் அடுத்தபடி தீக்ஷிதரும் இடம் பெற்றது இயல்புதான். சென்ற இரண்டு மூன்று வருஷங்களாகச் ஸ்வாதித் திருநாள் மேற்படி இருவருடனும் போட்டியிட்டுக் கொண்டிருந்தார். இந்த வருஷம் ஏனோ பின் தங்கி விட்டார். சென்ற வருஷத்தில் அகாடமிக் கச்சேரிகளில் பன்னிரண்டு ஸ்வாதித் திருநாள் சாஹித்யங்கள் பாடப்பட்டன. இந்த வருஷத்தில்—ஐயோ! என் சொல்வது—ஐந்தே ஐந்து ஸ்வாதித் திருநாள் கீர்த்தனங்களுக்குத்தான் அகாடமியில் அரங்கேற இடம் கிடைத்தது. ஸ்வாதித் திருநாளின் தசை இப்படி மாறி வருகிறதன் காரணம் என்னவோ, தெரியவில்லை.

இங்கே, தமிழிசை மகாநாட்டுக் கச்சேரிகளில் புதிய புதிய தமிழ் சாஹித்யங்கள் அமோகமாகப் பாடப்பட்டன. இது விஷயமாக ஓர் எச்சரிக்கை செய்வது அவசியமாயிருக்கிறது. அரசியல் முதலிய சில துறைகளில் புதுமைக்குப் புகழ் அதிகம். ஆனால் சங்கீதம், சிற்பம், சித்திரம் முதலிய கலைகள் பழமையையே பெருமையாகக் கொண்டவை. கலைப் பெருக்கத்தினால் ஒரு நாடு அடையும் சிறப்புக்குப் பண்பாடு என்று பெயர். கலைகள் எவ்வளவுக் கெவ்வளவு நீடித்த காலமாகப் பண்பட்டு வருகின்றனவோ அவ்வளவுக்கு அவை மேன்மையடைகின்றன.

சங்கராபரணம், சாவேரி, காம்போதி, மோகனம் முதலிய பழமையான ராகங்களுக்குள்ள ரக்தியும் சக்தியும் களின காந்தி, மோகனக்கி, ஹம்சவாஹினி, ராவணப்ரியா முதலிய புதிய ராகங்களுக்கு நிச்சயமாய் இருப்பதில்லை.

சாஹித்யத் துறைக்கும் இது ஓரளவு பொருந்தும். எவ்வளவுக்கு ஒரு கீர்த்தனம் பழமையானதாயும் பல பிரபல வித்வான்களால் கையாளப் பட்டதாயும் இருக்கிறதோ, அவ்வளவுக்கு அது பண்பட்டிருக்கும்; ரஸிகர்களுக்கு இன்பத்தை ஊட்டும். புதிய சாஹித்யம் எவ்வளவு உயர்வாயிருந்தாலும் அவ்வளவாக உள்ளத்தைக் கவராது. ஏனெனில் சங்கீதத்துக்கு என்று அமையும் சாஹித்யம் பொருளைக் கொண்டு மட்டும் பெருமை பெறுவதன்று. அதன் ராக வடிவம் பொருத்தமாயும் பாவம் நிறைந்தும் தாளக் கட்டுடனும் அடுக்கடுக்காகச் சங்கதிகள் போட்டு வின்யாசம் செய்யும்படியும் இருக்க வேண்டும். நெடுங் காலமாகப் பிரபல வித்வான்களால் கையாளப்பட்டு வரும் பழைய சாஹித்யங்களில் மேற்கூறிய அம்சங்கள் சேர்ந்திருக்கும்.

தமிழிசை மகாநாட்டில் பாடப்படும் சாஹித்யங்களின் விஷயத்தில் தமிழிசை நிர்வாகிகள் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும் என்று கோருகிறோம். வித்வான்கள் பாடும் கீர்த்தனங்களில் பாதிக்கு மேலே முத்துத் தாண்டவர், அருணாசலக் கவி, கோபாலகிருஷ்ண பாரதி முதலிய பழமையான சாஹித்ய கர்த்தாக்களின் கீர்த்தனங்களாயிருத்தல் நலம். பாக்கி உருப்படிகள் புதிய சாஹித்யங்களாயிருக்கட்டும். அப்படிப் பாடும் புதிய சாஹித்யங்களைச் சீர்தூக்கிப் பார்த்து ராக வடிவமும் தாளக் கட்டும் மற்றும் இன்றியமையாத அம்சங்களும் சரியாயிருக்கின்றனவா என்று நிர்மாணிக்க வேண்டும். பழைய சாஹித்யம் எல்லாம் நல்லது என்றும் சொல்ல முடியாது. "மங்கையே! நீ தூது போடி!" என்பது போன்ற பழைய சாஹித்யமாயிருந்தாலும், "செந்தமிழ்! எழுந்திருடா! சிங்கம்போலப் பாய்ந்திடடா!" என்பது போன்ற புதிய சாஹித்யமாயிருந்தாலும் தகுந்த பரிசீலனை செய்யப்பட வேண்டும். இத்தகைய ஏற்பாடு செய்தால் தமிழிசை இயக்கம் சங்கீதத்தின் தரத்தைக் குறைத்து விடுகிறது என்ற புகாருக்கு இடமில்லாமலிருக்கும்.



60. கோகலே விஜயம்

காந்திஜியும் அவருக்குத் துணை செய்த சத்தியாக்கிரஹிகளும் டால்ஸ்டாய் பண்ணையில் வாழ்ந்து வந்தபோது, சத்தியாக்கிரஹ இயக்கம் சில சமயம் தீவிரமாயும் சில சமயம் சாதாரணமாயும் நடந்து வந்தது. இயக்கம் எப்போது முடிவுறும் என்று யாராலும் ஊகிக்க முடியவில்லை. இதைப் பற்றிக் காந்திஜி கவலைப்படவுமில்லை. சத்தியத்தை உறுதியாகக் கடைப் பிடிப்பது சத்தியாக்கிரஹியின் கடமை. பலனைப் பற்றிச் சத்தியாக்கிரஹி கவலைப்படக் கூடாது. கடவுளுடைய துணையைத் தவிர வேறு யாருடைய உதவியையும் எதிர்பார்க்கவும் கூடாது. இத்தகைய நம்பிக்கையுடன் காந்திஜி இயக்கத்தை நடத்தி வருகையில் உதவி எதிர்பாராத முறையில் கிடைத்தது.

ஸ்ரீ கோபால கிருஷ்ண கோகலேயிடம் மகாத்மா மிக்க மதிப்புக் கொண்டவர் என்பதை முன்னமே பார்த்திருக்கிறோம். ஸ்ரீ கோகலேயுடன் காந்திஜி தொடர்ந்து கடிதப் போக்குவரவு நடத்தி வந்தார். கோகலேயும் தென்னாப்பிரிக்கா இந்தியர்களின் நிலைமையில் கவனம் செலுத்தி வந்தார். 1910-ம் வருஷம் பிப்ரவரி 25உ இந்தியா சட்ட சபையில் ஸ்ரீ கோகலே நேட்டாலுக்கு ஒப்பந்தக் கூலிகள் அனுப்புவதை நிறுத்த வேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினார்.

1911-ம் வருஷத்தில் ஸ்ரீ கோகலே இங்கிலாந்துக்குச் சென்றார். அவர் தென்னாப்பிரிக்காவுக்கு ஒருமுறை விஜயம் செய்து நிலைமையை நேரில் தெரிந்துகொள்ள வேண்டும் என்று காந்திஜி அடிக்கடி அவருக்குக் கடிதம் எழுதியிருந்தார். அதன்படி ஸ்ரீ கோகலே இப்போது இங்கிலாந்திலிருந்து தென்னாப்பிரிக்கா செல்வது என்று உத்தேசித்து, இந்தியா மந்திரியிடம் தம் விருப்பத்தைத் தெரிவித்தார். இந்தியா மந்திரி ஆட்சேபம் சொல்லாமல் அனுமதி கொடுத்ததும் ஸ்ரீ கோகலே காந்திஜிக்குத் தகவல் தெரிவித்தார். ஆறு வார காலம் தென்னாப்பிரிக்காவில் தங்கலாம் என்றும் அதற்கு ஒரு சுற்றுப் பிரயாணத் திட்டம் தயாரிக்கும்படியும் காந்திஜியைக் கேட்டுக் கொண்டார்.

இந்தக் கடிதத்தினால் காந்திஜியும் மற்ற இந்தியர்களும் அடைந்த குதூகலத்துக்கு அளவில்லை. இதுவரை இந்தியாவிலிருந்து எந்தத் தலைவரும் தென்னாப்பிரிக்காவுக்கு வந்தது கிடையாது. ஆகையால் கோகலேயின் வரவு எவ்வளவு முக்கியமானது என்பதை உணர்ந்து அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கவும் தென்னாப்பிரிக்காவின் முக்கிய நகரங்களுக்கெல்லாம் அவரை அழைத்துச் செல்லவும் தீர்மானித்தார்கள். சத்தியாக்கிரஹிகள் சத்தியாக்கிரஹத்தில் ஈடுபடாத இந்தியர்கள் எல்லாருமே வரவேற்பு முயற்சிகளில் முனைந்தார்கள். வரவேற்புக் கமிட்டி-யில் இருக்கும்படி ஐரோப்பியரும் கேட்டுக் கொள்ளப்பட்டனர். பலர் அதற்கு இணங்கினார்கள். ஒவ்வொரு முக்கிய நகரிலும் பிரதான டவுன் ஹால் மண்டபத்தில் கூட்டம் நடத்துவது என்றும், கூட்டத்துக்குத் தலைமை வகிக்க அந்தந்த நகரத்தின் மேயரை அழைப்பது என்றும்

முடிவு செய்யப்பட்டது. முக்கியமான ஒவ்வொரு ரயில்வே ஸ்டேஷனையும் அலங்கரிக்கத் தீர்மானிக்கப்பட்டது. சாதாரணமாக இதற்கு அநுமதி கொடுப்பதில்லை. ஆயினும் இந்தியர்களுடைய மகத்தான உற்சாகத்தைப் பார்த்துவிட்டு ரயில்வே அதிகாரிகள் உத்தரவு கொடுத்து விட்டார்கள். ஜோகானிஸ்பர்க் ரயில்வே ஸ்டேஷனை அலங்காரம் செய்யவும், ஸ்டேஷனில் ஒரு பெரிய வரவேற்பு வளைவு நிர்மாணிக்கவும் பதினைந்து தினங்கள் பிடித்தன. இதிலிருந்து வரவேற்பு ஏற்பாடுகள் பிரமாதமாகச் செய்யப்பட்டன என்பதை அறியலாம்.



அங்கே இங்கிலாந்திலிருந்து கோகலே தென்னாப்பிரிக்கா பிரயாணத்துக்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்து கொண்டிருந்தார். இந்தியா மந்திரியின் காரியாலயத்தினர் தென்னாப்பிரிக்கா சர்க்காருக்கு பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் ஸ்ரீ கோகலே எவ்வளவு உன்னதமான பதவி வகிக்கிறவர் என்று தெரிவித்திருந்தனர். ஆயினும் ஆரம்பத்திலேயே பிரயாணத்துக்கு ஒரு முட்டுக்கட்டை ஏற்பட்டது. தென்னாப்பிரிக்கா செல்லும் கப்பலில் வசதியான தனி அறை ஒன்று கோகலேக்கு வேண்டும் என்று கேட்கப்பட்டது. "கிடையாது" என்று கப்பல் கம்பெனியின் பதில் வந்தது. இதையறிந்த கோகலேயின் நண்பர் ஒருவர் இந்தியா மந்திரி காரியாலயத்துக்கு விஷயத்தைத் தெரியப்படுத்தினார். மேற்படி காரியாலயத்திலிருந்து ஒரு கடிதம் கப்பல் கம்பெனிக்குப் போயிற்று. அவ்வளவுதான்; கோகலே கேட்டபடி தனி அறை கிடைத்தது. கப்பல் தலைவனுக்குக் கோகலேயைச் சரியான மரியாதையுடன் நடத்தும்படியாகக் கட்டளையும் பிறந்தது.

தென்னாப்பிரிக்காவின் மத்திய சர்க்காரும் கோகலேக்கு மரியாதை செய்யத் தீர்மானித்தார்கள். பிரிடோரியாவில் இருக்கும்போது அரசாங்க விருந்தாளியாக அவர் தங்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அரசாங்கத்துக்காக ஏற்பட்ட ரயில்வே ஸலூன் ஒன்றை அவருடைய பிரயாணத்துக்காகக் கொடுத்தார்கள். சர்க்கார் கொடுக்கும் இந்த வசதிகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று காந்திஜி வற்புறுத்தியதன் பேரில் கோகலே அதற்கு இசைந்தார்.

1912-ம் வருஷம் அக்டோபர் 22உ கோகலே தென்னாப்பிரிக்கா சேர்ந்து கேப்டவுன் துறைமுகத்தில் கப்பலிலிருந்து இறங்கினார். கேப்டவுன் நகரத்தில் பெரிய பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. செனட்டர் ஷிரீன் என்பவர் தலைமை வகித்து ஸ்ரீ கோகலேயை வரவேற்றுப் பேசினார். ஸ்ரீ கோகலே இந்த முதல் பொதுக் கூட்டத்தில் உறுதியாகவும் நியாயமாகவும் நிதானமாகவும் பேசியது இந்தியர்கள் — ஐரோப்பியர்கள் எல்லாருடைய மனதையும் ஒருங்கே கவர்ந்தது.

கேப்டவுனிலிருந்து ஜோகானிஸ்பர்க் இரண்டு நாள் பிரயாணம். வழியில் இந்தியர்கள் வசித்த பட்டணங்களில் எல்லாம் கோகலே இறங்கி அங்கங்கே உபசாரங்களைப் பெற்றுக்கொண்டு ஸ்பெஷல் ரயிலில் ஜோகானிஸ்பர்க் வந்து சேர்ந்தார். ஜோகானிஸ்பர்க்கில் நடந்த வரவேற்பு பிரமாதமாயிருந்தது. முதல் உபசாரக் கூட்டம் ஸ்டேஷனிலேயே நடைபெற்றது. ரொடீஷியாவில் உற்பத்தியாகும் உயர்ந்த தேக்கு மரச் சட்டத்தில் தங்கத் தகடு அடித்து அதில் உபசாரப் பத்திரம் எழுதி கோகலேக்கு அளித்தார்கள். அந்தத் தகடு இந்தியாவும் இலங்கையும் சேர்ந்த தேச படத்தின் வடிவம் பெற்றிருந்தது.

ஆரம்ப உபசாரக் கூட்டத்துக்குப் பிறகு கோகலே தனித்தனியாகப் பல பிரமுகர்களைப் பார்த்தார். பலரும் அவரை வந்து பார்த்தார்கள். ஐரோப்பியர்களும் இந்தியர்களுமாக 400 பேருக்கு ஒரு பெரிய விருந்து நடந்தது. இந்த விருந்திலேதான் கோகலே தென்னாப்பிரிக்கா இந்தியர்களின் நிலைமையைப் பற்றித் தமது முக்கியமான பிரசங்கத்தைச் செய்தார். இதைத் தவிர இந்தியர்கள் மட்டும் அடங்கிய பொதுக் கூட்டம் ஒன்று நடந்தது. இதுவரையில் ஸ்ரீ கோகலே ஆங்கிலத்திலேதான் பேசி வந்தார். ஆங்கில பாஷையில் கோகலே பெரிய நிபுணர். ஆனால் இந்த முக்கியமான இந்தியர்களின் கூட்டத்தில் ஸ்ரீ கோகலே அவருடைய தாய் பாஷையாகிய மராத்தியில் பேச வேண்டும் என்று காந்திஜி கேட்டுக் கொண்டார். அதைத் தாம் மொழி

யில் மொழிபெயர்த்துச் சொல்வதாகவும் கூறினார். அந்தக் காலத்தில் அரசியலில் ஈடுபட்ட இந்தியர்கள் ஆங்கில பாஷையில் பேசுவது வழக்கமாயிருந்தது. ஆங்கில பாஷையிலேதான் அவர்களுடைய வாக்கு வன்மை நன்றாகப் பிரகாசிக்கும். ஆகையால் காந்திஜியின் யோசனையைக் கோகலே ஆட்சேபித்தார். காந்திஜியும் பிடிவாதமாயிருந்தார். கடைசியாக ஸ்ரீ கோகலே, "இங்கே நான் உங்களுக்காகவே வந்திருக்கிறேன். ஆகையால் உங்கள் இஷ்டப்படி நடக்கவேண்டியதுதான்!" என்று சொல்லி மராத்தி பாஷையில் பேசினார்.

ஜோகானிஸ்பர்க் நகரிலிருந்து ஸ்ரீ கோகலே பிரிட்டோரியாவுக்குப் போனார். பிரிட்டோரியாவில் ஜெனரல் போதா, ஜெனரல் ஸ்மட்ஸ் முதலிய அரசாங்க மந்திரிகளை ஸ்ரீ கோகலே சந்திப்பதாக ஏற்பாடு ஆகியிருந்தது. கோகலே மந்திரிகளைச் சந்திக்கப் போகும்போது தனியாகவே போக வேண்டுமென்று காந்திஜி கருதினார். தாம் பின்னோடு சென்றால் காரியத்துக்கு இடையூறாயிருக்குமென்று சொன்னார். மந்திரிகள் காந்திஜி மீது கொண்டிருந்த கோபத்தினால் கோகலேயின் பேச்சுக்குச் சரியானபடி செவி கொடுக்காமல் போகலாமல்லவா?

அதே சமயத்தில் கோகலே தனியாக மந்திரிகளைச் சந்திப்பதில் சில கஷ்டங்களும் இருந்தன. இவருக்குத் தெரிந்திராத ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றி அவர்கள் பிரஸ்தாபிக்கலாம். அதற்கு இவர் சரியான பதில் சொல்ல முடியாமற் போகலாம். மேலும் சர்க்கார் மந்திரிகள் ஏதாவது சில பிரேரணைகளைச் சொல்லி அவற்றை இந்தியரின் சார்பாக ஒப்புக் கொள்ளும்படி கேட்டால், ஸ்ரீ கோகலே உடனே பதில் சொல்லுவது சாத்தியமாயிருக்குமா?

இந்தத் தடங்கல்களையெல்லாம் போக்குவதற்காக, காந்திஜி தென்னாப்பிரிக்கா நிலைமை பற்றிச் சாங்கோபாங்கமாக ஓர் அறிக்கை தயாரிப்பதென்றும், அதை ஸ்ரீ கோகலே நன்றாகப் படித்துக் கொண்டு போவதென்றும் ஏற்பாடாயிற்று. காந்திஜி அறிக்கை தயாரித்தார். கோகலே அதைப் படித்தார்; ஆனால் திருப்தியடையவில்லை. விஷயங்களைத் தெளிவு செய்து கொள்ளப் பல கேள்விகள் கேட்டார். காந்திஜி பதில் சொன்னார். இவ்விதமாக, கோகலே மந்திரிகளைப் பார்ப்பதற்காகக் குறிப்பிட்ட தினத்துக்கு முதல் நாள் இரவு முழுதும் அவர்களுக்குள் பேச்சு நடந்து கொண்டிருந்தது. ஒரு நிமிஷங்கூட இருவரும் தூங்கவில்லை!

குறிப்பிட்ட சமயத்தில் கோகலே தென்னாப்பிரிக்கா மந்திரிகளைச் சந்தித்தார். சுமார் இரண்டு மணி நேரம் பேசினார். பேசிவிட்டுத் திரும்பி வந்ததும் சந்தோஷமான செய்தியைச் சொன்னார்.

"எல்லாம் முடிவாகிவிட்டது. கறுப்புச் சட்டத்தை எடுத்து விடுவார்கள். குடியேற்றச் சட்டத்தில் நிறம் பற்றிய தடையை நீக்கி விடுவார்கள். மூன்று பவுன் தலை வரியும் எடுக்கப்பட்டுவிடும். ஆகையால் நீங்கள் இனிமேல் இங்கே இருக்க வேண்டிய அவசியமே இல்லை. ஒரு வருஷத்துக்குள் இந்தியாவுக்குத் திரும்பி வந்துவிட வேண்டும்!" என்று சொன்னார் கோகலே.

செய்தி சந்தோஷமானதுதான். ஆனால் காந்திஜிக்கு நம்பிக்கை மட்டும் உண்டாகவில்லை. அவர் கூறியதாவது:—

"நீங்கள் உறுதியாகச் சொல்கிறீர்கள். ஆயினும் எனக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. இந்தத் தேசத்து மந்திரிகளை நான் அறிந்திருப்பது போல நீங்கள் அறியவில்லையல்லவா? ஏற்கெனவே இவ்வாறு அவர்க

'கல்கி' ஆசிரியர் எழுதிய
சரித்திர காலத்தைச் சித்திரிக்கும்
மகோன்னத நவீனங்கள்

சிவகாமியின் சபதம்

மலிவுப் பதிப்பு ரு. 9—0—0
பரிசுப் பதிப்பு ரு. 15-0—0

பார்த்திபன் கனவு

விலை ரு. 6—8—0

★

கவி ரவீந்திரநாத் டாகூர் எழுதிய

மகாத்மா காந்தி

விலை ரு. 0—12—0

—— கிடைக்குமிடம் : ——

மானேஜர், "கல்கி"
கீழ்ப்பாக்கம் :: சென்னை

னுடைய பேச்சைப் பலமுறை நம்பி ஏமாற்றமடைந்திருக்கிறேன். ஆயினும் நாங்கள் மந்திரிகளிடம் பெற்றுக்கொண்டு வந்த வாக்குறுதி மிகவும் முக்கியமானது என்பதில் சந்தேகம் இல்லை. அவர்கள் அதன்படி செய்யாவிட்டால் எங்களுடைய போராட்டத்துக்கு இன்னும் பலம் அதிகம் ஏற்படும். நாங்கள் பெற்று வந்த வாக்குறுதி எங்களுடைய போராட்டத்தின் நியாயத்தில் எல்லோருக்கு அதிக நம்பிக்கையை ஊட்டும். ஒரு வருஷத்துக்குள் நான் திரும்ப முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. நானும் என் சகாக்களும் இன்னும் பல முறை சிறை புக நேருமென்று கருதுகிறேன்."

இதற்குக் கோகலே, "நீங்கள் பயப்படுகிறபடி ஒருநாளும் நடவாது. கறுப்புச் சட்டத்தை ரத்துச் செய்து விடுவதாகவும் மூன்று பவுன் தலைவரியை எடுத்து விடுவதாகவும் ஜெனரல் போதா எனக்கு வாக்குக் கொடுத்திருக்கிறார். அதை நிறைவேற்றியே தீருவார். நீங்கள் சால்ஜாப்புச் சொல்லாமல் ஒரு வருஷத்துக்குள் இந்தியாவுக்குத் திரும்பி வந்துவிட வேண்டியது தான்!" என்று சொன்னார்.

பின்னர் கோகலே டர்பன், மேரிட்ஸ்பர்க் முதலிய இடங்களுக்குச் சென்றார். அங்கேயெல்லாம் அவருக்கு நடந்த உபசரிப்புகளிலும் விருந்துகளிலும் ஐரோப்பியர்கள் தாராளமாய்க் கலந்து கொண்டார்கள். இவ்விதம் தென்னாப்பிரிக்கா இந்தியர்களுடைய உள்ளத்தையும் ஐரோப்பியர்களின் இதயத்தையும் வெற்றி கொண்ட பிறகு 1912-ம் வருஷம் நவம்பர் மாதம் 17-ந் தேதி ஸ்ரீ கோகலே தாய்நாட்டுக்குக் கப்பல் ஏறினார். அவரை வழி அனுப்புவதற்குக் காந்திஜியும் மிஸ்டர் காலன்பாக்கும் கப்பல் ஏறி ஸான்ஸிபார் வரையில் சென்றார்கள். கப்பலில் இந்தியாவின் அரசியல் நிலைமையைப் பற்றியும் இந்திய அரசியல் தலைவர்களின் குணதிசயங்களைப் பற்றியும் கோகலே காந்திக்கு விஸ்தாரமாய் எடுத்துச் சொன்னார். கோகலே கூறிய ஒவ்வொரு வார்த்தையும் உண்மையாகவும் தேசபக்தி ததும்பியும் இருந்ததைக் கண்டு காந்திஜி வியந்தார். கோகலேயிடம் காந்திஜிக்கு இருந்த அன்பும் பக்தியும் மேலும் அதிகமாயின. ஸான்ஸிபாரில் கோகலேயுடன் பிரிய முடியாமல் பிரிந்து வருத்தத்துடன் விடை பெற்றுக்கொண்டு காந்தி மகான் தென்னாப்பிரிக்காவுக்குத் திரும்பினார்.

அடித்தது யார்?

"காக்கா"

கேசவனுக்கு வயது பதின்மூன்றுகூட ஆகவில்லை; ஆனாலும் உலகம் தெரிந்தவன் போல அவன் நடந்து கொள்வான். ரொம்பவும் குஷியான பேர்வழி; விஷமக்காரன். அவனிடம் ஒரு துர்க்குணம்; அவன் தன் அப்பாவுக்குத் தெரியாமல் சங்கிலித் தொடர் போல விடாமல் ஸிகரெட் பிடித்துக் கொண்டே இருப்பான்.

அடாடா! அந்த ஸிகரெட்தான் அவனிடம் என்ன பாடு படும்! அதைப் பற்ற வைத்து ஓர் இழுப்பு இழுத்துவிட்டு, அவன் ரயில் என்ஜின் போல மூக்கால் குபுகுபு வென்று புகை விடுவான். இன்னும் அந்தப் புகையில் அவன் எவ்வளவோ ஜால வித்தைகள் எல்லாம் செய்வான். வளையம் வளையமாக ஒன்றின் பின்னால் ஒன்று 'க்யூ' வரிசையில் போவது போலப் புகை வளையங்களை அணி அணியாகப் பறக்கவிடுவான். "கண்களின் வழியாகப் புகை விடுகிறேன் பார்!" என்று தன் நண்பர்களிடம் சொல்லி, அவர்கள் தன்னுடைய கண்களையே பார்த்துக் கொண்டிருக்கும்படிச் செய்வான். அவர்களும் கேசவனுடைய வார்த்தையை நம்பி அவனுடைய கண்களையே பார்த்துக் கொண்டிருப்பார்கள். அந்தச் சமயத்தில் ஸிகரெட்டின் நெருப்பால் அவர்களுடைய தொடையில் 'சுரீர்' என்று சுட்டுவிடுவான். அவர்கள் பதறிப் போய்ப் பார்க்கும்போது, "கண்ணிலிருந்து புகை வந்ததைப் பார்த்தீர்களா?" என்று கேட்டுவிட்டுச் சிரிப்பான்!

கேசவனுடைய உற்சாகத்தையும், சும்மாளத்தையும் சகிக்காமல்தானோ என்னவோ, சென்னை சர்க்கார் 'பதினாறு வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள் புகை குடிக்கக் கூடாது' என்று சட்டம் போடப் போவதாக அறிவித்தனர். அந்தச் சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்பே, அதற்கேற்றபடி தன்னைத் தயார் செய்து கொள்வதற்காகக் கேசவன் ஒருவரும் இல்லாத இடமாகப் பார்த்து இரகசியமாக ஸிகரெட் குடித்து வந்தான்.

ஒரு நாள் ஒதுப்புறமான ஓர் இடமாகப் பார்த்து ஒருவருடைய கண்ணிலும் படாமல் அவன் ஸிகரெட்டைப் பற்ற வைத்தான். ஸிகரெட்டின் புகை காற்றிலே மிதந்து செல்வதைப் பார்க்கும்போது அவனை அறியாமலே அவன் உள்ளம் சந்தோஷத்தில் மூழ்கியது. ஸிகரெட்டின் நீளம் குறைந்து முடியப் போகும் தருணம், 'படீர்' என்று யாரோ அவன் தலையில் அடித்தது போலிருந்தது.

"ஆகா! அப்பாவிடம் அகப்பட்டுக் கொண்டோம் போலிருக்கிறது" என்று நினைத்துக் கேசவன் சுற்றுமுற்றும் பார்த்தான். ஒருவரையும் காணவில்லை.

ஆனால் அவனுக்கு எதிரில் அறுந்து விழுந்த ஒரு போர்டு கிடந்தது. தன்னைப் பயமுறுத்திய போர்டைத் தான் ஆவலாக உடைத்து எறியவேண்டும் என்ற ஆத்திரத்தோடு அவன் அந்தப் போர்டை எடுத்தான். அதில் பின் வருமாறு கொட்டை எழுத்தில் எழுதியிருந்தது :—

"ஸிகரெட் குடிக்காதே !"



பத்தாம் அத்தியாயம்

ஒரே வழிதான்!

காலடிச் சத்தம் வெகு சமீபத்தில் வந்த பிறகும் சீதா திரும்பிப் பார்க்கவில்லை. எதற்காகத் திரும்பிப் பார்க்க வேண்டும்? தான் என்ன செய்ய எண்ணியிருந்தாள் என்பதை அவர் தெரிந்து கொள்ளட்டும்; அருகில் வந்து கைத்துப்பாக்கியைப் பார்த்துத் திடுக்கிடட்டும்; தன்னை ஏதாவது கேட்கட்டும்; அதற்குப் பிறகுதான் பதில் சொல்லிக் கொள்ளலாம்.

வந்த ஆசாமி சீதாவுக்குப் பின்புறம் வந்து சமீபமாக நின்றான். சட்டென்று கையை நீட்டிக் கைத்துப்பாக்கியை எடுத்துக் கொண்டான். பிறகு, "சீதா!" என்றான்.

குரல் ராகவனுடைய குரல் அல்ல என்பதை அறிந்ததும் சீதா வியப்புடன் திரும்பிப் பார்த்தாள். வந்திருப்பவன் சூரியா என்பதைத் தெரிந்து கொண்டாள். இதனால் அவள் மனதில் அளவற்ற ஏமாற்றம் உண்டாயிற்று. அந்த நிமிஷத்தில், தான் உயிரை விட்டுவிடுவது என்கிற தீர்மானத்தைச் சீதா மாற்றிக் கொண்டாள். உயிரோடு எவ்வளவு நாள் இருக்கலாமோ இருந்து, ராகவனுக்கு எவ்வளவு மனக்கிலேசம் அளிக்கலாமோ அவ்வளவும் அளிக்க வேண்டுமென்று எண்ணினாள். இந்த நோக்கம் நிறைவேறுவதற்குச் சூரியாவின் உதவி தனக்குத் தேவை. அதற்குத் தகுந்தபடி அவனிடம் நடந்து கொள்ள வேண்டும்.

"அம்மாஞ்சி! நீயா? நல்ல சமயத்தில்தான் வந்தாய்; வா!" என்றாள்.

"அப்படி ஒன்றும் நல்ல சமயமாக எனக்குத் தோன்றவில்லையே! நீ செய்ய உத்தேசித்திருந்த காரியத்துக்குத் தடங்கலாக அல்லவா நான் வந்து விட்டதாகத் தோன்றுகிறது?"

"என்ன காரியம் நான் செய்ய உத்தேசித்ததாக நீ எண்ணினாய்!"

"நள்ளிரவில் கைத் துப்பாக்கியை ரவை போட்டுச் சுடுவதற்குத் தயாராக வைத்துக் கொண்டு கண்ணீர் விட்டுக் கொண்டு உட்கார்ந்திருப்பது எதற்காக இருக்கும்?"

"ஏன்? திருடன் வந்தால் சுடுவதற்குத் தயாராக வைத்திருக்கலாம்."

"புது டில்லியில் திருடன் அவ்வளவு சுலபமாய் வந்துவிடுவானா? வாசற் காவற்காரன் வேறு இருக்கிறானே?"

"காவற்காரன் இருந்தால் உன்னை எப்படி உள்ளே விட்டான்?"

"அவன் நன்றாய்த் தூங்கிக்கொண்டிருக்கிறான். நான் சத்தம் செய்யாமல் உள்ளே வந்து விட்டேன்."

"ஆம்; இந்த ஊர் வேலைக்காரர்களே இப்படித்தான். ஓயாமல் தூங்கி

விழுவார்கள்......பின்னே, கைத் துப்பாக்கி எதற்காக வைத்திருக்கிறேன் என்று நினைத்தாய்? என்னைச் சுட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொள்வதற்காக என்று நினைத்தாயா?"

"அப்படி யில்லை யென்றால் மிக்க சந்தோஷமடைவேன். உன் முகத்தையும் கண்ணீர் ததும்பும் கண்களையும் பார்த்தால் அப்படித் தோன்றுகிறது. எனக்கு வந்த கடிதமும் அவ்விதம் எண்ணும்படி செய்தது."

"கடிதம் யார் எழுதியது?"

"அதைப்பற்றி உனக்கு என்ன கவலை, சீதா! யாரோ எழுதினதாக வைத்துக் கொள்ளலாம்."

"கடிதத்தில் என்ன எழுதி யிருந்தது? அதையாவது சொல்லலாமா?"

"நீ மிகவும் மனக்கஷ்டத்துக்கு உள்ளாகியிருப்பதாக எழுதியிருந்தது. என்ன மனக்கஷ்டம் என்பதை நேரில் தெரிந்து கொள்ளலாம் என்றுதான் வந்தேன். உண்மையில் உனக்குக் கஷ்டம் ஒன்றுமில்லையா, அத்தங்கா! அப்படியானால், என் கவலை தீர்ந்தது. நான் உடனே திரும்பிப் போய் என்னுடைய வேலையைப் பார்ப்பேன்."

"சூரியா! உன்னிடம் உண்மையை மறைப்பதில் என்ன பயன்? உன்னுடைய உதவி எனக்குத் தேவையாயிருக்கிறது. அதனால்தான் 'நல்ல சமயத்தில் வந்தாய்' என்றேன். நான் சுட்டுக்கொண்டு சாகத் தயாராயிருந்தேன், சூரியா! ஆனால் சாவதற்கு முன்னால் என் ஆசைக் கண்மணிக்கு ஒரு கடிதம் எழுதி வைக்கவேண்டும் என்று நினைத்தேன். ஒன்றும் எழுதவே தோன்றவில்லை. உன்னிடம் சொன்னால் நீ நேரிலே போய்த் தெரிவித்துவிடுவாயல்லவா? மதராஸுக்கு எப்போதாவது போகாமலா இருக்கப் போகிறாய்?" என்று சீதா பரிதாபம் நிறைந்த குரலில் கூறினாள்.

"அத்தங்கா! கொஞ்ச நாளைக்கு முன்பு நான் மதராஸுக்கும் தேவபட்டணத்துக்கும் போயிருந்தேன்."

"அப்படியா? மதராஸில் வஸந்தியைப் பார்த்தாயா!" என்று சீதா பரபரப்புடன் கேட்டாள்.

"பார்த்தேன். அப்போதே உன் மாமனார் மாமியாரையும் பார்த்தேன்."

"வஸந்தி எப்படி யிருக்கிறாள்? உன்னிடம் ஏதாவது பேசினாளா?"

"உடம்பு நன்றாக இருக்கிறாள். ஆனால் குழந்தையின் மனம் குன்றிப் போயிருக்கிறது; அப்பா அம்மாவைப் பார்ப்பதற்கு ஏங்கிப் போயிருக்கிறாள். அத்தங்கா! அப்படிப்பட்ட குழந்தையை விட்டு விட்டுச் சுட்டுக் கொண்டு சாவதற்கு உனக்கு எப்படி மனம் வந்தது என்று நினைத்தால் எனக்கு ஆச்சரியமா யிருக்கிறது."

"இதிலிருந்தே என்னுடைய நிலைமையை நீ தெரிந்து கொள்ளலாமே, சூரியா! பெற்ற பெண்ணைத் தூர தேசத்துக்கு அனுப்பிவிட்டு அவளைப் பார்க்காமல் சாவதற்கு இலேசில் மனம் துணியுமா? அப்படிப்பட்ட நரக வேதனையை வாழ்க்கையில் நான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்."

"அத்தங்கா! நரக வேதனையும் சொர்க்க சுகமும் நாமே செய்து கொள்ளுவதுதான். 'கடவுளுடைய ராஜ்யம் உனக்குள்ளே' என்பதை நீ கேட்ட தில்லையா?"

"அந்த வேதாந்த மெல்லாம் என் விஷயத்தில் இனிமேல் உபயோகமில்லை, அம்மாஞ்சி! என்னுடைய நரகத்தை நானே சிருஷ்டி செய்து கொள்ளவும் இல்லை. நீங்கள் எல்லாரும் சேர்ந்துதான் என்னை இந்த நரகத்திலே தள்ளினீர்கள். இவரை நான் கலியாணம் செய்து கொண்டது பெரும் பிசகு, சூரியா! எங்கள் இருவருக்கும் கொஞ்சம்கூடப் பொருத்தமில்லை. இவர் யாராவது ஒரு வெள்ளைக்காரச்சியையோ பார்ஸிக்காரியையோ கலியாணம் செய்து கொண்டிருக்க வேண்டும். உன்னுடைய சிநேகிதி தாரிணி இருக்கிறாளே, அவளைப் போல ஒருத்தியையாவது ......"

"பிறரைப் பற்றி நாம் எதற்காகப் பேசவேண்டும், சீதா!"

"பேசாமல் என்ன செய்வது? என்னுடைய வழிக்கு அவர்கள் வராமலிருந்தால் நானும் பேச வேண்டியதில்லை. அந்தத் தாரிணியும் என் மாமியாரும் சேர்ந்து எனக்கு விஷம் கொடுத்துக் கொல்லப் பார்த்தார்கள், சூரியா! அதுவும் நான் படுத்த படுக்கையாய்க் கிடந்தபோது! என் மாமியாரைப் பற்றி எவ்வளவோ நான் எண்ணியிருந்தேன். அவள் எப்போப்

பட்ட ராட்சஸி என்று கொஞ்ச நாளைக்கு முன்புதான் தெரிந்தது.''

"உனக்கு என்ன பைத்தியம் பிடித்துவிட்டதா, சீதா! நீ சாகக் கிடந்தபோது அவர்கள் இருவரும் உனக்கு இரவு பகல் பணிவிடை செய்து உன்னைக் காப்பாற்றினார்கள். அவர்களைப் பற்றி இவ்வளவு கொடுமையாகப் பேசுகிறாயே!''

"அவர்கள் பணிவிடை செய்து என்னைக் காப்பாற்றியது உனக்கு எப்படித் தெரியும்? அவர்கள் சொல்லித்தானே தெரியும்? நான் அவ்வளவு அறிவற்றவள் அல்ல. ஒரு நாள் இரவு தாரிணியும் மாமியாரும் கூடிக் கூடி இரகசியம் பேசிக்கொண்டிருந்தார்கள். பிறகு, டாக்டர் வழக்கமாகக் கொடுத்த மருந்தில் இன்னொரு வெள்ளைப் பவுடரைத் தாரிணி கலந்து கொடுத்தாள். நான் பார்க்கவில்லையென்று நினைத்துக்கொண்டு செய்தாள். எனக்கும் அப்போது உண்மை தெரியாது. மருந்தைச் சாப்பிட்டு விட்டேன். சற்று நேரத்துக்கெல்லாம் கண்ணைச் சுற்றிக்கொண்டு மயக்கமாய் வந்தது. கொடுத்த விஷம் போதவில்லை போலிருக்கிறது. காலையில் எப்படியோ பிழைத்து எழுந்தேன். அதுமுதல் ஜாக்கிரதையாகிவிட்டேன். தாரிணி மருந்து கலந்து கொடுத்தால் அதைச் சாப்பிடுவதாக ஜாடை செய்து எச்சில் பாத்திரத்தில் கொட்டி விடுவேன். அப்போது இன்னும் என் மனதில் கொஞ்சம் சபல மிருந்தது. இப்போது அதுவும் போய்விட்டது. சூரியா! துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு நான் சாவது உனக்குப் பிடிக்காவிட்டால் தாரிணியைக் கேட்டுக் கொஞ்சம் விஷம் வாங்கிக் கொண்டு வந்து கொடு!''

"அத்தங்கா! உண்மையிலேயே உனக்குப் பைத்தியந்தான் பிடித்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் இவ்வளவு படுபாதகமான வார்த்தையைச் சொல்லி யிருக்க மாட்டாய். உனக்கு சுரமா யிருந்தபோது தூக்கமில்லாமல் கஷ்டப்படுகிறாயே என்பதற்காக அவர்கள் யோசித்துத் தூக்க மருந்து கொடுத்திருப்பார்கள்......''

"ஆமாம்; ஒரேயடியாய்த் தூங்குவதற்குத்தான் மருந்து கொடுத்தார்கள். ஆனால் அதற்கு வேண்டிய அளவு கொடுக்கவில்லை. ஆகையால் விழித்துக்கொண்டு விட்டேன்!''

"அப்படி உனக்குச் சந்தேகமா யிருந்திருந்தால் உடனே உன் புருஷனிடம் சொல்லி யிருக்கலாமே?''

"சொல்லி யிருக்கலாம்; ஆனால் அவர் நம்பி யிருப்பாரா? உன் அருமை அத்தங்காவின் பேச்சை நீயே நம்பவில்லையே?—சூரியா! திரும்பித் திரும்பிப் பேசி என்ன பயன்? நான் அநாதை; திக்கற்றவள்; என் பேச்சை யாரும் நம்பப் போவதில்லை. நீ எதற்காக வந்தாய்? உன் காரியத்தைப் பார்த்துக்கொண்டு நீ போ!'' என்று சீதா சொல்லிக் கலகலவென்று கண்ணீர் உதிர்த்தாள்.

"என் காரியத்தைப் பார்த்துக் கொண்டு போகிறதா யிருந்தால் நான் எவ்வளவோ முக்கியமான காரியங்களை விட்டுவிட்டு ஆயிரம் மைல் பிரயாணம் செய்து வந்திருக்கமாட்டேன். என்னுடைய காரியத்தை மட்டுமல்ல; தேசத்தின் காரியத்தைக்கூட விட்டு விட்டு வந்திருக்கிறேன். நீ எப்படியாவது சந்தோஷமா யிருக்கவேண்டும் என்பதுதான் என் ஆசை. அதற்கு என்ன வழி என்று சொல். உன் புருஷனிடம் உனக்கு என்ன குறை என்று சொன்னால், அவனையே கேட்டு விடுகிறேன். என்னை அவன் தலையை இறக்கிவிட மாட்டான். அவனிடம் எனக்குப் பயம் ஒன்றும்கிடையாது...''

"உனக்குப் பயமில்லை, சூரியா! ஆனால் எனக்குப் பயமா யிருக்கிறது. அவரிடம் நீ பேசுவதினால் எனக்கு நல்லது ஒன்றும் விளையாது. உன் பேரில் வரும் கோபத்தை என் பேரில் வைத்துத் தாக்குவார். எனக்கு அவர் பேரில் என்ன குறை என்று கேட்கிறாய். என்னுடைய மனக் குறையைச் சொன்னால் உனக்குப் புரியவே புரியாது. பெண்ணாய்ப் பிறந்தவர்களுக்கே புரியவில்லை! உனக்கு எப்படிப் புரியும்? 'பார்ட்டிக்கு வா!' என்று சொல்லி அழைத்துப் போகிறார். அங்கே முப்பது ஸ்திரீகளுக்கு முன்னால் என்னை அவமானப் படுத்துகிறார். நான் எவ்விதமாக நடந்து கொண்டாலும் அது தப்பாகப் போய் விடுகிறது. நான் கலகலப்பாக நாலு

பேரிடம் பேசிக்கொண்டிருந்தால், 'சுத்த அதிகப்பிரசங்கி! உன் அசட்டுத்தனத்தை எதற்காக இப்படிக் காட்டிக் கொள்கிறாய்? வாயை மூடிக் கொண்டு சும்மா இருக்கக் கூடாதா? என் மானம் போகிறதே!' என்கிறார். இப்படி அவர் சொல்கிறாரே என்பதற்காகப் பேசாமலிருந்தால், 'ஏன் இப்படி எதையோ பறி கொடுத்தவனைப் போல இருந்தாய்? நாலுபேரிடம் கலகலப்பாகப் பேசத் தெரியாத ஜன்மத்தைக் கலியாணம் செய்து கொண்டேனே?' என்கிறார். சிரிக்காவிட்டால் 'நகைச்சுவையை அறியாத நிர்மூடம்!' என்கிறார். துக்கம் தாங்காமல் மூலையில் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தால், 'இங்கேயிருந்து ஏன் என் பிராணனை வாங்குகிறாய்? எங்கேயாவது தொலைந்து போ!' என்கிறார். சூரியா! 'தொலைந்து போ!' 'தொலைந்து போ!' என்ற வார்த்தையைக் கேட்டுக் கேட்டு என் மனது புண்ணாகிவிட்டது! நான் எங்கே தொலைந்து போவேன்? போக்கிடம் எங்கே இருக்கிறது? ஒரேயடியாக இந்த உலகத்திலிருந்து தொலைந்து போவதைத் தவிர வேறு வழி ஒன்றுமில்லை. அந்தத் துப்பாக்கியை இங்கே கொடுத்துவிட்டுப் போ!"

"அத்தங்கா! உயிரை விடுகிற பேச்சை மறந்து விடு! அப்படி நீ அநாதையாய்ப் போய்விடவில்லை. நான் ஒருவன் இருக்கிறவரையில் உன்னை 'அநாதை'யாக விட்டுவிட மாட்டேன். எப்பேர்ப்பட்ட கஷ்டமாயிருந்தாலும் அதற்குப் பரிகாரம் ஏதாவது இல்லாமற் போகாது. கொஞ்ச நாள் நீ பொறுத்துக் கொண்டிரு! நான் யோசித்து ஏதாவது ஒரு பரிகாரம் கண்டு பிடிக்கிறேன்."

"ஒருநாள்கூட என்னால் இனிமேல் பொறுக்க முடியாது. நான் உயிரோடு இருக்க வேண்டுமானால் அதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. ஆனால் அந்த வழி உனக்குச் சம்மதமாயிராது" என்றாள் சீதா.

"அது என்ன வழி, சொல்! என்னால் முடியுமா என்று பார்க்கிறேன்."

"என்னை இங்கேயிருந்து அழைத்துக் கொண்டு போ! இந்த டில்லி நகரம் எனக்கு நரகமாகிவிட்டது: இந்த நரகத்திலிருந்து என்னை அழைத்துக் கொண்டு போ! இந்த வீடு எனக்குச் சிறைச்சாலையாகி விட்டது: இந்தச் சிறையிலிருந்து என்னை விடுவித்துக் கொண்டு போ! நீ பார்த்து என்னை எங்கே அழைத்துப் போனாலும் நான் வருகிறேன். பம்பாய்க்கு, கல்கத்தாவுக்கு, லாகூருக்கு, இலங்கைக்கு, லண்டனுக்கு, அமெரிக்காவுக்கு,—எங்கே வேணுமானாலும் உன்னோடு புறப்பட்டு வரத் தயாராயிருக்கிறேன்!..."

"அத்தங்கா! அப்படி ஒரு காலம் வந்தால், அவசியம் ஏற்பட்டால், அங்கேயெல்லாம் உன்னை அழைத்துப் போகிறேன். ஆனால் அதற்கெல்லாம் இப்போது சமயம் அல்ல. இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் நான் ஈடுபட்டிருக்கிறேன். 'இந்தியா சுதந்திரம் அடையும் வரையில் வேறு காரியத்தில் பிரவேசிப்பதில்லை' என்று பல நண்பர்களின் மத்தியில் சபதம் செய்திருக்கிறேன். இந்தியா சுதந்திரம் அடையட்டும்! அதற்குப் பிறகு......"

"சூரியா! இந்தியாவின் சுதந்திரப் போரில் ஸ்திரீகளுக்குப் பங்கு எதுவும் இல்லையா? தாரிணி செய்து புரட்டுகிறதை நான் செய்து புரட்ட மாட்டேனா? நான் ஒன்றுக்கும் லாயக்கற்றவள் என்று இவரைப்போல நீயும் நினைக்கிறாயா? நீ மட்டும் என்னை அழைத்துக் கொண்டு போ! நான் எப்பேர்ப்பட்ட காரியம் எல்லாம் செய்கிறேன் என்று பார்! 'சுதந்திரம்' 'சுதந்திரம்' என்று சொல்லிக் கொண்டு நீங்கள் என்ன செய்கிறீர்கள்? சந்திலும் பொந்திலும் ஒளிந்து கொண்டிருக்கிறீர்கள். வேஷம் போட்டுக் கொண்டு ஊரையும் பேரையும் மாற்றி வைத்துக் கொண்டு இராத்திரி வேளை பார்த்து அங்குமிங்கும் அலைகிறீர்கள். என்னை மட்டும் நீ அழைத்துக் கொண்டு போ! ஜான்ஸி ராணியைப்போல் கையில் வாள் பிடித்துக் குதிரை மீதேறி யுத்த களத்துக்குச் சென்று யுத்தம் செய்கிறேன். தேசமெல்லாம் திரிந்து சுதந்திரப் போருக்கு ஆயிரம் பதினாயிரம் வீரர்களைத் திரட்டுகிறேன். கோழைகளை வீரர்களாக்குகிறேன். பிரான்சு தேசத்து ஜோன் ஆப் ஆர்க் என்னும் வீரப் பெண்மணியைப்போல் இந்தி

யாவின் சுதந்திரத்தை நான் நிலை நாட்டுகிறேனா இல்லையா, பார்!"

"சீதா! ஜான்ஸி ராணியைப் போலும் ஜோன் ஆப் ஆர்க்கைப் போலும் சுதந்திரப் போர் செய்யும் காலம் இது அல்ல. ஆகாச விமானத்திலிருந்து குண்டு போட்டு ஆயிரம் பதினாயிரம் ஜனங்களைக் கொல்லும் காலம் இது. இங்கிலீஷ் சர்க்காரோடு பகிரங்கமாகச் சண்டை போட்டுச் சுதந்திரத்தை நிலைநாட்ட முடியாது. இந்த தேசத்தில் இப்போது பகிரங்கமாக ஒரு பொதுக் கூட்டம் கூட்ட முடியாது. 'இன்குலாப் ஜிந்தாபாத்' என்று கோஷிக்க முடியாது. எப்படிப் படை திரட்டுவது? யுத்த களத்துக்குப் போவது? காலத்துக்குத் தகுந்த முறையை அனுசரிக்க வேண்டும்."

"அப்படியானால் ஒன்று செய்! என்னை அழைத்துக் கொண்டுபோய்க் காந்தி மகாத்மாவின் ஆசிரமத்தில் விட்டுவிடு! அங்கே என்னைப்போல் கஷ்டப்பட்டவர்களும் அநாதைகளும் பலர் இருப்பதாக அறிகிறேன். சீமையிலிருந்து வந்த வெள்ளைக்காரிகூட ஒருத்தி இருக்கிறாளாம்! முஸ்லீம் பெண் ஒருத்தி இருக்கிறாளாம்! அவர்களைப் போல் நானும் மகாத்மா இட்ட கட்டளையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறேன். இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு என்னை வந்து அழைத்துக் கொண்டு போ!"

"அத்தங்கா! மகாத்மா காந்தி சிறையில் இருக்கிறார். அவருடைய ஆசிரமத்தில் இப்போது யார் இருக்கிறார்களோ, தெரியாது. புதிதாக யாரையும் ஆசிரமத்தில் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள்."

"அப்படியானால் ஒன்று செய், சூரியா! என்னை எங்கேயாவது ஒரு நல்ல சினிமாக் கம்பெனியில் கொண்டு போய்ச் சேர்த்துவிடு! சினிமாவில் நான் எப்படி நடித்துப் பெயர் வாங்குகிறேன், பார்! எத்தனையோ தமிழ் சினிமாவும், ஹிந்தி சினிமாவும் பார்த்திருக்கிறேன். ஒன்றிலாவது 'ஹீரோயின்' சரியாக நடிக்கவில்லை. சோகமான கட்டங்களில் நடிக்க யாருக்கும் தெரியவில்லை. ஸினிமாவில் நடிக்க எனக்கு ஒரு சான்ஸ் கிடைத்தால் சோக நடிப்பில் இணையற்ற நட்சத்திரம் என்று பெயர் வாங்கிவிடுவேன்! என்ன சொல்கிறாய், சூரியா!"

சூரியா எதுவும் சொல்ல முடியாமல் திகைத்துப் போயிருந்தான். ஜான்ஸி ராணி எங்கே, மகாத்மாவின் ஆசிரமம் எங்கே, சினிமா நட்சத்திரம் எங்கே! சேர்ந்தாற்போல் இந்த மூன்று காரியங்களிலும் ஆசை செலுத்தும் தன் அத்தங்காளின் மனோநிலை அவனுக்கு அளவில்லா வியப்பை அளித்தது. சீதாவுக்கு உண்மையிலேயே கொஞ்சம் சித்தப் பிரமை ஏற்பட்டிருக்க வேண்டும் என்று நினைத்தான். ஆகையால் இன்றைக்கு ஏதாவது சமாதானமாகச் சொல்லிவிட்டுப் போகலாமென்றும், நாளைக்குத் தாரிணியைக் கேட்டுக் கொண்டு தீர்மானிக்கலாம் என்றும் முடிவு செய்தான்.

"அத்தங்கா! எனக்கு சினிமா விஷயம் ஒன்றும் தெரியாது; சினிமாக்காரர்களையும் தெரியாது. ஆகையால், நீ கடைசியாகச் சொன்னதும் முடியாத காரியம். ஆனால் சில நாளைக்கு நீ வேறு எங்கேயாவது போய் இருக்க வேண்டும் என்றால், அதற்கு இடமில்லாமற் போகவில்லை. ராஜம்பேட்டையில் நீ போய் இருக்கலாம் என்று சொல்வேன். ஆனால் என் அம்மா சமாசாரம் எனக்குத் தெரியும். உன்னை அவளுக்குப் பிடிக்காது. ஆகையால் ராஜம்பேட்டையை நான் சொல்லவில்லை. தேவபட்டணத்தில் லலிதா இருக்கிறாள் அல்லவா? உன்னை நினைத்து நினைத்து அவள் உருகிப் போகிறாள். இந்த உலகத்தில் லலிதாவைப்போல் உன்னிடம் அன்பு கொண்டவர்கள் யாருமே இருக்க முடியாது. நீ சந்தோஷமாயில்லை என்று தெரிந்து அவள் படுகிற வருத்தத்தைச் சொல்ல முடியாது. லலிதாவின் புருஷன் இப்போது சிறையில் இருக்கிறான். அவனும் என் அத்தியந்த சிநேகிதன் என்பது உனக்குத் தெரியுமே. லலிதாவின் மாமனார் ரொம்ப நல்ல மனுஷர். நீ தாராளமாகத் தேவபட்டணத்துக்குப் போய்ச் சில மாதம் இருக்கலாம். உன் குழந்தையையும் அங்கே வரவழைத்துக் கொள்ளலாம்" என்று சூரியா கூறினான்.

"லலிதா என்னிடம் எவ்வளவு அன்பு கொண்டவள் என்பது எனக்குத் தெரியாதா, சூரியா! அவள்

சந்தோஷமா யிருக்கிறான் என்பதை நினைத்தால் எனக்கும் சந்தோஷமா யிருக்கிறது. லலிதாவுக்குத் துரோகம் செய்து இவரை நான் கலியாணம் செய்து கொண்டதாக ஒரு காலத்தில் நினைத்து வருத்தப் பட்டேன். ஆனால் இப்போது அவளுக்குப் பெரிய நன்மை செய்ததாக அறிந்து சந்தோஷப் படுகிறேன். இவரை அவள் கலியாணம் செய்து கொண்டிருந்தால் இப்போது நான் படுகிற கஷ்டத்தை யெல்லாம் அவள் பட்டிருக்க வேண்டும் அல்லவா? ஆனால் லலிதா வீட்டில் போய் நான் இருக்க மாட்டேன். என்னுடைய எண்ணம் என்னவென்பதை இன்னமும் நீ அறிந்து கொள்ள வில்லை. நான் எங்கே போனேன், என்ன ஆனேன் என்பது இவருக்குத் தெரியக் கூடாது. தேவபட்டணத்துக்குப் போனால் இரண்டு நாளில் இவருக்குத் தெரிந்து போய்விடுகிறது. அதில் என்ன பிரயோஜனம்? இவர் என்னைத் தேடி அலையும்படியாகவும், கவலைப் படும்படியாகவும் எங்கேயாவது தூர தேசத்துக்கு, சுலபத்தில் கண்டு பிடிக்க முடியாத இடத்துக்கு நான் போக விரும்புகிறேன். அப்படிப் பட்ட இடத்துக்கு என்னை நீ அழைத்துக்கொண்டு போவதா யிருந்தால், சொல்லு! இல்லாவிட்டால் உன் காரியத்தைப் பார்த்துக் கொண்டு போ! என்னை மறந்துவிடு!"

"அந்த மாதிரி நாம் இருவரும் சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டுப் போனால் உன் புருஷனும் சரி, மற்றவர்களும் சரி, என்ன நினைத்துக் கொள்வார்கள்? ஏதாவது தப்பாக எண்ணிக்கொள்ள மாட்டார்களா? வீண் சந்தேகத்துக்கு இடமாயிராதா? இதைப்பற்றி நீ யோசித்துப் பார்த்தாயா?" என்றான் சூரியா.

"தப்பாக எண்ணிக் கொண்டால் எண்ணிக் கொள்ளட்டும். சந்தேகப் பட்டால் படட்டும். எனக்கு அதைப் பற்றி அக்கறை யில்லை. மூன்று மாதத்துக்கு முன்னால் இவர் என்ன செய்தார் தெரியுமா? யாரோ ஒரு பெண் பிள்ளையுடன் காரில் ஏறிக் கொண்டார். பால்பெட்டிக்குச் சமீபத்தில் இவருடைய காரும் ஒரு மிலிடெரி லாரியும் மோதிக் கொண்டன. இவருக்குக் காயம் ஒன்றுமில்லை. ஆனால் அந்தப் பெண் பிள்ளைக்குக் காயம். இந்த விஷயம் புது டில்லியெல்லாம் சிரிப்பாய்ச் சிரித்தது. அதற்காக அவரை யார் என்ன செய்து விட்டார்கள்? புருஷர்கள் மட்டும் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று எந்தச் சட்டத்தில் சொல்லி யிருக்கிறது?"

"அத்தங்கா! அந்தமாதிரி சட்டம் ஒன்றும் கிடையாது. தப்பான காரியத்தைப் புருஷன் செய்தாலும் பிசகு தான்; பெண் பிள்ளை செய்தாலும் பிசகுதான். ஆகையினால்தான் நீ சொல்லுவதை நான் ஒப்புக் கொள்ள வில்லை. எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது; அதைச் சொல்லுகிறேன், கேள். தேவபட்டணத்தில் எனக்கு இரண்டு சிநேகிதர்கள் உண்டு என்று உனக்குத் தெரியும் அல்லவா? ஒருவன்தான் லலிதாவின் கணவன் பட்டாபிராமன். இன்னொருவன் பட்டாபிராமன் வீட்டுக்கு எதிர்வீட்டு அமரநாதன். அவனும் அவனுடைய மனைவி சித்ராவும் கல்கத்தாவில் இருக்கிறார்கள். நான் தேவபட்டணம் போயிருந்தபோது அவர்களும் தற்செயலாக வந்திருந்தார்கள். அமரநாதனும் அவன் மனைவியும் ரொம்ப நல்லவர்கள். சித்ராவுக்கு உன்னைப் பற்றி லலிதா எல்லாம் சொல்லியிருக்கிறான். என்னுடைய யோசனை என்ன தெரியுமா? உன்னைப் பக்கத்து ஸ்டேஷன் எதற்காவது அழைத்துப் போய் ரயில் ஏற்றி விட்டுவிடுகிறேன். நீ கல்கத்தாவுக்குப் போய், அமர்நாத்—சித்ரா வீட்டில் சிலகாலம் நிம்மதியாக இரு. அதற்குள் இங்கே உன் புருஷன் என்ன செய்கிறான் என்பதை நான் கவனித்துக் கொண்டிருக்கிறேன். அவசியம் ஏற்பட்டால் நீ போயிருக்கிற இடத்தைச் சொல்லுகிறேன்."

"அதுதான் கூடாது; அவருக்குத் தெரியவே படாது. எனக்கு இஷ்டமானபோது தெரிவித்துக் கொள்வேன். சூரியா! நான் கல்கத்தாவுக்குப் போகத் தயார். ஆனால் இன்றைக்கோ நாளைக்கோ என்னை நீயே அழைத்துப் போகவேண்டும். இங்கே நாளைக்குப் பிறகு என்னால் இருக்க முடியாது. தனியாகப் போகவும் முடியாது. ஒரு வேளை என்னை நீ அழைத்துப் போவது

உன்னுடைய சிநேகிதி தாரிணிக்குப் பிடிக்காமலிருக்கலாம். அவளிடம் உனக்குப் பயமாயிருந்தால் அதையும் இப்போதே சொல்லிவிடு!"

"சீதா! என்னென்னமோ விசித்திரமான எண்ணங்கள் உன் மனதில் குடிகொண்டிருக்கின்றன. எனக்கு யாரிடத்திலும் பயம் கிடையாது. நாம் செய்கிற காரியம் நமக்கே சரியாயிருக்கவேண்டு மல்லவா? ஆகையால் கொஞ்சம் யோசிப்பதற்கு அவகாசம் கொடு!" என்றான் சூரியா.

"பேஷாக யோசித்துச் சொல்! செய்கிற யோசனையை இங்கேயே செய்துவிடு! இத்தனை நாள் கழித்து அம்மாஞ்சி வந்திருக்கிறாய்; தாகத்திற்குத் தண்ணீர் வேண்டுமா என்று கூட நான் கேட்கவில்லை. இதோ உள்ளே போய்க் கொஞ்சம் ஓவல்டின் கலந்து கொண்டு வருகிறேன். அது வரையில் யோசனை செய்து கொண்டிரு!" என்று சொல்லிவிட்டுச் சீதா சமையலறைக்குள்ளே போனாள்.

சூரியாவின் உள்ளம் பெரும் கலக்கத்தில் ஆழ்ந்தது. 'இது என்ன, இவ்வளவு பயங்கரமான பொறுப்பை நாம் ஏற்றுக் கொண்டு விட்டோமே! இது சரியாக முடியுமா? அல்லது கேடாக முடியுமா?' என்று அவன் மனம் தத்தளித்தது. இந்த நெருக்கடியிலிருந்து எப்படியாவது தப்பித்துக் கொள்ள முடியுமா என்று யோசித்தான். இந்தச் சமயத்தில் டெலிபோன் மணி அடித்தது.

வேறு சிந்தனையில் ஆழ்ந்திருந்த சூரியாவின் மனதில் இரவு பன்னிரண்டு மணிக்கு மேலே யார் டெலிபோனில் பேசுவார்கள் என்ற யோசனை கூடத் தோன்றவில்லை. ரிஸீவரைக் கையில் எடுத்துக்கொண்டு, "ஹலோ! யார் அது?" என்று கேட்டான்.

டெலிபோன் மணிச் சத்தத்தைக் கேட்டுவிட்டுச் சீதா சமையல் உள்ளேயிருந்து பரபரப்புடன் வந்தாள். சூரியா ரிஸீவரைக் கையில் எடுத்துப் பேசுவதைப் பார்த்ததும் அவள் முகத்தில் பீதியின் அறிகுறி தோன்றியது.

பதினோராம் அத்தியாயம்

ராகவன் மனக் கவலை!

ஜனிபூர் மாஜி திவான் ஆதிவராகாச்சாரியார் புது டில்லியில் நிரந்தரமாகத் தங்கிவிட்டார். சுதேச சமஸ்தான மன்னர்களுக்குச் சட்ட சம்பந்தமாக யோசனை சொல்லும் உத்தியோகம் அவருக்குக் கிடைத்திருந்தது. இந்த உத்தியோகத்தில் வேலை கொஞ்சம்; வருமானமும் செல்வாக்கும் அதிகம். எனினும் அவருடைய புதல்விகள் தாமாவுக்கும் பாமாவுக்கும் மட்டும் இன்னும் கலியாணம் ஆனபாடில்லை. புது டில்லி சமூக வாழ்க்கையில் அவர்கள் மிக்க பிரபலம் அடைந்திருந்தார்கள். வைஸ்ராய் மாளிகையிலும் மற்றும் சுதேச மன்னர்களும் பெரிய உத்தியோகஸ்தர்களும் கொடுக்கும் பார்ட்டிகளிலும் தாமா-பாமா சகோதரிகளைத் தவறாமல் காணலாம்.

இன்றைக்கும் அவர்கள் தந்தையுடன் ஒரு பார்ட்டிக்குப் போய்விட்டு இரவு பதினொரு மணிக்கு வீட்டுக்குத் திரும்பி வந்தார்கள். அதே பார்ட்டிக்குச் சென்றிருந்த சௌந்தரராகவனும் அவர்களுடன் வந்தான். அவர்கள் நாலு பேரும் சீட்டு விளையாடத் தொடங்கினார்கள்.

ஆட்டம் சிறிது நகர்ந்ததும் பாமா, "மிஸ்டர் ராகவன்! உங்கள் மனைவியை ஏன் பார்ட்டிக்கு அழைத்து வரவில்லை? இன்னும் உடம்பு சரியாகவில்லையா?" என்று கேட்டாள்.

"உடம்பு ஒரு மாதிரி சரியாகி விட்டது. ஆனால் ஜுரம் அடித்துக் கிடந்ததிலிருந்து அவளுடைய மனது பேதலித்துப் போயிருக்கிறது. வீட்டுக்குப் போனால் ஓயாத புகாரும் ஒழியாத அழுகையுந்தான்!" என்றான் ராகவன்.

"அவ்வளவு கடுமையாகச் ஜுரம் அடித்துக் கிடந்தவளுக்கு நீங்கள் கொஞ்ச நாள் இடமாறுதல் கொடுக்க வேண்டும். இங்கேயே வைத்துக் கொண்டிருப்பது தவறு!" என்றாள் தாமா.

"அது எனக்குத் தெரியாமலா இருக்கிறது? ஆனமட்டும் நான் சொல்லிப் பார்த்தாகி விட்டது. மதராஸுக்குப் போய் என் அம்மாவுடன் சில நாள்



இருக்குவிட்டு அவனுடைய பந்துக்களையும் பார்த்துவிட்டு வரும்படி எத்தனையோ தடவை சொல்லியாகி விட்டது. அவன் சம்மதம் கொடுத்தால் தானே? என் பாடு ரொம்பவும் சங்கடமாயிருக்கிறது. ஆபீஸுக்குப் போனால் அங்கே ஒருவிதக் கஷ்டம்; வீட்டுக்குப் போனால் இன்னொருவிதக் கஷ்டம். என்ன செய்கிறதென்று தெரியவில்லை. ஒவ்வொரு சமயம் தற்கொலை செய்துகொண்டு செத்துப் போகலாமா என்று தோன்றுகிறது. இங்கே எப்போதாவது வந்து உங்களுடன் பேசிக்கொண்டிருக்கிறேனே, இம்மாதிரி சந்தர்ப்பங்களிலேதான் கொஞ்சம் மனநிம்மதி ஏற்படுகிறது.”


“வீட்டிலே உள்ள கஷ்டம் சரி; ஆபீஸில் உங்களுக்கு என்ன கஷ்டம்?” என்று பாமா கேட்டாள்.

“உங்கள் தகப்பனாரைக் கேட்டுப் பாருங்கள்; சொல்லுவார். திவான் சாஹிப்! நான் முஸ்லிம் ஆகிவிடலாம் என்று யோசிக்கிறேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?” என்றான் ராகவன்.

ஆதிவராகாச்சாரியார் அதற்குப் பதில் ஒன்றும் சொல்லாமல் சீட்டைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

“இது என்ன கூத்து? நீர் எதற்காக முஸ்லிம் ஆகவேண்டும்?” என்று பாமா ஆச்சரியம் ததும்பக் கேட்டாள்.

“இப்போதெல்லாம் முஸ்லிமாயிருந்தால்தான் கவர்ன்மெண்ட் உத்தியோகத்தில் பிரமோஷன் கிடைக்கிறது. எனக்கு நாலு வருஷத்திற்குப் பிறகு உத்தியோகத்தில் சேர்ந்தவனை எனக்கு மேலே தூக்கிப் போட்டிருக்கிறார்கள். போன வருஷம் எனக்குக் கீழே ‘எஸ், ஸார்!’ என்று சொல்லிக் கொண்டிருந்தான். இந்த வருஷத்தில் எனக்கு மேலே போய்விட்டான். நான் இப்போது அவனுக்கு ‘எஸ், ஸார்!’ சொல்ல வேண்டியிருக்கிறது. அப்படியாவது அவன் மகா மேதாவியா?



மூளை உள்ளவனா? ஒன்றும் இல்லை. 'மகா மூடன்' என்ற பட்டத்துக்கு மிகவும் தகுதியுள்ளவன். அவன் கீழே நான் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. இந்த அவமானத்தை என்னால் பொறுக்க முடியவில்லை. திவான் சாகிப்! எனக்கு ஒரு யோசனை சொல்லுங்கள். நான் இஸ்லாம் மதத்தில் சேர்ந்து விடட்டுமா? அல்லது வேலையை ராஜீனாமா செய்து விடட்டுமா?" என்று ராகவன் கேட்டான்.

"இரண்டும் வேண்டாம்; கொஞ்ச நாள் பொறுத்துக் கொண்டிரும்!" என்று ஆதிவராகாச்சாரியார் முதல் முறையாகத் திருவாய் மலர்ந்தார்.

"பொறுத்துக் கொண்டிருந்தால் என்ன ஆகிவிடும்? இந்த நிலைமையில் மாறுதல் ஏதாவது ஏற்படும் என்று நினைக்கிறீர்களா?"

"ஏற்படலாம் என்றுதான் நினைக்கிறேன். இந்தக் காங்கிரஸ் தலைவர்களுக்குக் கொஞ்சம் புத்தி வந்தால் நிலைமை கட்டாயம் மாறிவிடும். இதற்கெல்லாம் காரணம் காங்கிரஸ்காரர்களின் தவறுதான். யுத்தத்தில் ஒத்துழைப்பதாகச் சொல்லிக் கொண்டு எல்லா உத்தியோகங்களையும் கைப்பற்ற வேண்டிய சமயத்தில் சிறைக்குள் போய் உட்கார்ந்திருக்கிறார்கள். இந்த யுத்த சமயத்தில் காங்கிரஸ்காரர்கள் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டால் வைஸ்ராய் நிர்வாக சபையின் பாதிக்கு மேற்பட்ட ஸ்தானங்கள் கிடைத்திருக்கும். காங்கிரஸ்காரர்கள் செய்யும் தவறு முஸ்லிம் லீகர்களுக்குச் சௌகரியமாய்ப் போயிருக்கிறது. முக்கியமான உத்தியோகங்களில் எல்லாம் முஸ்லிம்கள் வந்து நன்றாக உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்......"

"காங்கிரஸ்காரர்கள் வந்து விட்டால்தான் என்ன நடந்துவிடும் என்று நினைக்கிறீர்கள், திவான் சாகிப்! அவர்களும் முஸ்லிம்களுக்குத்தான் சலுகை

கொடுப்பார்கள். 'சிறுபான்மையோருக்கு நியாயம்' வழங்குவதாகச் சொல்லிக்கொண்டு பெரும்பான்மையோர் தலையில் மண்ணை வாரிப் போடுவார்கள்! எனக்கு என்னமோ ஹிந்து மகா சபையின் கொள்கைதான் பிடித்திருக்கிறது. இங்கிலீஷ்காரர்களோடு சண்டை போடுவதுகூட அவ்வளவு முக்கியமில்லை. முதலில் முஸ்லிம்களை ஒழித்துக் கட்ட வேண்டும். எட்டு கோடி முஸ்லிம்களை இந்தியாவில் வைத்துக் கொண்டு சுயராஜ்யம் வந்துதான் என்ன பிரயோஜனம்?"

"என்ன மிஸ்டர் ராகவன்! சற்று முன்னால் முஸ்லிம் ஆகிவிடப் போவதாகச் சொன்னீர்; இப்போது முஸ்லிம்களை ஒழித்துக் கட்ட வேண்டும் என்கிறீரே?" என்று பாமா கேட்டாள்.

"பின்னே என்ன செய்கிறது? ஒன்று, முஸ்லிம்களைத் தொலைத்துத் தலை முழுகவேண்டும்; அது முடியாவிட்டால் எல்லோரும் முஸ்லிம் ஆகிவிடுவதே நல்லது. அப்போது உத்தியோகங்களில் இந்தப் பாரபட்சம் காட்ட முடியாதல்லவா? எங்கேயாவது சுதேச சமஸ்தானத்தில் ஒரு உத்தியோகம் வாங்கிக் கொடுங்கள் என்று உங்கள் தகப்பனாரைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அவர் கவனிக்கிற வழியாயில்லை. திவான் சாகிப் சொன்னால் உடனே இந்தத் தரித்திரம் பிடித்த உத்தியோகத்தை ராஜினாமா செய்யத் தயாராயிருக்கிறேன்."

"அப்பா! ராகவனுடைய கோரிக்கையை நீங்கள் கொஞ்சம் கவனிக்கிறதுதானே?" என்றாள் பாமா.

"எல்லாம் கவனித்துக்கொண்டுதானிருக்கிறேன். ஆனால் ராகவன் ராஜினாமா செய்துவிடக் கூடாது. ஒரு வேலையில் இருக்கும்போதே இன்னொரு வேலை கிடைத்தால்தான் கிடைத்தது. விட்டுவிட்டால் கிடைக்காது!" என்றார் மாஜி திவான்.

"இப்படித்தான் வெகு காலமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். ஆனாலும் இன்னும் கொஞ்ச நாள் பார்க்கிறேன்" என்றான் ராகவன்.

"அது கிடக்கட்டும், ராகவன்! நீர் முஸ்லிம் அல்ல - ஹிந்து என்பது ஒன்றைத் தவிர உத்தியோகத்தில் 'பிரமோஷன்' கிடைக்காததற்கு வேறு காரணம் ஏதுவும் இல்லையா?" என்று தாமா கேட்டாள்.

"மதராஸி என்ற காரணமும் இருக்கத்தான் இருக்கிறது. என்னுடைய துரை வரவு செலவு மந்திரியாயிருந்த காலத்தில் முக்கியமான வேலைகளுக்கெல்லாம் மதராஸியைத் தேடிப் பொறுக்கிப் போடுவார். இப்போது மதராஸி என்றால் புது டில்லியில் வேப்பங்காயாக இருக்கிறது. இவர்களுக்கு முதலாவதாக யாராவது மகம்மதியர் வேண்டும். மகம்மதியர் இல்லாவிட்டால் மதி யில்லாத மகா மூடனா யிருக்க வேண்டும். ஆனால் மதராஸி மட்டும் உதவாது. இந்தியாவைத் தற்சமயம் ஆளும் மகம்மது துக்ளக்குகள் அறிவுக்கு அமித லாப வரி போட்டாலும் போடுவார்கள்!"

இப்போது ஆதிவராகாச்சாரியார் சம்பாஷணையில் மீண்டும் கலந்து கொண்டு, "பாமா அதைச் சொல்லவில்லை, ராகவன்! உம்பேரில் இன்னொரு புகார் இருப்பதாக ஊரெல்லாம் பிரஸ்தாபமாயிருக்கிறதே? உமக்குத் தெரியாதா?" என்று கேட்டார்.

"தெரியாதே! அது என்ன புகார்?" என்றான் சௌந்தரராகவன்.

"புரட்சி இயக்கத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை ஒரு மாதம் நீர் உம்முடைய வீட்டில் ஒளித்து வைத்திருந்தீராமே! அது உண்மையா?"

"தாரிணியைப் பற்றிச் சொல்கிறீர்களாக்கும். அவள் புரட்சி இயக்கத்தைச் சேர்ந்தவள் என்பது கட்டுக்கதை. அவளை நான் என் வீட்டில் ஒளித்து வைத்திருக்கவும் இல்லை. சீதாவுக்கு உடம்பு ரொம்ப மோசமாயிருந்தபோது கிட்ட இருந்து பணிவிடை செய்து அவள் உயிரைக் காப்பாற்றினாள். தாரிணி எவ்வளவு சாது, எவ்வளவு புத்திசாலி என்பது தான் உங்கள் புதல்விகளுக்குத் தெரியுமே?" என்றான் ராகவன்.

"சாதுவாயும் புத்திசாலியாயும் இருக்கலாம். அதனால் புரட்சிக்காரியாயிருக்கக் கூடாது என்று ஏற்படாதே!" என்றாள் பாமா.

"அப்படியே வைத்துக் கொண்டாலும் அதற்கு நான் எப்படிப் பொறுப்பாளி? அவள் புரட்சிக்காரி என்பது எனக்கு எப்படித் தெரியும்? அது

போகட்டும். இந்தப் புது டில்லியில் அசல் புரட்சி இயக்கத் தலைவர்கள் எவ்வளவு பெரிய உத்தியோகஸ்தர்களின் வீடுகளில் மறைந்திருந்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா? கருணா வதி தேவி எங்கே ஒளிந்திருந்தாள்? சந்திரகாந்த ஸின்ஹா யார் வீட்டில் மூன்று மாதம் ஒளிந்திருந்தான்? அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தவர்களை என்ன செய்துவிட்டார்கள்? என்பேரில் மட்டும் புகார் சொல்லுவானேன்?"

"அவர்கள் எல்லாரும் ரொம்பப் பெரிய பதவிகளில் உள்ளவர்கள். ஆகையால் யாரும் புகார் சொல்லத் துணிய மாட்டார்கள். உம்முடைய விஷயம் அப்படியில்லையே, ராகவன்! நீர் உத்தியோகத்தில் பிரமோஷனை எதிர்பார்க்கிறவராயிற்றே!"

"அதுமட்டுமல்ல, அப்பா! இவர் ஒரு புரட்சிக்காரியை ஒளித்து வைத்திருந்தார் என்று புகார். இவருடைய மனைவி சீதா ஒரு புரட்சிக்காரனுக்கு உதவி செய்வதாகப் புகார். இந்த ஊரிலிருந்து சென்னை மாகாணத்துக்குப் போன ஒரு கடிதத்தில் இவர் மனைவி சீதாவைப் பற்றிக் குறிப்பிட்டிருந்ததாம். அந்தக் கடிதம் சூரியா என்பவருக்கு எழுதப்பட்டதாம். நேற்று ஒரு பார்ட்டியில் ஒரு சி. ஐ. டி. உத்தியோகஸ்தர் என்னிடம் சீதாவையும் சூரியாவையும் பற்றி விசாரித்தார். அவர்களுக்கு என்ன உறவு என்று கேட்டார். 'எனக்குத் தெரியாது' என்று பதில் சொன்னேன். மிஸ்டர் ராகவன்! உண்மையில் அவர்களுக்குள் ஏதாவது உறவு உண்டா?" என்று பாமாதேவி கேட்டாள்.

"உறவு உண்டு. அவர்கள் அத்தங்காவும் அம்மாஞ்சியும் ஆகவேண்டும்" என்றான் ராகவன்.

"அப்படியானால் சரிதான்! அந்தப் போலீஸ் உத்தியோகஸ்தர் கொஞ்சம் அசிங்கமாகக் கூடப் பேசினார்..."

"அது என்ன?" என்று ராகவன் பரபரப்புடன் கேட்டான்.

"அவர்கள் இரண்டு பேரும் 'லவர்ஸ்' (காதலர்கள்) என்பதாக ஏதேனும் வதந்தி உண்டா என்று கேட்டார். எனக்குச் சீதாவை நன்ருய்த் தெரியுமாதலால் 'அதெல்லாம் சுத்தப் பொய்; அவதூறு' என்று சொல்லி, அந்த சி. ஐ. டி. காரர் தனது வார்த்தையை வாபஸ் வாங்கிக் கொள்ளும்படி செய்தேன்."

"நீங்கள் செய்தது ரொம்ப சரி. ஆனாலும் அந்தச் சூரியா ஒரு காலிப் பயல் என்பது உண்மை. கொஞ்ச நாளைக்கு முன்பு சந்நியாசி வேஷம் போட்டுக் கொண்டு மதராஸில் என் தாயார் வீடு சென்று பார்த்தானும். என்னென்னமோ அநாவசியமான கேள்வி யெல்லாம் கேட்டானும். அவன் மறுபடியும் என் கண்ணில் தென்பட்டால், போலீஸாரிடம் ஒப்படைத்து விட்டு மறுகாரியம் பார்ப்பேன் அவன்பேரில் ஏதாவது அரெஸ்ட் வாரண்ட் இருக்கிறதா? உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியாமல் என்ன? மதராஸ், பம்பாய், மத்திய மாகாணம் ஆக மூன்று மாகாணங்களில் அவன்பேரில் வாரண்டு இருக்கிறதாம்!"

"நல்ல காரியம்! சூரியாவைப் போன்றவர்களைச் சிறையிலே தள்ளினால் தேசத்துக்கே க்ஷேமம். சுதந்திர இயக்கம் தூய்மை அடையும்!" என்று ராகவன் சொல்லிக் கொண்டே டெலிபோன் அருகில் சென்றான்.

"இந்த நேரத்தில் யாருடன் டெலிபோன் பேசப் போகிறீர்கள்?" என்று பாமா கேட்டாள்.

"வீட்டில் என் மனைவி தூங்கிவிட்டாளா என்று தெரிந்து கொண்டுதான் நான் வீடு செல்வது வழக்கம். அவள் விழித்துக் கொண்டிருக்கும் போது சென்றால் தேள் கொட்டி விடுவதுபோல் கொட்டிவிடுவாள். இராத்திரி யெல்லாம் இரண்டு பேருக்கும் சிவராத்திரிதான்!" என்றான் ராகவன்.

"ஐயோ! பாவம்! உங்களுடைய நிலைமை பரிதபிக்கத் தக்கதுதான்!" என்று சொன்னாள் பாமா.

சௌந்தரராகவன் டெலிபோனில் தன்னுடைய வீட்டு நம்பரைக் கூப்பிட்டான். அதற்குப் பதில் உடனே வந்தது. டெலிபோனில் பேசிய குரலைக் கேட்டதும் ராகவனுடைய முகத்தில் ஆச்சரியமும் ஆத்திரமும் பொங்கிக் கோர தாண்டவம் புரிந்தன.

வானவான்! தானவான்!

வானத்தில் சூரியன், சந்திரன், கிரகங்கள், நக்ஷத்திரங்கள் எல்லாம் ஒரு நியதியின்படி ஓடுகின்றன. அவற்றின் ஓட்டத்திற்குப் பின்னால் ஒரு சக்தி இருந்து இயக்குகிறது என்று கஷ்டமில்லாமல் ஒப்புக் கொள்ளுகிறோம்.

அப்படியே ஒரு பூண்டோ பிராணியோ பிறந்து வளர்ந்து முடிவடைகிறது. இந்தக் காரியங்களுக்கும் மேலே சொன்ன சக்தியே காரணம், என்று சொல்லிவிடுகிறோம்.

வானத்தைப் பார்த்தாலும் சரி, மண்ணில் உள்ள எண்ணிலாத உயிர் வர்க்கங்களைப் பார்த்தாலும் சரி, எல்லாம் இறைவனுடைய செயல், இறைவன் மயம் என்று சொல்லிக் கொள்ளுகிறோம்.

ஆனால் மக்களுடைய செயலுக்கு வரும்போது இறைவன் செயல்தான் என்று சொல்ல மனம் வருவதில்லை. உண்மையில் நம்முடைய செயலும் இறைவன் செயலேயாகும். வானமும் பூமியும் எல்லா உயிர்களும் இறைவனுடைய செயலாயிருக்கும்போது நம்முடைய செயல் என்று சொல்லிக் கொள்ள இடமேது? நாமே இல்லை என்னும்போது நம்முடைய செயல் எங்கிருந்து வரும்?

* * *

பாரத யுத்தம் ஆரம்பிக்கப் போகிறது. துர்யோதனாதிகள் எதிரில் நிற்கிறார்கள். பீஷ்மர், துரோணாச்சாரியார் முதலிய வணக்கக் கூடிய பெரியோர்களும் எதிரில் நிற்கிறார்கள். அர்ஜுனனுக்கு அம்பு தொடுக்க மனமில்லை வில் நழுவிக் கீழே விழுகிறது. இந்த நிலையைப் பார்த்துக் கிருஷ்ண பகவான் அர்ஜுனனுக்கு உண்மையைச் சொல்லுகிறார்:

உயிர்களின் பிறப்போ வளர்ப்போ முடிவோ எல்லாம் நான்; என் காரியங்கள்தான். நீயும் அந்த உயிர்களுக்குள் அடங்கியவன். எதிரிகளும் அப்படியே.

பிறப்பு நிலை கேடு
இவையாவான், பாவம்
அறத்தினோ(டு) ஐம்பூதம்
ஆவான் — உறற்கரிய
வானவான் மண்ணவான்
மன்னுயிர்கள் அந்நனையும்
தானதல் காட்டினான்
நான்.

[கேடு: இறப்பு: ஐம்பூதம்: கல், நீர், சுடர், காற்று, ஆகாயம் ஆகிய ஐந்து விதமான ஜடவஸ்துக்கள்; வானவான் மண்ணவான்: வானம் எங்குமே அவன்; பூமி எங்குமே அவன்.]

இவ்விதம் கண்ண பெருமான் விசுவரூபத்தைக் காட்டி வானமும் பூமியும் ஒன்றாய் நின்றபோது அர்ஜுனன் பிரமித்துப் போனான். கண்ணனைத் தன் தோழன் என்று நினைத்து நடந்து கொண்டதெல்லாம் நினைவு வந்தது.

"ஆயா! என் மைத்துனனே!
ஆழித் தேர்ப் பாகா!"

என்றெல்லாம் தான் அழைத்த கண்ணன் சகல உலகத்தையும் இயக்கும் இறைவன் என உணர்ந்தான். தான் ஏதோ செயல் புரிவதாக எண்ணிய அறியாமை நீங்கித் தெளிவு பெற்றுப் போருக்கு ஆயத்தமானான் அர்ஜுனன்.



பாரத தேசத்தின் இலட்சிய வீரன் அர்ஜுனன்; பாரத நாட்டின் இலட்சியத் தெய்வம் கண்ணன். அர்ஜுனன் ஜீவாத்மா; கண்ணன் பரமாத்மா. இந்திய நாட்டில் பிறந்த ஒவ்வொருவரும் கண்ணனைத் தோழமை கொள்ள உரிமையுடையவர்கள். 'நீதை உரைத்ததமை இன்புறச் செய்தவன் கீர்த்திகள்' பாடப் பிறந்தவர்கள்.

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

237. ஈ எறும்பு வரக்கூடாது உள்ளே !

அனுமனால் எரியுண்ட இலங்காபுரி தேவ தச்சன் மயனால் அற்புதமாய்ப் புதுப்பிக்கப்பட்டது. ராவணனும் அதை வியந்து பாராட்டினான்.

* * *

தச்சனுக்கு மரியாதை யெல்லாம் செய்த பிறகு, புதிதாகக் கட்டப்பட்ட சபா மண்டபத்திற்குப் போகிறான் ராவணன்.

மண்டபத்தில் என்ன பார்க்கிறோம்? ஆயிரமோ அதற்கு மேலோ என்று சொல்லும்படி வரிசை வரிசையாகத் தூண்கள் நிற்கின்றன.

பதித்த ரத்தினங்களும், இழைத்த பொன்னும் தூண்களிலிருந்து பிரகாசத்தை வீசுகின்றன. மண்டபத்தைப் பார்த்தால் அதன் அழகு (எவ் எழில்) யாரையும் திகைக்கச் செய்யும்.

அந்த மண்டபத்தில் ஒரு கோடியில் ஒரு ஆசனம் இருக்கிறது. ஆசனத்தைத் தாங்கியுள்ள சிம்மங்கள் அற்புதமான பயங்கர பாவம் கொண்டவைகளாய் இருக்கின்றன. அந்த பயங்கர பாவத்தின் (வெவ் எழில்) அருமையை பார்த்துக்கொண்டே இருக்கலாம் நாம்.

* * *

அவ்வழி ஆயிரம்
ஆயி ரம்அவிர்
செவ்வழிச் செம்மணித்
தூணம் சேர்த்திய
எவ்வெழில் மண்டபத்(து),
அரிகள் ஏந்திய
வெவ்வெழில் ஆசனத்(து)
இனிது மேவினான்.

[அவ்வழி: மயனுக்குப் பரிசு கொடுத்தான பிறகு; ஆயிரம் ஆயிரம்: ஆயிரமோ இரண்டாயிரமோ என்று எண்ணிச் சொல்ல முடியாத அத்தனை மிகுதியான; அவிர் செவ்வழிச் செம்மணித் தூணம் சேர்த்திய: ஒளி வீசும்படியான நேர் ஒழுங்கில் அமைந்த ரத்ன கசிதமான தூண்கள் நிறுத்திய; எவ் எழில் மண்டபத்து: அதிசயம் காரணமாகத் திகைப்படையக் கூடிய அழகு வாய்ந்த மண்டபத்தில்; அரிகள் ஏந்திய: சிம்ம உருவங்களின் மேல் அமைத்த; வெவ் எழில் ஆசனத்து: பயங்கரமான ஒரு அழகு (கலைத்திறம்) படைத்த சிம்மாசனத்தில்; இனிது மேவினான்: உற்சாகமாகப் போய் உட்கார்ந்தான்.

குறிப்பு:—ஓவியக் கலையின் பல அம்சங்களையும் அனுபவித்தவர் கம்பர் என்பது "வெவ் எழில்" என்ற பிரயோகத்திலிருந்து தெரிய வருகிறது.]

* * *

ராவணன் ஏறி யிருந்த சிம்மாசனத்தைச் சுற்றி உறவினர்கள் எத்தனையோ பேர், ராஜ தந்திரங்களில் நிபுணரானவர்கள் எத்தனையோ பேர் நெறிந்து எட்டிச் சூழ்ந்து நிற்கிறார்கள்.

வரம்பறு சுற்றமும்,
மந்தி ரத்தொழில்
நிரம்பிய முதிஞரும்,
சேனை நீள்கடல்த்
தரம்பெறு தலைவரும்,
தழுவத் தோன்றினான்—
அரம்பையர் கவரியோ(டு)
ஆடும் தாரினான்.

[வரம்பு அறு சுற்றமும்: பல வகையிலும் நெருங்கிய சுற்றத்தார்களும்; மந்திரத் தொழில் நிரம்பிய முதிஞரும்: ஆலோசனை செய்வதில் திறமை உள்ள முதியோர்; சேனை நீள்கடல்: விசாலமான கடல் போன்ற சேனைக்குரிய; தரம்பெறு தலைவன்: உயர்ந்த

பதவிகளுடைய தலைவர்கள்; தழுவத்தோன்றினன்: சுற்றி நிற்கும் நிலையில் தோன்றினன். யார்?—அரம்பையர் கவரியோடு ஆடும் தாரினன்: அபூர்வமான அழகு வாய்ந்த பெண்கள் இரு பக்கத்திலும் இருந்து கவரி வீச, அந்தக் கவரியின் அசைவோடு அசைந்தாடும் பொன்மயமான ரத்தின ஆரங்களை அணிந்த—ராவணன்.

குறிப்பு:— உல்லாசமான அலங்கார வாழ்க்கை ராவணனுக்கு இயல்பாய் உரியது. அந்த அலங்கார தோரணையிலேயே சபா மண்டபத்திற்கு வந்தான் என்பதை அழுத்தமாய்க் கூறுகிறது கடைசி அடி.]

* * *

குடும்பத் தலைவர்கள், பேரறிஞர்கள், பலரும் மண்டபத்தில் இருந்தார்கள். அவர்களை எல்லாம் அவரவர்கள் வீட்டிற்குப் போகலாம் என்று ராவணன் சொல்லச் சொன்னான்.

முனைவரும் தேவரும்
மற்று முற்றுளோர்
எனைவரும் தவிர்கென
ஏய ஆணையான்,
புனைகுழல் மகளிரோ(டு)
இளைஞர்ப் போக்கினான்,—
நினைவுறு காரியம்
நிகழ்த்தும் நெஞ்சினான்.

[முனைவரும்: குடும்பத் தலைவர்களும்; தேவரும்: பேரறிஞர்களும்; மற்றுள்ள எனைவரும்: சுற்றி இருந்தவர்களான எல்லோரும்; அகலவேண்டும் என்று அதிகாரிகளைக் கொண்டு சொல்லிக் கட்டளை இட்டான்; புனைகுழல் மகளிரோடு இளைஞர்ப் போக்கினான்: உறவினரான பெண்களையும் இளைஞர்களையும் அவனே இதமாகச் சொல்லி வீட்டிற்குப் போகச் செய்தான்; புனைகுழல்: அழகாய்ச் சடை பின்னிய கூந்தலை உடைய; எதற்காக இதெல்லாம் செய்தான்? நினைவுறு காரியம் நிகழ்த்தும் நெஞ்சினான்: மனதில் நினைத்த ஒரு பெரிய காரியத்தை மந்திரிமார்களுக்குச் சொல்ல எண்ணியவனாய்.]

* * *

முக்கியமான காரியம் ஒன்றை எடுத்துப் பேசி முடிவு செய்ய வேண்டியதிருக்கிறது. அது மிகவும் ரகசியமான காரியம். அதற்காக அரசியல் நிபுணர்கள், தன்னுடன் நெடுநாளாகப் பழகினவர்கள், அனுபவ முதிர்ச்சி உடையவர்கள், அமைதியும் நிதானமும் கொண்டவர்கள், மாறுபாடு இல்லாமல் அனுதாபம் உள்ள தலைவர்களான மந்திரிகள் எல்லாரையும் பக்கத்தில் வந்து இருக்கும்படியாகச் சொல்லி அவர்கள் மத்தியில் தானும் இருந்துகொண்டான்.

வேறு யாரும் குஞ்சு குருவான்கூட சபா மண்டபத்துக்குள் வராதபடி கண்டிப்பாய் ஏற்பாடு செய்து விட்டான்.

பண்டிதர் பழையவர்
கிழவர் பண்பினர்
தண்டல் இல் மந்திரத்
தலைவர் சார்வெனக்
கொண்டுடன் இருந்தனன்;—
கொற்ற ஆணையான்
வண்டொடு காலையும்
வரவு மாற்றினான்!

[பண்டிதர்: அரசியல், போர் முதலிய விஷயங்களை நன்கு கற்றவர்; பழையவர்: நெடுநாள் தன்னுடன் நெருங்கிப் பழகியவர்; கிழவர்: அனுபவம் முதிர்ந்து வயதானவர்; பண்பினர்: எதையும் ஆற அமர யோசித்துச் செய்யும் இயல்பினர்; தண்டல் இல் மந்திரத் தலைவர்: மாறுபாடு இல்லாத அனுதாபம் கொண்ட முதன்மையான மந்திரிகள்; சார்வெனக் கொண்டுடன் இருந்தனன்: பக்கத்தில் உட்காரச் செய்து அவர்களுடன் ஒருவனாய்த் தானும் அமர்ந்தான்; கொற்ற ஆணையான்: அதிகார தோரணையோடு; வண்டொடு காலையும் வரவு மாற்றினான்: வண்டுகளையும் காற்றையுமே "உள்ளே வரவிடக் கூடாது" என்று சொல்லி வைத்தான்.]

வண்டும் காற்றும் வரக்கூடாது என்று சொல்லிக் கட்டளையிட்டான் என்பதில் ஒரு ஹாஸ்யம். தமாஷாகத் தானே அப்படியெல்லாம் பேசுகிறான் ராவணன் என்பது விஷயம். மாயையில் வல்லவர்கள் அரக்கர்கள், வண்டாகவும் காற்றாகவுமே உருமாறி உள்ளே புகுந்து விடுவார்கள் என்று வியாக்கியானம் செய்வது வேண்டாத காரியம்.



குளிர்காலம்

விவசாயி கணப்பில் தன் கைகளை சூடுசெய்து கொள்கிறான். இலைகள் உதிர்ந்த மரக்கிளைகள் மூலமாக குளிர் காற்று வீசுகிறது. வளைந்து செல்லும் மண் ரஸ்தாவின் மீது மாட்டு வண்டி மெதுவாகச் செல்கிறது. வண்டிக்காரன் பல்கிட்டும் குளிருக்காகப் போர்வையை இழுத்துப் போர்த்திக்கொள்கிறான். ரஸ்தாவோர வீடுகளிலும், குடிசைகளிலும், வயல்களிலும், மரத்தடியிலும் உள்ள ஒவ்வொருவரும் டீயின் சுகத்தையும் சூட்டையும் எதிர்நோக்கி நிற்கிறார்கள். டீயைப்போல மலிவாக, சுலபமாக எவரும் கிடைக்கக்கூடியதும் திருப்தியளிக்கக்கூடியதுமான பானம் வேறொன்றுமே இல்லை

இந்திய டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

களைப்பும் அலுப்பும் தீர்க்கும் டீ.



லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி

அவனுடைய கண்கள் எதிரில் வருபவர்களைக் கவனித்ததாகவே தெரியவில்லை. பழக்கத்தின் காரணமாகக் கால்கள் சைக்கிளின் சக்கரத்தைச் சுழற்றிக் கொண்டும், கைகள் தேவையான பொழுது மணியை அடித்துக்கொண்டும் இருந்தனவே தவிர, அவன் தன்னுடைய சூழ்நிலையை உணரவேயில்லை. சைக்கிள் மீது மோத இருந்த ஒரு கிழவர் திட்டியதைக்கூட அவன் கவனிக்கவில்லை. வெகு வேகமாக சைக்கிளை விட்டுக்கொண்டு கடற்கரையை அடைந்தான். மணல் திட்டின் மீது சைக்கிளைக் கிடத்திவிட்டு, அங்கிருந்த ஒரு கட்டு மரத்தின் நிழலில் படுத்துக் கொண்டான். வியர்வையின் உப்புநீர் கண்களைக் கரித்தது. அதைத் துடைக்கவும் அவன் முயலவில்லை. ஏனெனில் அவன் உள்ளம் அதைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு கரித்தது!

கைக்கடிகாரத்தைப் பார்த்தான். மணி எட்டாகி யிருந்தது. கலியாணத்திற்கு விருந்தினர் வந்தவண்ணம் இருப்பார்கள். எல்லோரும் இட்டிலி, காப்பி சாப்பிட்டுக் கொண்டிருப்பார்கள். வனிதா — அவள் தான் அவனுடைய ஒரே அருமைப் புதல்வி —அவள் இப்பொழுது மணப் பெண் அல்லவா?—அவளை விதவிதமாக அலங்கரித்திருப்பார்கள். தன் அப்பாவைப் பற்றி ஒரு கணமாவது இவ்வளவு ஆனந்தத்துக்கு இடையில் அவள் சிந்தித்திருப்பாளா?—இதை நினைக்கும்போது அவன் மனதை யாரோ வாட்டிப் பிழிவதுபோல் இருந்தது; அவனுடைய பார்வையைக் கண்ணீர் மறைத்தது.

அவன் மனைவி பத்மாவோ? அவளைப் பற்றி நினைக்கவே அவன் மனம் கூசிற்று. தன்னைத் தனிமையாக இருக்கிறோம் என்பதையும் மறந்து அவன் தலை தானாகவே குனிந்தது. தன் மனைவி என்று சொல்லிக் கொள்ளும் உரிமையைக்கூட அவன் இழந்து விட்டானே! அப்படி என்ன, தான் செய்தது மன்னிக்க முடியாத குற்றமா? இந்தப் பிரபஞ்சத்தில் கொள்ளை அடிப்பதும், கொலை செய்வதுமே தொழிலாகக் கொண்ட எத்தனையோ ருத்ராக்ஷப் பூனைகள் ஆனந்தமாக வாழவில்லையா?— உம், இப்பொழுது மாப்பிள்ளை ஊர்வலம், காசி யாத்திரை எல்லாம் ஆரம்பமாயிருக்கும்.

சென்ற வாரம்தான் தன்னுடைய நண்பன்—இப்பொழுது நண்பனில்லை, அந்தப் பழைய காலத்தில் நண்பனாக இருந்தவன்—ராமுவின் பெண் சௌதாவுக்குக் கலியாணமாயிற்று. குஷ்டரோகி என்பதற்காக ராமு அதில் பங்கெடுத்துக் கொள்ளாமலா இருந்தான்? அவனே வாசலில் நின்று எல்லோரையும் வரவேற்றான்! அன்னுவின் பெண் கமலா கூடச் சொன்னாளே, கடந்த ஐந்தாண்டுகளாகக் கர்ம வியாதியால் பீடிக்கப்பட்டுத் தன்னந் தனியே வசித்த ராமுவும் தன் மகளுடைய கலியாணத்தில் கலந்துகொண்டான் என்று! — அவனை ரோகி என்பதற்காக வரக்கூடாது என்று அவன் மனைவி தடுத்தாளா? அப்படியானால் தான் அந்த ரோகியைக் காட்டிலும் கேவலமானவனா?

ஆம்; ஈனமானவன்தான்! குஷ்டம் ராமுவாக வரவழைத்துக் கொண்டதல்லவே! ஏதோ பூர்வ வினையால் அதற்கு அவன் இரையானான். ஆனால், ஆனால், தானோ.........?

2

ரங்கநாதன் நல்ல கௌரவமான குடும்பத்தில் பிறந்தவன்தான். வீட்டுக்கு மூன்று

வது பிள்ளை. பி. ஏ. தேறிச் சட்டப் பரீட்சையும் கொடுத்திருந்தான். இளம் வயதிலேயே பத்மாவை மனைவியாக அடையும் பாக்கியமும் பெற்றான். ஒரு நல்ல பாங்கில் பொறுப்புள்ள உத்தியோகம் வகித்துக் கண்ணியமாகக் குடும்பம் நடத்தி வந்தான். காலக்கிரமத்தில் அவனுக்குச் சீமந்த புத்திரியாக வனிதாவும், ஜேஷ்ட புத்திரனாக வாசுவும் பிறந்தார்கள். அவர்களுடைய வாழ்க்கை அமைதி நிரம்பிச் சுகமாக நடந்து கொண்டிருந்தது.

பத்மாவுக்குச் சத்தியத்தில் அபார நம்பிக்கை. அதே அவளுடைய உயிர்நாடி என்றாலும் மிகையாகாது. கன்னிகா ஸ்திரீ மாடத்தில் படித்த பொழுது அங்கிருந்த கிறிஸ்துவ மாதர்கள், “உயிரே போவதாயிருந்தாலும் பொய் சொல்லாதே; பிறர் பொருளை அபகரிப்பவனும், அந்த எண்ணமுடையவனும் சண்டாளனே!” என்று அவளுக்குப் போதித்தார்கள். அந்த வார்த்தைகள் அவள் மனதில் ஆழமாகப் பதிந்திருந்தன. விளையாட்டாக யாரேனும் பொய் சொன்னால்கூட அவள் பொறுக்க மாட்டாள். தன் கணவனும், தனக்குப் பிறக்கும் குழந்தைகளும் சத்திய சந்தர்களாய் இருக்க வேண்டுமென அவள் விரும்பியதில் ஆச்சரியம் ஏதுவும் இல்லை.

இப்படியே இவர்களுடைய வாழ்க்கை நிச்சலனமாக இருந்திருந்தால், இந்தக் கதைக்கு அவசியமே இல்லை. ஒரு நாள் பாங்கில் கணக்கு எழுதி முடித்ததும் பாக்கி ஏழாயிரம் ரூபாய் வந்தது. திருப்பித் திருப்பிப் பிசகு ஏதாவது சேர்ந்து விட்டதோ என்று ரங்கநாதன் பன்முறை எண்ணிப் பார்த்தான். அந்த ஏழாயிரம் ரூபாய் பிடிவாதமாகக் கணக்கில் வர மறுத்தது. கடைசியாக எண்ணி முடிப்பதற்குள் இருள் சூழ்ந்து, அனேகமாக மற்றவர்கள் எல்லோரும் வீட்டுக்குப் போய்விட்டார்கள்.

இந்தச் சமயத்தில் தான் பேராசைப்பிசாசு ரங்கநாதனுடைய நெஞ்சில் குடிபுகுந்தது. அதன் பயனாக அவனுக்குச் சபலம் தட்டிற்று. மனச்சாட்சி என்னமோ வேண்டாமென்றுதான் வாதாடியது; ஆனால் யாரும் கண்டுபிடிக்க முடியாது என்றது பேராசைப் பிசாசு. கடைசியில் சைத்தானுக்குத்தான் வெற்றி. இத்தனைக்கும் இந்தக் காரியத்தை அவன் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் எதுமில்லை. அவன் குடும்பத்துக்குத் தேவையான வருவாய் அவனுக்கு உண்டு. பத்மாவும் நகைகளுக்கு ஆசைப்பட்டு அவனை நச்சரிக்கும் பெண்ணல்ல. அவனுக்கும் அப்படி அடாபிடிச் செலவுகள் எதும் கிடையாது. இருந்தாலும் ஆசை விடவில்லை. இருதயம் 'படபட' வென்று பின்னணிச் சங்கீதம் பாட, அவன் கரங்கள் கத்தை நோட்டுகளை அப்படியே தோல் பையில் திணித்தன. வீடு வந்து சேருவதற்குள் போதும், போதுமென்றாகிவிட்டது அவனுக்கு. வீட்டுக்குள் வந்ததும் அவன் வெளிறிய முகத்தைக் கண்டு பத்மா பயந்தே போனாள். அவளை ஏறெடுத்துப் பார்க்கவும் ரங்கநாதன் அஞ்சினான். கடைசியில் “தலைவலி அசாத்தியமாக இருக்கு!” என்று சொல்லிக் கொண்டே, அவன் படுக்கப் போய் விட்டான். மன வேதனையினால் ஜுரமும் வந்தே விட்டது.

ரங்கநாதன் ஜுரத்தினால் அவஸ்தைப் படும்பொழுது, பத்மா அவனுடைய தலையணையைச் சரிப்படுத்தி ஒழுங்காக வைத்தாள். அப்பொழுது அதற்கடியில் இருந்த தோல் பை கையில் படவே, “ஐயோ, பாவம்! இதை மாற்றி வைக்கக்கூட அவரால் முடியவில்லை, ஜுரமாகப் படுத்து விட்டார்!” என்று அவள் பேதையுள்ளம் அங்கலாய்த்தது. வேண்டுமென்றே ரங்கநாதன் அந்தத் தோல் பையை அங்கே ஒளித்து வைத்தானென்பதை அவள் எப்படி அறிவாள்?

தோல் பை ஏதோ கனமாக இருப்பதாகத் தோன்றவே, பத்மா அதைத் திறந்தாள். உள்ளே அலங்கோலமாகத் திணிக்கப்பட்டிருந்த அத்தனை நோட்டுகளைக் கண்டதும் அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.



அந்த நோட்டுகள் அங்கு எப்படி வந்தன என்றும் அவளுக்குப் புரியவில்லை. ஆபீஸ் பணத்தையே வீட்டுக்குக் கொண்டு வர மாட்டாரே! — பின் ஏது? அவளுடைய மனதில் சந்தேகம் தலைகாட்ட ஆரம்பித்தது; ஆனால் மனம் அதை ஒப்புக்கொள்ள மறுத்தது. என்ன! அவன் கண



ஏதோ சொல்ல நினைத்தான். ஆனால் அந்தப் பாழும் தொண்டை வறண்டிருந்தது. அதிலிருந்து வார்த்தைகளே வெளிவரவில்லை. 'குப்'பென்று ஒருதரம் வியர்த்தது; அவன் சட்டை நனைந்தது. அந்தச் சகிக்க முடியாத நிசப்தத்திற்கு முடிவே இல்லை என்று அவன் நினைத்தான். அந்தச் சமயத்தில் பத்மா வாய்திறந்து தன்னைத் திட்டினாற்கூடத் தேவலை என்று அவனுக்குத் தோன்றியது.

ஐயோ! இதென்ன சித்ரவதை! அவனைக் குற்றஞ் சாட்டும் அந்தக் கண்கள், "உன்னை நம்பினேனே; துரோகம் செய்தாயே!" என்று ஓலமிட்டன. ஆனால், அவள் வாயினின்றும் ஒரு வார்த்தையும் வெளிவரவில்லை!

வன் திருடனா! அப்படியும் அவர் செய்வாரா? சே, சே! இருக்கவே இருக்காது! -அப்படி நினைக்கவும் அவளால் முடியவில்லை.

ரங்கநாதன் துயிலெழுந்ததும் நோட்டுக் கத்தைகளைக் காட்டி, "ஏது?" என்று கேட்டாள். தூக்கக் கலக்கத்தில் ஒன்றுமே புரியவில்லை அவனுக்கு. தான் கனவாடியது வெறும் பிரமை என்று எண்ணி அவன் ஆச்வாசப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில், அவனுக்கு எதிரே கண்ணை உறுத்திக் கொண்டு இருந்த அதே நோட்டுகள் காட்சியளித்தன. அவன் தலை சுற்றிற்று. நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது. என்ன சொல்வதென்றே அவனுக்குப் புரியவில்லை.

அவனுடைய மிரண்ட விழிகளைக் கண்ட பத்மாவுக்கு க்ஷண நேரத்தில் எல்லாம் விளங்கிவிட்டது. தன் லக்ஷியம் உடைந்து சிதறியது என்று அறிந்த அவள் மனம் அந்த நிமிஷமே கல்லினும் இரும்பினும் கெட்டியாக மாறிற்று. "கட்டிய கணவனானாலென்ன? குற்றம் குற்றந்தானே? இது யார் பணமோ? எந்த விதவையினுடையதோ? எந்த வயோதிகனுடையதோ? யார் வயிறு எரிகிறதோ?" என்று நினைத்த மாத்திரத்தில், அவள் நெஞ்சம் இன்னும் கல்லாக மாறிற்று. "பாவி, சண்டாளன், கொதகன், மோசக்காரன், பொறுப்பைத் துஷ்பிரயோகம் செய்தவன்!" என்றெல்லாம் அவள் தன் கணவனைப்பற்றி எண்ணத் தொடங்கினாள்.

பத்மாவையே உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருந்த ரங்கநாதனுக்கு அவளுடைய மனப்போராட்டம் தெளிவாகப் புரிந்தது. அவள் வாய்திறந்து பேசாவிட்டாலும், அவள் பார்வையே அவனைச் சுட்டெரித்து விடும்போலிருந்தது. அவன்

எப்படியோ சமாளித்துக் கொண்டு ரங்கநாதன் படுக்கையை விட்டு எழுந்தான். தன்னுடைய கைகால்கள் தன் சுவாதீனத்தில் இல்லை என்பதை அவன் உணர்ந்தான். இருந்தாலும் அதை ஒருவாறு சமாளித்துக் கொண்டு, "பத்மா! நான் வெளியில் போய் இதை எப்படியாவது, எங்கேயாவது ஒளித்து வைத்துவிட்டு வருகிறேன்!" என்று ஹீனஸ்வரத்தில் சொல்லிவிட்டு, அங்கிருந்து போனான்.

"நேரே சென்ட்ரலுக்குப் போய்க் கூவம் நதியில் தோல் பையைப் போட்டுவிட்டால், அவ்வளவு கூட்டத்துக் கிடையில் யார் கவனிக்கப் போகிறார்கள்?" என்று தோன்றிற்று அவனுக்கு. இவ்வெண்ணம் சிறிது நம்பிக்கையும் ஊட்டிற்று. தன்னைப் பிடித்த அஷ்டமத்துச் சனி அத்துடன் நீங்கிவிடுமென்றே அவன் நினைத்தான். எல்லாம் நினைக்கிறபடியே நடந்துவிடுகிறதா? மவுண்ட் ரோட்டில் இறங்கி அவன் வேறே பஸ் பிடித்தான். இந்த இரண்டாவது பஸ்ஸில் ஏறினதும் ரங்கநாதனுக்குத் தன்னை யாரோ பின் தொடர்வதுபோல் இருந்தது. சாமர்த்தியமாகப் பல பஸ்களைப் பிடித்து அந்த ஆளை உதறித் தள்ளப் பார்த்தான்; முடியவில்லை. இதனால் அந்தக் கூவம் நதியும் அவனைக் கைவிட்டது. எப்படியோ அந்த ஆளிடமிருந்து தப்பித்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்தான்.

வீட்டுக்கு வந்ததும் தனக்கு எதிராகச் சாட்சி சொல்லும் அந்த நோட்டுகளை அடுப்பில் போட்டு எரித்துவிட்டால் என்ன என்று தோன்றிற்று. அதற்குப் பத்மா

சம்மதிக்க வேண்டுமே!—அவன் மனம் ஸ்தம்பித்துவிட்டது; மூளை வேலை செய்ய மறுத்தது. அதற்கேற்றாற்போல் அதிர்ஷ்டமும் அவன் பக்கத்தில் இல்லை. இல்லையென்றால், பஸ்ஸில் வரும்போது பட்டணத்துப் பெயர்போன 'முடிச்சுமாறிகள்' அந்தத் தோல் பையை அடித்துக்கொண்டு போயிருக்க மாட்டார்களா? — முடிவில் வந்தது வரட்டுமென்று மீண்டும் படுக்கையில் படுத்துப் புரண்டான்.

மறுநாள் காலை எட்டு மணி இருக்கும். வாசலில் ஒரு போலீஸ் வண்டி வந்து நின்றது. அதனின்றும் இறங்கிய இன்ஸ்பெக்டர் வந்த காரியத்தை விளக்கித் தம்முடன் ரங்கநாதனை வரும்படி அழைத்தார். அந்த வரவேற்பு ரங்கநாதனுக்கு நிம்மதியையே அளித்தது. இனி அவன் பயந்து எங்கும் ஓட வேண்டிய அவசியமில்லையல்லவா?

ஆனால் அவன் போகும்பொழுதுகூட, பத்மா வாய் திறக்கவில்லை. எத்தனையோ இடங்களில் யாரையாவது கைது செய்யும் போது, வீட்டிலிருக்கும் பெண்களெல்லாம் ஓலமிடுவதை இன்ஸ்பெக்டர் பார்த்திருக்கிறார். இப்படி ஒரு வார்த்தைகூடப் பேசாமல் தன் கணவனை அனுப்பும் மனைவியை அவர் கண்டதேயில்லை!

அப்புறம் என்ன, எல்லாம் வெகு வேகமாகத்தான் நடந்தது. ஏழு வருஷம் சிறைவாசம் என்று கோர்ட்டார் தீர்ப்பளித்தார்கள். சிறையில் நன்னடத்தைக்காக— ஆமாம், நன்னடத்தைக்காகத்தான்!— இரண்டு வருஷங்கள் கழித்துக்கொண்டு ஐந்தாவது வருஷமே ரங்கநாதனை விடுதலை செய்தார்கள். முதலில் சன்னியாசம் வாங்கிக்கொண்டு எங்கேயாவது போய்விடுவது என்று தீர்மானித்தான் ரங்கநாதன். ஆத்மஹத்தி செய்துகொண்டு பத்மாவுக்கு மேலும் அபகீர்த்தியைத் தேடி வைக்க அவன் துணியவில்லை. வெளிவந்தவுடனேயே ரங்கநாதனுக்காகத் தயாராய்க் காத்துக் கொண்டிருந்த அண்ணன் சாரங்கன் தன்னுடைய வீட்டுக்கு அவனை அழைத்துப் போனான். அங்கே கருணையே உருவான மதனியும், அன்பைப் பொழியும் அண்ணனுடைய குழந்தைகளும், அவனுடைய மனப் புண்ணை



ஒருவாறு ஆற்றிக்கொள்ள உதவினார்கள். கடைசியில் "நாம் வாழக் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்!" என்று ஒரு வித திருப்தி அடைந்தான் ரங்கநாதன்.

3

இப்படி யெல்லாம் அவன் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிய பிறகு, "நேரமாய் விட்டது; நாதஸ்வரக்காரன் இப்பொழுது கெட்டி மேளம் வாசித்துக் கொண்டிருப்பான். வனிதாவின் கழுத்தில் மஞ்சள் கயிறு ஏறியிருக்கும்!" என்று தனக்குள் சொல்லிக் கொண்டே ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

தன்னுடைய ஒரே மகளின் கல்யாணத்திற்குக் கூட வரக்கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டாளே! 'அப்பா!' என்று உறவு கொண்டாடிக் கொண்டு உரிமையுடன் வரவில்லை; எங்கோ ஒரு மூலையில் ஒளிந்திருந்து பார்க்கிறேன் என்று மானத்தையும் விட்டுக் கெஞ்சிக் கேட்டனுப்பியும் முடியாது என்று சொல்லி விட்டாளே!

நிராசையுடன் கொட்டிக் கொட்டி அளந்தாலும் குறுணி பதக்காகுமா? உச்சி வெய்யில் அவனுடைய முதுகில் சுரீரென்று உறைத்தது. கல்யாண விருந்து நடந்து கொண்டிருக்கும் என்ற நினைவு வந்தவுடன், அவன் வயிறும் பசித்தது. காலை, கடலூரில் ரயிலிலிருந்து இறங்கியவுடன் ஒரு கப் காப்பி சாப்பிட்டு விட்டு, ஒரு வாடகை சைக்கிளை எடுத்துக்கொண்டு மனச் சாந்திக்காகக் கடற்கரைக்கு வந்தவன் அவன். சென்னையில் இருக்கப் பிடிக்காமல் ஊரைவிட்டு ஓடி வந்துவிட்டான். எங்கு போனாலென்ன, அவன் மனம் அவனுடன்தானே வருகிறது!

"ஈச்வரா! என்றுதான் எனக்கு அமைதி கிட்டுமோ!"

இவ்வாறு எண்ணிக்கொண்டே சைக்கிளைப் பிடிக்கப் போன ரங்கநாதன் தடுக்கி விழுந்தான்.

* * *

அதே சமயத்தில் கல்யாண வாசலில் தற்செயலாகத் தடுக்கி விழுந்தாள் பத்மா. அருகிலிருந்த அவள் தமையன் தாங்கிப் பிடித்துக் கொண்டான். "ஏன், நீ சாப்பிட்

டாயோ, இல்லையோ? முகூர்த்தமாகி எத்தனை நாழிகை ஆகிறது? இப்படி அழுதால் பாக்கிக் கல்யாணம் முழுவதும் நடக்க வேண்டாமா?" என்று அன்புடன் அவன் கடிந்து கொண்டான்.

"பின் என்ன பண்றது, அண்ணா? தாயார், தகப்பனார் இருவருடைய வேலையையும் நான் ஒருத்திதானே செய்ய வேண்டியிருக்கு?" என்றாள் பத்மா.

"அது உன் குற்றந்தானே? நீ சம்மதித்திருந்தால் தன் பங்கைச் செய்ய ரங்கநாதன் வந்திருப்பா னல்லவா?"

"சரிதான்; ஊரார் என்ன சொல்வார்கள், அவரைப் பற்றி?"

"ஊராருக்கு வேறு வேலையென்ன, சதா எதாவது வம்படிக்க வேண்டும். சென்னையை விட்டுக் கடலூருக்கு வந்து இத்தனை வருஷம் இருந்ததுபோல் இப்பொழுது திரும்பிச் சென்னைக்குச் சென்று கணவனுடன் புது வாழ்வு நடத்தக் கூடாதா?"

"அது சரி; தந்தை இறந்துவிட்டதாக நினைத்துக் கொண்டிருக்கும் வாசுவுக்கும், வனிதாவுக்கும் நான் என்ன பதில் சொல்வேன்?"

"எத்தனை நாளைக்கு உண்மையை மறைப்பது சாத்தியம், பத்மா? தங்கள் தகப்பனை மன்னித்து விடும்படி நீ அவர்களுக்குச் சொல்லக் கூடாதா?"

"குழந்தைகள் தந்தையை மன்னிப்பது எங்காவது உண்டா?—நல்ல வேடிக்கை! அவர்களை அந்த இக்கட்டில் வைக்க எனக்கு இஷ்டமில்லை. இறந்த தந்தையை ஒரு லக்ஷ்ய புருஷராகவே உலகத்தில் கருதி இருர்கள். அந்தக் கனவைச் சிதறடிக்காமலிருப்பதே எல்லோருக்கும் நலம்."

"காலஞ்சென்ற ஒரு லக்ஷ்ய பிதாவைக் காட்டிலும் உயிருள்ள ஒரு தந்தை மேலல்லவா?"

"உயிருடன் இருந்து உதவுவதைக் காட்டிலும், இறந்த ஒரு லக்ஷ்ய புருஷராக விளங்குவது எவ்வளவோ சிறந்தது. குழந்தைகள் மன்னித்தாலும் உலகம் அவரை மன்னிக்காது. அவருடைய பெயருக்கு ஏற்பட்ட களங்கம் என்றும் நீங்காது. மற்றக் குழந்தைகளின் தந்தையைப்போல் அல்ல தங்கள் தந்தை என்று அவரைப் பற்றிய ஒரு இழிவான எண்ணமும் குழந்தைகள் மனதில் குடிகொண்டுவிடும். இதனால் ஒரு தாழ்வு மனப்பான்மையும், மோசக்காரரின் மக்கள் என்ற அவமானமும் அவர்களைச் சேர்ந்துவிடும்!" என்றாள் பத்மா.

"அப்படியானால் உன் கணவனிடம் உனக்கு இரக்கமே இல்லையா?"

"இரக்கம் இருக்கட்டும், இல்லாமற் போகட்டும். குழந்தைகள் சம்பந்தப்பட்ட மட்டில் அவர் இனியும் இறந்தவராகவே இருக்க வேண்டியதுதான்! என்னுடைய குழந்தைகளுக்காக நான் என் மனதைக் கல்லாக்கிக் கொண்டுவிட்டேன். நான் கடமையில் தவறியவள் என்று நீங்கள் என் மீது குற்றஞ் சாட்டலாம். நீங்களே சொல்லுங்கள்—எது கடமை?" என்று கேட்டாள் பத்மா.

அவள் குரல் தழுதழுத்தது. ஆனால், கண்கள் நீரைக் கக்கவில்லை; ஏனெனில் அவள் நெஞ்சம் உலர்ந்திருந்தது!

அலட்சியம் இல்லை!

•

நகர சபைத் தலைவர் தம் சொந்த அலுவல்களை முன்னிட்டுத் திடீரென்று ஒரு நாள் தமது பதவியை ராஜிநாமாச் செய்தார். ஆனால் இந்தச் சம்பவத்தைப் பெரிதாக மதிக்காத உள்ளூர் தினப்பத்திரிகை ஒன்று ராஜிநாமாச் செய்தியை ஒரே வரியில் சுருக்கிப் பிரசுரித்து விட்டது.

மாஜி நகரசபைத் தலைவர் பத்திரிகைச் செய்தியைப் பார்த்ததும் மிகவும் கோபத்துடன் அந்தப் பத்திரிகை ஆசிரியரைத் தேடிச் சென்றார்.

"வாருங்கள். என்ன விசேஷம்? உட்காருங்கள்!" என்று பத்திரிகை ஆசிரியர் அவரை வரவேற்றார்.

"உபசாரம் எல்லாம் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். உங்களுக்கு என்ன அவ்வளவு அலட்சியம்? என் ராஜிநாமாச் செய்தியை ரொம்பக் கேவலப்படுத்தி விட்டீர்களே! இது கொஞ்சங்கூட நன்றாயில்லை!" என்றார் மாஜி நகரசபைத் தலைவர் கோபத்துடன்.

ஆசிரியர் மிகவும் சாவதானமாக, "உங்களையோ உங்கள் ராஜிநாமாச் செய்தியையோ கொஞ்சமும் அலட்சியம் செய்யவில்லையே! வாஸ்தவத்தில் அதற்கு விசேஷ அந்தஸ்து கொடுத்தே பிரசுரித்திருக்கிறேன். 'நகர அபிவிருத்திப் பகுதி'யில் ராஜிநாமாச் செய்தி பிரசுரிக்கப்பட்டிருப்பதைக் கவனிக்கவில்லையா?" என்றார்.

சென்னை - தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் நடந்து வரும்
அகில இந்திய காதி, சுதேசி & தொழிற் பொருட்காட்சியில்

நெ. 378

ஸாம்ஸன் கம்பெனியின் ஸ்டேப்ரைட்

ஸ்டாலுக்கு விஜயம் செய்தீர்களா?

அவசியம் தங்கள் குடும்பத்துடன் பார்வையிட வேண்டிய ஸ்டால். மவுண்டு ரோடு வழியாக பொருட்காட்சி சாலையில் செல்லும் பிரதான வாயிலில் உங்களை வரவேற்று அழைக்கும் ஸ்டால் *அதுதான்!*

வீடுகளுக்கும், விடுதிகளுக்கும், ஹோட்டல்களுக்கும் இன்றியமையாத ஸ்டேப்ரைட் பாத்திரங்கள் விதவிதமான தினுசுகளில் ஏராளமாக வந்து குவிந்துள்ளன

குத்தடுக்குகள், டம்ளர்கள், கரண்டிகள், காப்பி பில்டர்கள், அன்னவட்டிகள், கோப்பைகள், ஸ்பூன்கள், ஸாஸ்பேன்கள், போஜனத் தட்டுகள், டிபன் தட்டுகள் பக்கெட்டுகள், பேஸின்கள், சம்படங்கள், கிண்ணங்கள்
முதலிய உபயோகமான பாத்திரங்கள்

பம்பாய் தேவிதயாள் கம்பெனியாரால் தயாரிக்கப்பட்டவை

ஸ்டேப்ரைட்டின் சில விசேஷ அம்சங்கள்

★ பளபளப்பாகக் கண்ணாடிபோன்ற மெருகுடையது
★ கீழே விழுந்தால் நசுங்காது, உடையாது
★ துருப் பிடிக்காது
★ அதில் வைக்கப்படும் பண்டங்கள் கச்சிப் போகாது
★ வெகு சுலபமாக சுத்தமாகக் கூடியது
★ வெள்ளியின் அழகும் இரும்பின் உறுதியும் கொண்டது
★ நீண்டகால உபயோகத்திற்கு வெகு சிக்கனமானது

இன்றே ஒருமுறை விஜயம் செய்து உங்களுக்குப் பிடித்தமானதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்

•

சமஸ்தானங்கள் இலங்கை உள்பட தென்னிந்தியா பூராவுக்கும்
பூரண விற்பனை ஏஜண்டுகள்:

ஸாம்ஸன் & கம்பெனி லிமிடெட்

8 - 22, பிராட்வே (த. பெ. 1219) மதராஸ் - 1

போன்: 4521 :: தந்தி: BARAPASH

அந்த நாளும் வந்திடாதோ!

ஸோமாஸ்

"**ஸா**ர், வாருங்கள்! நல்ல பச்சரிசி — நெல்லூர்ப் பச்சரிசி — வந்திருக்கிறது. நீங்கள் நம்ம கடைக்கு வருவதையே நிறுத்திவிட்டீர்களே? நான் இப்பொழுது ஒரு மூட்டை அரிசி உங்கள் வீட்டுக்கு அனுப்பிவைக்கட்டுமா? பணத்தைப் பற்றி யோசனை செய்யாதீர்கள். அது எங்கே போய்விடும்? யாரடா, அங்கே? முனுசாமி, ஐயா வீட்டுக்கு நெல்லூர்ப் பச்சரிசி மூட்டை ஒன்று கொண்டுபோய்ப் போட்டுவிட்டு வா!"

கடைக்காரரின் இந்தக் கட்டாய சேவைக்கு அந்த ஐயாவினால் மறுத்து ஒன்றும் சொல்ல முடியவில்லை. இருந்தாலும் அவரும் சமாளிக்க முயன்றார்.

"ஐயா, கடைக்காரரே! நீங்கள் சொல்லுவதை நம்பி ஒரு மூட்டை அரிசி வாங்கிவிட்டு, அப்புறம் அது நன்றாயில்லை என்றால் வீண் சிரமம். திருப்பி அனுப்பி வைக்கவேண்டும். ஆகையினால் கொஞ்சம் 'சாம்பிள்' கொடுத்தீர்களானால் ......!" என்று கொஞ்சம் இழுத்தாற்போல் கூறினார்.

"அது என்ன, அப்படிக் கேட்கிறீர்கள்? இரண்டு படி அரிசி தனியாக வீட்டுக்கு அனுப்பி விடுகிறேன். சமைத்துப் பாருங்கள்; நன்றாயில்லை என்றால் சொல்லுங்கள். நான் ஐயா வீட்டுக்கு ஆளை அனுப்பி மூட்டையை எடுத்து வரச் சொல்லுகிறேன். அரிசி ரொம்பப் பழைய அரிசி. ஐயாவுக்கு மோசமான சரக்கை எப்போதாவது அனுப்பியிருக்கிறேனா? முதலில் நம்ம கடையில் ஏதுங்க மோசமான சரக்கு?"

"அது சரி, கேற்றுத்தான் பாக்ஷா சாயபு ஒரு மூட்டை அரிசி அனுப்பி வைத்தார். அணமட்டும் சொல்லியும் கேட்கவில்லை. பணம் 'அடுத்த மாதம் வாங்கிக் கொள்ளுகிறேன்' என்று சொல்லிவிட்டார். அவருக்கு வேறு பாக்கி, உங்களுக்கு வேறு பாக்கி...!"

"அதைப்பற்றியா நீங்கள் யோசிக்கிறீர்கள்? மெதுவாகக் கொடுங்கள். பாக்கிக்காக உங்களை நான் தொந்தரவு செய்தால் கேளுங்கள். ஐயாவுடன் இத்தனை நாள் பழகிவிட்டு இதுகூட நான் செய்ய வேண்டாமா? ஐயா இதைப்



பற்றி யோசனையே செய்ய வேண்டாம். நல்ல சரக்கு வந்தால் எனக்கு உடனே ஐயா ஞாபகம்தான் வரும்!" என்று கடைக்காரர் அடித்துச் சொல்லி, ஐயா வீட்டுக்கு ஒரு மூட்டை நெல்லூர் அரிசி அனுப்பி வைத்து விட்டார்.

ஐயாவும் கடைக்காரரின் வற்புறுத்தலை மீற முடியாமல் சம்மதித்து விட்டார். பிறகு எங்கெல்லாமோ சுற்றிவிட்டு வீட்டுக்குப் போக, பஸ் ஸ்டாண்டுக்கு வந்தார்.

"திருவல்லிக்கேணி! திருவல்லிக்கேணி!" "மயிலாப்பூர்!" "அடையார்!" "சைதாப் பேட்டை!" என்று பலவிதக் குரல்கள் அலறிக் கொண்டிருந்தன.

"ஏன் ஸார், நீங்கள் மயிலாப்பூரா?"

"ஸார், சைதாப்பேட்டை! ஏறுங்கள், ஸார்!"

இப்படிப் பல குரல்கள் கூவின.

ஐயா பெரம்பூர் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தார். அந்த பஸ்ஸில் ஐயாவும் பஸ் டிரைவரும், பஸ் கண்டக்டரும்தான் கூட்டம். கூட்டம் சேருவதற்காக பஸ் கண்டக்டர் ஒவ்வொரு இடத்திலும் நிறுத்தி, "சேர வாரும் ஜகத்தீரே!" என்று ஆள் சேர்த்துக் கொண்டே ஆற அமரப் பெரம்பூர் போய்ச் சேர்ந்தான்.

அன்று காலை ஐயா எழுந்து காப்பி சாப்பிட்டுவிட்டுப் பேப்பர் படிக்கலாம் என்று சாய்வு நாற்காலியில் அமர்ந்தார்.

உடனே திபுதிபு வென்று ஐந்தாறு பேர் அவர் வீட்டுக்குள் நுழைந்தார்கள்.

ஐயாவுக்கு ஒன்றும் புரியவில்லை. "வாருங்கள்! என்ன விசேஷம்?" என்று கேட்டார்.

"விசேஷம் ஒன்றும் இல்லை. உங்கள் பையனைப் பள்ளிக்கூடத்திலே சேர்க்கவில்லையா? ஐந்து வயதுக்கு மேலே ஆகிவிட்டது போலிருக்கிறதே!" என்றார் வந்தவர்களில் ஒருவர்.

"ஆமாம், பையனுக்கு வயது ஏழாகிறது. வீட்டிலேயே தான் படிப்பு சொல்லித் தருகிறேன். இன்னும் கொஞ்சம் போகட்டும், பள்ளிக்கூடத்தில் சேர்க்கலாம் என்றிருக்கிறேன். ஏன்? என்ன விசேஷம்?"

"ஒன்றுமில்லை. உங்கள் பையனை நம்ம பள்ளிக்கூடத்திலேயே சேர்க்க வேண்டும்.

அதற்காகத்தான் வந்தோம். நம்ம பள்ளிக்கூடம் உங்கள் வீட்டுக்குச் சமீபமாகவே இருக்கிறது. உங்கள் சிவஞானம் கூடத் தமது பையனை நம்ம பள்ளிக்கூடத்திலேதான் சேர்த்திருக்கிறார்!''

''இருக்கட்டும், கொஞ்சம் போகட்டுமே! மூன்றாவது தெருவில் இருக்கும் பள்ளிக்கூடத்து மானேஜர் கூட என்னிடம் பையனைத் தமது பள்ளிக்கூடத்தில் சேர்த்து விடும்படி போகும்போதும் வரும்போதும் வற்புறுத்துகிறார். எங்கள் வீட்டு எதிரிலேயே கார்ப்பொரேஷன் ஸ்கூல் தலைமை உபாத்தியாயர் குடியிருக்கிறார். அவர் வேறு தாமே பையனைப் பள்ளிக்கூடத்துக்கு அழைத்துச் சென்று, மீண்டும் கொண்டு வந்து வீட்டில் விடுவதாகச் சொல்லுகிறார். எதற்கும் நான் யோசித்துச் சொல்லுகிறேனே?'' என்று அந்தக் கூட்டத்தை மிகவும் சிரமத்துடன் சமாளித்து அனுப்பி வைத்தார்.

உடனே ஐயாவின் நெடுநாளைய நண்பர் ஆசீர்வாதம் காட்சி அளித்தார்.

''வாருங்கள், மிஸ்டர் ஆசீர்வாதம்! என்ன, காலை வேளையில் இப்படி......!''

''என்னமோ, ஸார்! உங்கள் தயவு இருக்க வேண்டும். அவ்வளவுதான். நீங்கள்தான் என் விஷயத்தை அடியோடு மறந்து விட்டீர்களே!''

''வீட்டு விஷயம்தானே! இன்னும் யாருமே வந்து பார்க்கவில்லையா? 'டு லெட்' போர்டு போட்டிருக்கிறீர்களா?''

''ஆகா! போட்டிருக்கிறேன். யாரோ இரண்டொருத்தர் வந்து வீட்டைப் பார்த்தார்கள். ஒருவராவது நிச்சயமாக ஒன்றும் சொல்லவில்லை. மூன்று மாதம் ஆகிவிட்டது. வீடு வெறுமனே பூட்டிக் கிடக்கிறது!''

''என் மருமானுக்கு ஒரு வீடு வேண்டும். நான் அவனை உங்கள் வீட்டை வந்து பார்க்கச் சொல்லுகிறேன். அவன் வந்தால் உங்களுக்கு நல்ல குடித்தனமாயிருக்கும். வாடகை என்னவென்று சொல்லவில்லையே!''

''வாடகையா? அது இருக்கட்டும், ஸார்! நீங்கள் கொடுத்ததை வாங்கிக் கொள்ளுகிறேன். கொஞ்சம் கவனியுங்கள். நான் வரட்டுமா?'' என்று சொல்லிக் கை கூப்பிய வண்ணம் ஆசீர்வாதம் வீட்டுக்குப் புறப்பட்டார்.

இந்த நாளில்

''ஏன் ஸார், மிஸ்டர் சிவஞானம்! நீங்கள் அரிசிக்கு என்ன செய்கிறீர்கள்? ரேஷன் அரிசி போதாதே!'' என்று கேட்டுக் கொண்டே ஐயா சிவஞானத்தின் தோளைப் பிடித்து உலுக்கினார்.



''ஓ, வாருங்கள்! அந்த வயிற்றெரிச்சலை ஏன் கேட்கிறீர்கள்? ரேஷன் அரிசி நாலு நாளைக்குத்தான் வருகிறது: அப்புறம் பிளாக் மார்க்கெட் அரிசிதான்! அதுவும் இந்த ஒரு மாதமாகக் குதிரைக் கொம்பாயிருக்கிறது. எல்லா ஊர்களிலும் மறுபடியும் ரேஷன் வந்து கொண்டிருக்கிறதல்லவா? அதனால் ஒரு மணி அரிசிகூட வாசலில் வருவதில்லை!'' என்றார் சிவஞானம்,

''அப்படியானால் இப்பொழுது நீங்கள் என்ன செய்கிறீர்கள்?''

''ஒருவேளை சாப்பாடு. இன்னொரு வேளை ஏதாவது டிபன் பண்ணுவது என்று வைத்துக் கொண்டிருக்கிறேன்.''

''ரேஷன் கடைகளிலேயே இரகசியமாகச் சில பேருக்கு அரிசி கொடுக்கிறான் என்று சொல்லிக் கொள்ளுகிறார்களே, அது வாஸ்தவமா?'' என்று ஒரு கேள்வியை ஐயா தூக்கிப்போட்டார்.

''அது உண்மையில்லை என்று எப்படிச் சொல்ல முடியும்? ஆனால் நம்மைப் போன்ற பயங்கொள்ளிகளுக்கு அவனைக் கேட்கத் தைரியம் வருவதில்லை'' என்று கூறிச் சிவஞானம் அசடு வழிந்தார்.

''முன்னொருகாலத்தில் இந்தக் கடைக்காரன்களை வருந்தி வருந்திக் கூப்பிட்டுக் கொண்டிருந்தான்கள்! இப்பொழுது என்னடா என்றால் ஒரு படி அரிசி 'எக்ஸ்ட்ரா'வாக வேண்டுமானால் கூட அவனைக் கெஞ்சி அபிநயம் பிடித்தாக வேண்டியிருக்கிறது!'' என்று தமக்குத் தெரிந்த உண்மையை வெளியிட்டார் ஐயா.

''சரி. நான் இப்படி வரட்டுமா? அந்த மூலைக் கடைக்காரன் 'இருட்டின அப்புறம் வாருங்கள், ஸார்! பார்க்கலாம்' என்று சொல்லியிருக்கிறான். போய்ப் பார்க்கிறேன்!'' என்று சொல்லி விட்டுச் சிவஞானம் விடை பெற்றுக் கொண்டார்.

• • •

''என்ன, மிஸ்டர் சர்மா! அப்புறம் பையல்களுக்கு ஏதாவது இடம் கிடைத்ததா?'' என்று கேட்டார் ஐயா.

''என்ன கேட்கிறீர்கள்? இடம் கிடைத்ததா என்றுதானே? அந்தப் பேச்சே பேசப்படாது. பையல்களைக் காலேஜிலும் பள்ளிக்கூடத்திலும் சேர்க்க வேண்டும் என்றுதான் இவ்வூருக்குப் புறப்பட்டு வந்தேன். எந்தப் பள்ளிக்கூடத்திலும் இடம் இல்லை என்ற பல்லவிதான்.

காலேஜூக்கு பக்கத்திலே கூடப் போக முடியாது. இதற்காக எத்தனை பேரைப் போய்ப் பார்க்கிறது!'' என்று அலுப்புடன் கூறினார் சர்மா.



"உங்களுக்கு அந்த வீடாவது கிடைத்ததா? போய்ப் பார்த்தீர்களா?''

"உங்கள் நண்பர் ஆசீர்வாதத்தைப் பார்த்தேன். அவருக்குச் சொந்த வீடுகள் ஐந்து இருக்கின்றனவாமே! ஒரு வீடு அடுத்தமாதம் காலியாகலாமாம். அதற்கு முன் பணம் ஆயிரம் ரூபாய் கேட்கிறார். அதற்கு சல்லி குறைத்தாலும் வீடு தரமாட்டாராம்!''

"ஆமாம், ஸார்! இப்பொழுது எல்லா இடங்களிலும் அப்படித்தான் இருக்கிறது. ஆயிரம் ரூபாய் முன் பணம் கொடுத்தாலாவது உங்களுக்கு நிச்சயமாக வீடு கிடைத்தால் பாதகமில்லையே! அதிலும் சிலர் ஏமாற்றி விடுகிறார்கள்! ஆசீர்வாதம் என் பழைய நண்பர். அவர் சொன்ன சொல் தவற மாட்டார். நாணயமுள்ளவர். உங்களுக்கு வீடு வேண்டும் என்றால் பணத்தைப் பற்றிச் சிந்திக்கக்கூடாது. நான் போய் வருகிறேன். இன்னும் பஸ்ஸுக்கு வேறு தவம் இருந்தாக வேண்டும்; அரை மணி காத்துக் கிடந்தால் தான் பஸ் கிடைக்கும்'' என்று சொல்லி விட்டு ஐயா பஸ் ஸ்டாண்டுக்கு வந்தார்.

அவருடைய அதிர்ஷ்டம் அரை மணியில் 7-ம் நம்பர் பஸ் வந்து நின்றது! உடனே ஒரு மாபெருங் கூட்டம் அந்த பஸ்ஸை எதிர் கொண்டு அழைத்தது. ஐயா அவர்கள் கால் இன்னொருவரின் பூட்ஸ் காலுக்கு அடியில் அகப்பட்டுக் கொண்டு அவர் காலைத் தூக்கி நின்று ஆடும்படியாயிற்று.

"ஏறாதே! ஏறாதே! ஒரே ஒரு ஆள் தான்!'' என்று கண்டக்டர் ஓலமிட்டான்.

அந்தக் கூட்டத்தில் இருந்த ஒவ்வொருவரும் அந்த 'ஒரு ஆள்' ஆக முயன்று பஸ் வாசலை நெருக்கினர். கடைசியில் ஐயா பெரும் முயற்சி செய்து முண்டியடித்து வெற்றிபெற்று விட்டார்!—ஆம், கூட்டத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு தம் யதாஸ்தானத்தில் வந்து நின்று கொண்டார்! பஸ் புழுதியைக் கிளப்பிக் கொண்டே மறைந்தது!

காலக்ஷேபம்

விறுவிறுப்பு!

ஒரு நாடகம் வெகு நேரமாக நடந்து கொண்டிருந்தது. அதைப் பார்க்க வந்த பிரமுகர் அலுப்படைந்து எழுந்து போகத் தொடங்கினர்.

நாடகக் காரியதரிசி:— ஸார், அடுத்த காட்சி மிகவும் விறுவிறுப்புள்ளது. அப்படியே திடுக்கிட்டுப் போவீர்கள்!

பிரமுகர் (வெறுப்புடன்):— அதை நாடகாசிரியரே பார்த்துத் திடுக்கிடட்டும்!

★

சரிதான்!

குமாஸ்தா:— ஸார், இன்றைக்குச் சாயங்காலம் ஒருமணி முன்னதாக வீட்டுக்குப் போக உத்தரவு கொடுப்பீர்களா?

முதலாளி (கோபத்துடன்):— முடியாது, இன்றைக்கு வேலை நிறைய இருக்கிறது.

குமாஸ்தா:— சரி, ரொம்ப நல்லதாய்ப் போயிற்று. என் மனைவி இன்று சாயங்காலம் ஜவுளி வாங்கப் போக வேண்டும் என்று சொன்னாள். இன்று அவகாசம் கிடைக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய விருப்பமும்!

ஓகோ!

"ராமு இன்னும் இரண்டு வாரங்கள் வரையில் ஆஸ்பத்திரியில்தான் இருப்பான்.''

"ஏன், உனக்கு அது எப்படித் தெரியும்? டாக்டரைப் பார்த்தாயா?''

"இல்லை, அவனுக்கு உபசாரம் செய்து கொண்டிருக்கும் நர்ஸைப் பார்த்தேன்!''

★

சரியான யோசனை!

மேடைப் பிரசங்கி ஒருவர் வெகு நேரம் பேசினார். கூட்டத்தில் இருந்தவர்களுக்கு அலுப்பு உண்டாகிவிட்டது. ஆனால் பிரசங்கி அதைப் பொருட்படுத்தாமல் பேசிக் கொண்டே போனார்.

பிரசங்கி:— சபையோர்களே, நான் இது வரையில் சொன்ன விஷயங்கள் உங்களுக்கு மட்டும் அல்ல; உங்களுக்குப் பின்னால் வரும் சந்ததிகளுக்குந்தான் சொல்லுகிறேன்!

ஒரு வாலிபன் (தனக்கு அருகிலிருந்தவனைப் பார்த்து):— அப்படியானால் வருங்கால சந்ததிகளுக்கு இந்தப் பிரசங்கத்தை விட்டு விட்டு நாம் போவோமா?

வளரும் தமிழ்

பழந் தோட்டம்

"ஜே ஹிந்த்!" என்று சொல்லிக் குதித்தது ஒரு மாம்பழம்.

"ஆ, இப்போதாவது எனக்கு விமோசனம் பிறந்ததே!" என்று சொல்லிக் கொண்டே ஒரு வாழைப்பழம் எழுந்து ஓடிப் போய் மாம்பழத்தைக் கட்டிக் கொண்டது.

"உனக்கு மாத்திரமா விமோசனம்? எனக்குந்தான்!" என்று சொல்லிக் கொண்டே பலாப்பழம் எழுந்து ஓடிப்போய் வாழைப் பழத்தையும் மாம்பழத்தையும் கட்டிக் கொண்டது.

மூன்றும் ஒன்றையொன்று கட்டித் தழுவிக் கொண்டு, "ஆடுவோமே! பள்ளுப் பாடுவோமே!" என்று ஆனந்தக் கூத்தாடத் தொடங்கின.

ஸ்ரீ மு. அருணாசலம் எழுதிய பழந் தோட்டம் என்ற புத்தகத்தைப் படிக்கக் கூடிய சக்தி மாத்திரம் தமிழ் நாட்டுப் பழங்களுக்கு இருக்குமானால் அவை மேற் கண்ட விதமாக ஆனந்தக் கூத்தாடத்தான் ஆடியிருக்கும்.

* * *

பழங்களுக்கு நம் நாட்டில் எப்போதுமே ஒரு விசேஷ மதிப்பு உண்டு.

நம்முடைய பாரத தேசமே பண்டைக் காலத்தில் ஜம்பூத்வீபம் என்றும் நாவலந் தீவு என்றும் ஒரு பழத்தை அடிப்படையாக வைத்து வழங்கப்பட்டது.

அப்பர் பெருமான் இறைவனைப் புகழ்ந்து பாடும்போது, "கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி!" என்று பாடியிருக்கிறார்.

இவ்விதமாகப் பண்டைக்காலத்தில் நம் நாட்டில் பழங்களுக்கு ஒரு தனி மதிப்பும் மகிமையும் இருந்தது.

இந்தியா அந்நிய நாட்டுக்கு அடிமையான பிறகு மற்ற எல்லாக் கலைகளும் தொழில்களும் க்ஷீணமடைந்தது போலப் பழ விளைவும் சீர்கேடு அடைந்தது.

ஒரு சிறு கணக்குப் பார்ப்போம். சென்ற இருபது வருஷத்தில் பழ உற்பத்தியை அதிகப்படுத்துவதற்காக இந்திய சர்க்கார் ஏறக்குறைய இருபத்துமூன்று லட்ச ரூபாய் செலவழித்தார்களாம். அதன் விளைவாக ஏற்பட்ட அபிவிருத்தி என்ன? 1918—1919ல் 57 லட்சம் ஏக்கராவில் பழ விருட்சத் தோட்டங்கள் இருந்தன. இது 1928—29ல் ஐம்பது ஏக்கரா ஆயிற்று. 1933—34ல் 48 லட்சம் ஏக்கராவுக்கு வந்து சென்ற வருஷம் 45 லட்சம் ஆகிவிட்டது.

23 லட்ச ரூபாய் பணத்தைச் செலவு செய்து இப்படித் தலைகீழாக அபிவிருத்தியை உண்டாக்கக் கூடிய வித்தை, அப்போதிருந்த இந்திய சர்க்காரைத் தவிர வேறு யாருக்கு வரும்?

* * *

இந்திய சர்க்கார் 23 லட்ச ரூபாய் செலவழித்துச் சாதிக்க முடியாத காரியத்தை ஸ்ரீ மு. அருணாசலம் எழுதிய **பழந் தோட்டம்** என்ற புத்தகம் சாதித்து விடும் என்பது நிச்சயம்.

தோட்டம் போடுவது எப்படி, நீர்ப் பாய்ச்சுவது எப்படி, உரம் போடுவது எப்படி, பழ மரங்களுக்கு வரும் நோய்களைத் தடுப்பது எப்படி?—பொதுவாகப் பழத் தோட்டத்தைப் பற்றி ஒரு விஷயத்தைக் கூடப் பாக்கி விடாமல் ஸ்ரீ அருணாசலம் இந்தப் புத்தகத்தில் வெகு தெளிவாக விளக்கி எழுதியிருக்கிறார்.

தோட்டத்தைப் போட்டு, பழங்களை அதிகமாக உற்பத்தி செய்து விட்டால் போதுமா? அவை விற்க வேண்டாமா? தோட்டக்காரர்களுக்கு நல்ல லாபம் கிடைக்க வேண்டாமா?

அதைப் பற்றியும் ஸ்ரீ அருணாசலம் இதில் எழுதியிருக்கிறார். தோட்டம் போடுவதை எப்படி லாபமான தொழிலாகச் செய்யலாம் என்பதைப் பற்றி அவர் எழுதியிருப்பது தமிழ்நாட்டுப் பழத் தோட்டக்காரர்களுக்கு எவ்வளவோ உற்சாகத்தை விளைவிக்கக் கூடியது.

இந்தப் புத்தகத்தில் உள்ள தமிழ் நடையைப் படிக்கும்போது மா, பலா, வாழை முதலிய முக்கனிகளையும் நாம் சுவைத்துச் சாப்பிடுவது போல அவ்வளவு மதுரமாக இருக்கிறது.

ஸ்ரீ மு. அருணாசலம் இந்தப் புத்தகத்தின் மூலம் தமிழ்நாட்டுக்கு ஒரு ஒப்பற்ற தொண்டைச் செய்திருக்கிறார்.

கட்டாயமுமில்லை! எதிர்ப்புமில்லை!!

ஹிந்தி பாஷையை இஷ்டமுள்ளவர்கள் கற்றுக்கொள்ள ஆக்ஷேபணையோ, எதிர்ப்போ கிடையாது என்பது யாவரும் அறிந்ததே! ஹிந்தி பாஷை பள்ளிக்கூடங்களில் கட்டாயப் பாடமாக வைத்திருப்பதை ஆக்ஷேபிக்கும் ஹிந்தி எதிர்ப்பாளர்கள்கூட இதை வாசிக்கலாம்!

நேரு ஹிந்தி ஆசான்

அல்லது

ஹிந்துஸ்தானி ஸ்வபோதினி

தக்ஷிண பாரத ஹிந்துஸ்தானி பிரசார சபையின் பிரசாரகரும், சென்னை கிருஸ்து பெண்கள் கலாசாலையின் ஹிந்தி போதகாசிரியருமான ஸ்ரீஜத் என். ஆர். சாஸ்திரி பி. ஓ. எல். அவர்களின் புதல்வி ஸ்ரீமதி ரூப்பகம் அம்மாள் அவர்களால் திருத்திப் புதுப்பித்தப் பதிப்பு. பிறர் உதவியின்றித் தமிழைக் கொண்டு நாலே வாரத்தில் நல்ல ஹிந்தி பாஷையை வெகு சுலபமாய்ப் பேசவும், படிக்கவும், எழுதவும் கற்றுக் கொள்ளக் கூடிய உபயோகமான புத்தகம். இதில் தமிழ் மூலமாய் ஹிந்தி உயிர் எழுத்துக்கள், மெய் எழுத்துக்கள், உயிர் மெய் எழுத்துக்கள், கூட்டு எழுத்துக்கள், சிறு வார்த்தைகள், எண்கள், தினசரி உபயோக வார்த்தைகள், பலவித சம்பாஷணைகள் முதலியவை 22-அத்தியாயங்களில் விவரிக்கப் பட்டிருக்கின்றன. இதன் விலை ரூபா 1-8-0. ஒரு காபி ரிஜிஸ்தர் மூலம் அனுப்ப, ரூபா 1-14-0 மணி ஆர்டர் செய்யவும். புத்தகத்தை வி. பி. யில் அனுப்பப்பட மாட்டாது.

●

M. S. ராமுலு கம்பெனி

286, எஸ்பிளனேட் : மதராஸ்

ஜீவான்ஜன்

ரசாயனக் களிம்பு

மிருகக் கொழுப்பு சேராதது



ஜலதோஷம், மார்சளி, உடம்பு வலி முதலிய சகல வேதனைகளுக்கும் நிவாரணமளிக்கிறது

●

தயாரிப்பவர்கள்:

ஜீவான்ஜன் லபாரடரீஸ் லிட்.,

மதராஸ்-14

சோல் ஏஜண்டுகள்:

K. K. பிள்ளை & கோ.,

15, வெஸ்ட்காட் ரோடு,

ராயப்பேட்டை :: மதராஸ்-14



ஏமாந்த சிங்கம்

மாலு

கடுவங்குடிக் காட்டில் மாடுகளும் பறவைகளும் அதிகம். அவற்றின் சுதந்திரத்தைக் கடுவங்குடிக் காட்டு ராஜாவான சிங்கமும் விஷமக்காரக் குரங்கும் அடக்கிவந்தன. அதனால் மாடுகள் மறைந்து மறைந்து, பயந்து பயந்து ஒருவருக்கும் தெரியாமல் மேய்ந்து வந்தன. பறவைகளோ கூடு கட்டிக் குஞ்சுகள் பொரிக்க முடியாமல் கஷ்டப்பட்டன. ஆனால் இரண்டே இரண்டு வாலிப எருதுகள் மட்டும் தைரியமாகச் சேர்ந்து சென்று காட்டில் மேய்ந்து வந்தன. இரண்டு எருதுகளும் எப்பொழுதும் சேர்ந்தே இருந்ததால் அந்த எருதுகளிடம் நெருங்குவதற்குச் சிங்கராஜாவுக்குப் பயமாக இருந்தது.

ஒருநாள் சிங்கராஜா மனதைத் திடப்படுத்திக் கொண்டு எருதுக்களுக்கு நேரே சென்று தன்னுடைய வாலை உயர்த்தி நின்றது. சிங்கராஜாவைப் பார்த்த இரண்டு எருதுகளும் கதிகலங்கிப் போய், "நமஸ்காரம், ராஜா! எங்களால் தங்களுக்கு ஏதாவது ஆகவேண்டுமா?" என்று பணிவுடன் கேட்டன.

"ஆமாம். உங்களால் ஒரு காரியம் ஆகவேண்டும். மரியாதையாக உங்களில் ஒருவர் நாளைக்கு அரண்மனையில் நடக்கும் விருந்துக்குப் பலியாக வர வேண்டும்!" என்றது சிங்க ராஜா.


இதைக் கேட்ட இரண்டு எருதுகளுக்கும் சப்தநாடியும் ஒடுங்கிவிட்டது. என்ன பதில் சொல்லுவது என்றே தெரியாமல் அந்த எருதுகள் பேச்சற்று நின்று விட்டன.

எருதுகள் பேசாமல் நின்று கொண்டிருந்ததைப் பார்த்த சிங்கராஜா, "என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டு ஒரு அதட்டு அதட்டி உருமிற்று.

அந்த உருமல் சத்தத்திலே உணர்வு பெற்ற இரண்டு எருதுகளும் "ராஜாவே, உங்கள் விருப்பப்படியே நடக்கச் சித்தமாக இருக்கிறோம். ஆனால் நாங்கள் இளைத்துத் துரும்பாக இருப்பதால் எங்களில் ஒருவர் வந்தால் ராஜாங்க விருந்துக்குப் போதாது. ஆகையால் தயவு செய்து எங்களோடு நாங்கள் வசிக்கும் மண்டபத்துக்கு வாருங்கள். அங்கே எங்களுடைய சகோதரிப் பசு ஒன்று இருக்கிறது. 'கொழு கொழு' வென்று இருக்கும். அதை உங்களோடு அனுப்பி வைக்கிறோம்" என்று கூறின.

காட்டு ராஜாவான சிங்கம் மிகுந்த சந்தோஷத்துடன் ராஜ நடை நடந்துகொண்டு எருதுகளோடு சென்றது. ஒரு மண்டபத்துக்கு எதிரில் எருதுகள் வந்தவுடன், "ராஜாவே, இதுதான் எங்கள் வீடு. நீங்கள் இங்கேயே நின்று கொண்டிருங்கள். நாங்கள் உள்ளே சென்று பசுவை அனுப்பி வைக்கிறோம்" என்று சொல்லிவிட்டு, மண்டபத்துக்குள் திடுதிடு வென்று ஓடி, அங்கே இருந்த தாய்ப் பசுவிடம் விஷயத்தைச் சொல்லிவிட்டு, "அ...ம்...மா! அ...ம்...மா!!" என்று அலறி அழுதன.

தாய்ப் பசு ரொம்பவும் தைரியக் காரப் பசு. தன் எருதுக் குழந்தைகளைச் சமாதானப் படுத்திவிட்டு, "அட, பட எருதுகளே! நான் இரண்டு நாளாகப் பட்டினி கிடந்து சாகிறேன். இரண்டு சிங்கங்களைப்



பசுவுக்கு விஷயம் ஒருமாதிரி விளங்கிவிட்டது. "என்ன, குரங்காரே! சௌக்கியமா? வாருங்கள்! என்னிடம் சொன்னபடி இரண்டு சிங்கங்கள் கொண்டு வந்திருக்கிறீரா?" என்று மீண்டும் ஒரு போடு போட்டது.

இதைக் கேட்ட சிங்கத்துக்குக் கோபம் கோபமாய் வந்தது. "அயோக்கியக் குரங்கே! உன் போக்கிரித்தனத்தை என்னிடமுமா காண்பித்தாய்?" என்று கோபாவேசத்துடன் கூறி, 'பளார்!' என்று குரங்கின் கன்னத்தில் ஓர் அறை விட்டது. காட்டு ராஜாவின் அறையைத் தாங்க முடியாமல் குரங்கு மயக்கம் போட்டுக் கீழே சுருண்டு விழுந்தது. அதே சமயத்தில் ஒரு பாய்ச்சல் பாய்ந்து தாய்ப்பசுவின் கண்ணுக்குத் தெரியாமல் சிங்கம் காட்டுக்குள் ஓட்டம் பிடித்தது.

பிடித்துக் கொண்டு வாருங்கள் என்றால் ஒரு சிங்கத்தையா பிடித்துக் கொண்டு வந்திருக்கிறீர்கள்? சிங்கத்தையே விழுங்கும் நான் இப்போது உங்களை என்ன செய்கிறேன், பார்!" என்று ஒரு போடு போட்டது.

இதைக்கேட்ட சிங்கம் 'செத்தோம், பிழைத்தோம்' என்று குடல் தெறிக்க ஓட்டம் பிடித்தது.

விஷமக்காரக் குரங்கு அங்கிருந்த மரக்கிளையிலிருந்து 'தொப்' பென்று சிங்க ராஜாவுக்கு நேரே குதித்து, "ஏன் இப்படிப் பயந்துகொண்டு ஓடுகிறீர்கள்? ராஜாவே பயப்படும்படி இந்தக் காட்டில் என்ன நேர்ந்துவிட்டது?" என்று கேட்டது.

சிங்கம் குரங்கினிடம் எல்லாவற்றையும் விவரமாகக் கூறிவிட்டு, 'சிங்கம் விழுங்கிப் பசு' ஒன்று மண்டபத்தில் இருப்பதைப் பற்றியும் சொல்லி முடித்தது.

இதைக் கேட்ட குரங்கு, "அஹ்... ஹஹ்......ஹஹ்ஹா!" என்று ஒரு கேலிச் சிரிப்புச் சிரித்து விட்டு, "ராஜாக்கள் எல்லாமே முட்டாள்கள் என்று சொல்லுவது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது! பசுவாவது சிங்கத்தை விழுங்குவதாவது! வாருங்கள், அந்தப் பசுவைப் பார்க்கலாம்" என்று சொல்லிச் சிங்கத்தை அழைத்துக் கொண்டு வந்தது.


குரங்கையும் சிங்கத்தையும் சேர்ந்தாற்போல் பார்த்தவுடன் தாய்ப்

பொல்லாத வேளை, பாவம்! அன்றைய தினம்தான் சிங்க வேட்டைக்காக வந்திருந்த சர்க்கஸ்காரர்களின் வலையில் போய்ச் சிக்கிக்கொண்டது சிங்க ராஜா.

சர்க்கஸ்காரர்கள் மிகத் திருப்தியுடனும் சந்தோஷத்துடனும் சிங்கத்தைப் பிடித்துக் கொண்டார்கள். அத்துடன் அவர்கள் நிற்கவில்லை; மயங்கிக் கீழே விழுந்து கிடந்த குரங்கையும் பிடித்துக் கொண்டு போய் விட்டனர்.

அப்புறம் கேட்க வேண்டுமா? அவை இரண்டும் ஒழிந்தது, கடுவங்குடிக் காட்டில் வாழ்ந்து வந்த மாடுகளுக்கும் பறவைகளுக்கும் ரொம்ப நல்லதாய்ப் போயிற்று. ஏன் தெரியுமா? அவை எந்த விதமான பயமுமின்றிக் காட்டில் வாழ முடிந்தது.

எந்த சர்க்கஸிலாவது சிங்கத்தின் முதுகில் குரங்கு சவாரி செய்வது போன்ற காட்சி இருந்தால், அவை தான் கடுவங்குடிக் காட்டுச் சிங்க ராஜாவும் விஷமக்காரக் குரங்கும் என்று நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.


"இப்போது அந்த
பக்கப்பலகை
வசீகரமான
நிறத்துடன்
விளங்குகிறது."
"ஆமாம்.. நான் வர்
ணம் வரவழைத்த
போது பிராண்டை
குறிப்பாக சொல்லி
யனுப்பினேன்"
SPE 43 TM
ஷாலிமார் பெயிண்ட்
46
YEARS OF
MANUFACTURING
EXPERIENCE
SHALIMAR
PAINT
என்று அடித்தாற்போல்
சொல்லுங்கள்
Shalimar Paint, Colour & Varnish Co., Ltd. POST BOX 136, MADRAS-1

வீட்டில் ஒரு நாள்

ரா. வீழிநாதன்

"இந்தாருங்கோன்னு! நீங்கள் ஒரு காரியமும் செய்ய வேண்டாம். பேசாமல் இருந்தாலே போதும். உங்களுக்குக் கோடிப் புண்ணியமுண்டு. நீங்கள் சிரமப் படுவது மட்டுமில்லாமல், இருக்கிறவர்களுக்கும் அல்லவா சிரமத்தை உண்டு பண்ணி விடுகிறீர்கள்! உங்களுக்கு வாகாக வழியாகத்தான் எதுவும் செய்ய வாயில்லேயே! பேசாமல் ராமஸ்மரணை பண்ணிக் கொண்டு உட்கார்ந்திருப்பது தானே?" என்று சுப்பம்மாள் ஒரு தடவை இரண்டு தடவை யல்ல, எத்தனையோ தடவை குப்பண்ணாவைக் கோபித்துக் கொள்ளாத தோஷமாகச் சொல்லி யிருக்கிறாள்.

குப்பண்ணாவும், "அபசாரம்! அபசாரம்! இனிமேல் உன் வழிக்கு வந்தால் என் பெயரை மாற்றி அழை" என்று சொல்லி அத்தனை தடவைகளும் தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றது உண்டு.

ஆனால் காரியம் என்று வந்து விட்டால் குப்பண்ணா யாரையும் கேட்காமல் கொள்ளாமல் இறங்கி விடுவார். அவர் வந்த வழி அப்படி! அவரைச் சொல்லி என்ன பயன்?

அன்றைக்கு ஒரு நாள் மத்தியானம், சுப்பம்மாள் உடம்பு சரியில்லாததால் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்திருந்தாள். அன்றைக் கென்று நான் பார்த்து, சலவைக்குத் துணி எடுத்துப் போவதற்காகக் காத்தாயி வந்தாள். "அம்மா, எனக்கு இன்று உடம்பு சரியா யில்லே. நாளைக்கோ, நாளை நீக்கியோ வா, துணி எடுத்து வைக்கிறேன்" என்றாள் சுப்பம்மாள்.

"அம்மா, ராத்திரி வெள்ளாவி வைக்கப் போறேனுங்க. துணியைப் போட்டுவிட்டால் இன்னிக்குச் சரியாக எட்டாம் நாள் கொண்டு வந்து தந்து விடுவேன். அப்புறமானால் பதினைந்து இருபது நாள் பிடிக்கும் அம்மா!" என்றாள் காத்தாயி.

"ஆனால் ஆகட்டும். இப்பொழுது எழுந்து உனக்குத் துணி எடுத்துப் போட எனக்குத் திராணி இல்லை" என்றாள் சுப்பம்மாள்.

குப்பண்ணா எதிர்த்தாற்போலிருந்த 'காமரா' உள்ளில் உட்கார்ந்து குழந்தை சாம்புவுக்குக் கணக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். அவர் காதுகளில் சுப்பம்மாள் சொல்வது அரையும் குறையுமாக விழுந்தது. அவருக்கு அங்கே இருப்புக் கொள்ளவில்லை. உடனே எழுந்து தன் மனைவியின் அருகில் வந்து, "துணிதானே போட வேண்டும்? இதோ, நான் போட்டு விடுகிறேன்" என்றார்.

"வேண்டாம், வேண்டாம். உங்களுக்கு எதற்கு அந்த சிரமங்கள் எல்லாம்? என் உடம்பு கொஞ்சம் குணமானதும் நானே போட்டுக் கொள்கிறேன். நீங்கள் உங்கள் காரியத்தைக் கவனியுங்கள்" என்றாள் சுப்பம்மாள்.

குப்பண்ணா அவள் சொல்லைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. "இதென்ன பிரமாதம்? இதோ, அரை நொடியில் எடுத்துப் போட்டு விடுகிறேன், பார்!" என்று சொல்லியவாறே புறப்பட்டார்.

இந்த [illegible]க்கெல்லாம் சாமான் அறைக்குள்ளிருந்து, "டேய், யாரடா அங்கே? ஏ முனியா, ஏ வேலு, ஏ பிச்சு, ஏ சச்சு, ஏ கிச்சு, ஏ சாம்பு! எங்கேடா எல்லோரும் போய்த் தொலைந்து விட்டீர்கள்? அப்பப்பா! கை அகப்பட்டுக் கொண்டு விட்டதே! ஓடிவாருங்களடா! அம்மம்மா! கையை எப்படி எடுக்கிறது! அடாடா! உயிர் போய் விடும்போலிருக்கிறதே! சற்றுப் பெட்டியை நகர்த்துங்களேன்! ஐய்யய்யோ!......இந்தச் சின்னப் பெட்டியைக் கூடவா நகர்த்த முடியவில்லை?

"கவைக்கு உதவாத கழுதைகள்தானடா நீங்கள்?......அப்பா! பிழைத்தேன்! கை விரல்கள் எப்படி அப்பளக் காயாக நசுங்கி விட்டன! த்ஸ, த்ஸ! சுத்த மூட்டாள்களடா, நீங்கள்! அழுக்குத் துணிகளை எங்கே வைக்கிறது என்றுகூடத் தெரிய வில்லையென்றால்? இப்படிப் பெட்டிக்குப் பின்னாலேயா கொண்டு போய்த் துணிகளைத் திணித்து வைப்பது? எண்டா மக்கு, இதுதான் துணி வைப்பதற்கு இடமோ? எதற்கடா வீடு முழுவதும் ஆணி அடித்து வைத்திருக்கிறேன்? வெறும் அழகுக்கா? ......" என்று பெட்டிக்கடியில் கையைக் கொடுத்த குப்பண்ணாவின் குரல் வந்தது.

அவ்வளவுதான்! வீடு முழுவதும் குப்பண்ணுவைச் சுற்றிக் குழுமி விட்டது. குப்பண்ணு உத்தரவுக்கு மேல் உத்தரவு பிறப்பிக்கத் தொடங்கி விட்டார்.

"எதற்கடா, பொம்மை மாதிரி நிற்கிறீர்கள்? அழுக்குத் துணிகளையெல்லாம் ஒன்று சேருங்களடா. ஒரு துணி கூடப் பாக்கிவிடக் கூடாது. மூலை - முடுக்கு, இண்டு - இடுக்கு எங்கே யிருந்தாலும் துணியைக் கண்டு பிடித்து முற்றத்தில் கொண்டு வந்து குவிக்கணும். என்ன? சொல்கிறது புரிந்ததா? டேய் வேலு, நீ என் அறைக்குப் போய் ஒன்றுகூடப் பாக்கி விடாமல் அழுக்குத் துணியையெல்லாம் சுருட்டிக் கொண்டு வா. இரண்டு மூன்று எட்டு முழ வேஷ்டிகள் கட்டிலுக் கடியில் பத்திரமாகச் சுருட்டி வைத்திருக்கிறேன். அதையும் எடுத்துக் கொண்டு வா...... இன்னும் கேளடா! சாம்புவின் சட்டையோ, விச்சுவின் சட்டையோ தெரியவில்லை. மூங்கிற் கழியில் சுற்றி மூலையில் வைத்திருக்கிறேன். முந்தா நாள் ஒட்டடை அடிப்பதற்காகச் சுற்றினது அது. அதையும் அவிழ்த்து எடுத்துவா. அடே! இதோ பாரடா! எதற்காக இவ்வளவு இறக்கை கட்டிக் கொண்டு பறக்கிறாய்? சொல்வது முழுவதையும் கேட்டுக் கொண்டு போனால் உனக்கு என்ன கேடு? என் பனியன் ஒன்று பூட்ஸுக்குள்ளே திணித்து வைத்திருக்கிறேன். அதனால் பூட்ஸ் துடைத்தேன். அதையும் எடுத்துவா. ஓடிப்போ..."

ஐந்து நிமிஷத்துக்குள் வீடு திமிலோகப் பட்டது. குப்பண்ணுவின் வாய் ஓயவில்லை. 'அதைக் கொண்டு வா, இதைக் கொண்டு வா!' என்று பொரிந்து தள்ளிக் கொண்டிருந்தார்.

அரை மணிப் பிரயாசைக்குப் பின், துணிகள் எல்லாம் முற்றத்தில் வந்து குவிந்தன. பையன்களும் வேலைக்காரர்களும் வித்தைக்காரனைச் சுற்றிக் கும்பல் கூடுவது போல, முற்றத்தில் கிடந்த துணிகளைச் சுற்றி நின்றனர். குப்பண்ணு ஒவ்வொரு துணியாகக் கையில் எடுத்துப் பார்த்த வண்ணம், "முட்டாள்களுக்குத் துணி உடுத்திக் கொள்ளத் தெரிந்தால் தானே!" என்று தம் குழந்தைகளைக் கடிந்து கொண்டும், "இதோ பார், ஒரு பொட்டுக் கறை இருக்கக் கூடாது. அப்படி நன்றாக வெளுத்து வர வேண்டும், தெரிந்ததா?" என்று காத்தாயியை அதட்டிக்கொண்டும் இருந்தார். இதன் மத்தியில் அவரே பூட்ஸ் துடைத்துப் போட்டிருந்த பனியன் கையில் அகப்பட்டது. அது தன் வேலைதான் என்பதை மறந்து அவர், "இது யாருடைய வேலை? இதைப் பாரேன்! இப்படியா ஒருவன் துணியை வைத்துக் கொள்வான்? கர்மம்! கர்மம்!" என்று அந்தத் துணியைக் கீழே போட்டு விட்டுத் தலையில் அடித்துக் கொண்டார்.

அதற்குள் அந்தக் காரியத்துக்குத் தாம் தான் காரணகர்த்தா என்பது நினைவுக்கு வந்து விடவே, அதைத் துணியோடு துணியாகப் போட்டு விட்டு, "சரி, சரி. போனது போகட்டும். அவன் அவன் துணியைத் தனியே பிரித்து எடுங்கள், பார்க்கலாம்" என்று உத்தரவிட்டார்.

பத்துப் பன்னிரண்டு கைகள் துணியைப் பிரிப்பதில் முனைந்தன. தான் பிரித்துக் கொள்வதாகச் சொல்லிப் பார்த்தாள் காத்தாயி. ஆனால் குழந்தைகள் கேட்டால் தானே? 'இது என் சட்டை!' என்றான் ஒருவன். "உன்னுடையதோ? சொன்னால் பல்லைத் தட்டி விடுவேன், ஜாக்கிரதை! என்னுடையதாக்கும்!" என்றான் இன்னொருவன். இப்படியாகச் சண்டை வலுத்துத் துணிமணிகள் 'சர் பிர்' என்று கிழியும் சத்தம் கேட்கவே, குப்பண்ணு "சண்டை போட்டுக்கொண்டு சட்டையைக் கிழித்து விட்டீர்களோ இல்லையோ? இனிமேல் உங்களுக்குப் புதுச் சட்டை வாங்கித் தருகிறேன் பாருங்கள்! போதும் நீங்கள் துணி பொறுக்கினது. போங்கள் இந்த இடத்தை விட்டு!" என்று அதட்டி விரட்டி விட்டார்.

"இதோ பார். ஒரு துணி விடாமல் விவரமாகக் கணக்கெடுத்தாக வேண்டும்" என்றார் குப்பண்ணு காத்தாயியிடம்.

"அதெல்லாம் எதற்குச் சாமி? மொத்தத் துணியைக் கணக்கெடுத்துக் கொள்ளுங்கள்" என்றாள் காத்தாயி.

குப்பண்ணு பிடிவாதமாகக் கணக்கு விவரமாக எழுதித்தான் ஆக வேண்டும் என்று சொல்லி விடவே, காத்தாயி வாய் திறவாமல் துணிகளைத் தனியே பிரிக்கலானாள். ஒரு சட்டை விஷயத்தில் குப்பண்ணுவுக்கும் காத்தாயிக்கும் அபிப்பிராய பேதம் வந்துவிட்டது. "இது விச்சுவினுடைய சட்டை" என்றாள் காத்தாயி. "இல்லையே



இல்லை. இது விச்சுவின் சட்டை!" என்று மறுத்தார் குப்பண்ணா. "என் சாமி! நான் இப்பொழுதுதான் முதல் தடவையாகத் துணி எடுத்துப் போகிறேனா? 'எனக்குத் தெரியாது' என்கிறீர்களே?" என்றான் காத்தாயி.

அவ்வளவுதான்! குப்பண்ணா ரௌத்திராகாரமடைந்து விட்டார்! "துணி வாங்கிக் கொடுத்தவன் நானிருக்க, நீ எல்லாம் தெரிந்தவன் போலப் பேசுகிறாயே! பேசாமல் இரு. உனக்கு என்ன தெரியும்?" என்றார்.

"ஏண்டா! இது உன் சட்டைதானே?" என்று விச்சுவையே கூப்பிட்டுக் கேட்டார் குப்பண்ணா.

அவன், "நன்றாயிருக்கு! இந்தக் கிழிசல் சட்டை ஒன்றும் என்னுடையதில்லை. விச்சுவினுடையதாகத்தான் இருக்கணும்" என்றான்.

குப்பண்ணாவின் சுபாவம் காத்தாயிக்குத் தெரிந்தால்தானே? "நான்தான் அப்பொழுதே சொன்னேனுங்களே!" என்றான் அவன். குப்பண்ணாவுக்கு மறுபடியும் வந்தது கோபம்! "பேசினால் தெரியுமா சேதி? அப்புறம் வேறு ஆள் வைத்துக்கொண்டு விடுவேன், ஜாக்கிரதை!" என்று ஒரு அதட்டல் போட்டார்.

கணக்கு எழுதி முடிவதற்கு ஒரு மணி நேரம் ஆகியது. காத்தாயியை மொத்தத் துணிகளை எண்ணச் சொல்லிவிட்டு, குப்பண்ணா கணக்கைக் கூட்டலானார். காத்தாயி எண்ணிப் பார்த்ததில் மொத்தம் ஐம்பத்தொன்பது துணிகள்தான் இருந்தன. ஆனால் குப்பண்ணா கூட்டிப் பார்த்ததில் அறுபத்தோரு உருப்படிகள் வந்தன. "ஐம்பத்தொன்பதுதான் இருக்கிறது. நன்றாகக் கூட்டிப் பாருங்கள்" என்றான் காத்தாயி. குப்பண்ணா கோபத்துடன் "நீ எண்ணினது சரி, நான் கூட்டிப்போட்டது தப்போ? நன்றாயிருக்கிறது! என்னைவிட நீ ரொம்பப் படித்தவனோ? கிழே கிடக்கும், பார்!" என்றார்.

காத்தாயி எழுந்து சுற்று முற்றும் பார்த்தான். எழெட்டுத் தடவை எண்ணிப் பார்த்தான். கிடைக்காமற் போகவே, 'அடியைப் பிடிடா......' என்று கணக்கு ஆரம்பமுதல் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது. ஒரு மணி நேரத்துச் சோதனைக்குப் பிறகு, காத்தாயி இரண்டு ஜோடி மேஜோடு என்று சொன்னதைக் குப்பண்ணா நான்காக எழுதியிருந்தார் என்பது தெரிய வந்தது.

ஆனால் அதற்காகக் காத்தாயிக்கு ஏது வசவுகள்! 'என்ன வேலை பார்க்கிறாய் நீ?' என்று அதட்டல், உருட்டல், மிரட்டல், பயமுறுத்தல்!

பன்னிரண்டு மணிக்கு வந்த காத்தாயி நான்கு மணிக்கு மேல்தான் வெளியேறினான். குப்பண்ணா கணக்கெழுதிய நாளுடன், சுப்பம்மாளின் அருகில் சென்று, "ஒரு மாதிரியாகச் சலவைக்கு உருப்படி போட்டு அனுப்பிவிட்டேன்!" என்றார்.

வீடு ரணகளிப் பட்டதில் சுப்பம்மாளுக்குச் சொல்ல முடியாத கோபம்! ஆகவே அவள் முகம் கொடுத்துப் பேசவில்லை.

"எந்த வேலையை எவ்வளவு பணிக்காக நாம் செய்தாலும் நல்ல பெயர் இல்லை!" என்று முணு முணுத்துக் கொண்டே குப்பண்ணா சாய்வு நாற்காலியில் போய்ச் சாய்ந்தார்.

"குழந்தைகளின் சட்டைகளிலிருந்த பித்தான்களை யெல்லாம் கழற்றினீர்களோ?" என்று கேட்டாள் சுப்பம்மாள். குப்பண்ணா பதில் பேசவில்லை; விழித்தார்.

அதற்குள் கணக்கைப் பார்த்துக் கொண்டே வந்த சுப்பம்மாள், "என்ன? என் பட்டு ரவிக்கையா? எது? அந்த ஆரஞ்சுக் கலர்தானே? அட கர்மமே! நான் அதை 'இஸ்திரி' பண்ணச் சொல்லவேண்டும் என்று தனியாக அல்லவா எடுத்து வைத்திருந்தேன். அதை அவன் குட்டிச்சுவராக்கிக் கொண்டு வரப் போகிறானே!...... ஆமாம், அதில் என் தங்கப் பித்தான் இருந்ததே! அதை எடுத்து வைத்தீர்களோ, இல்லையோ?" என்று கேட்டாள்.

குப்பண்ணாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. "என்ன? பித்தானா? தங்கமா? உன்னுடையதா? நிஜமாகவா? அடாடா! எடுத்து வைக்கவில்லையே!" என்று சொல்லிக்கொண்டே செருப்பைக் கால்களில் மாட்டிக்கொண்டு குப்பண்ணா பிடித்தார் ஓட்டம்!......"டேய், விச்சு! காத்தாயி போய் விட்டானாடா? டேய் வேணு! காத்தாயி எந்தப் பக்கமடா போனான்? ஓடி வாருங்கள், ஏண்டா நெட்டித் தடியன்கள் மாதிரி நிற்கிறீர்கள்?...உங்கள் அம்மாவின் தங்கப் பித்தானை எடுத்துக்கொண்டு போய் விட்டானடா!......அவன் வீடு எந்தப் பக்கம் இருக்கிறது?...சேத்துப்பட்டுப் பக்கமா? என் அப்பா! இந்தப் பக்கமாகத் துணி மூட்டையுடன் ஒருத்தி போனாளா? அந்தப் பக்கமாகவா?......"

பித்தானை வாங்கி வரப் புறப்பட்ட குப்பண்ணா இன்னும் திரும்பி வந்த பாடில்லை!



டிஸ்ட்ரிப்யூட்டர்கள்:

சென்னை நகர உரிமைகள்: ஸ்ரீ ரத்னா பிக்சர்ஸ், 83, பூந்தமல்லி ஹைரோட், மதராஸ்-10
திருவாங்கூருக்கு: தி பிலிம் டிஸ்ட்ரிப்யூடிங் கம்பெனி, எர்ணாகுளம்
கொச்சின் மலபாருக்கு: தி அசோஸியேடட் பிக்சர்ஸ் லிமிடெட், எர்ணாகுளம்
மைசூர் பிராந்தியத்திற்கு:
ஸ்ரீ எல். எஸ். அய்யர், சாரதா பிலிம்ஸ், 174, காந்தி நகர், பெங்களூர்-2
கோயமுத்தூர் நீலகிரிக்கு: தி கோயமுத்தூர் பிக்சர்ஸ் லிமிடெட், கோயமுத்தூர்
தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கல்பட்டு, சித்தூர் ஆகிய ஜில்லாக்களுக்கு:
ஸ்ரீ ஏ. கிருஷ்ணஸ்வாமி பிலிம் டிஸ்ட்ரிப்யூட்டர், 14, பெங்களூர் ரோடு, வேலூர்
இலங்கைக்கு: வெல்லிங்டன் டாக்கி சர்க்யூட், 117, புது செட்டி வீதி, கொழும்பு
சேலத்திற்கு: அசோகா பிக்சர்ஸ், குகை, சேலம்
ஆந்திரா ஸீடட் ஜில்லாக்களுக்கும், நைஜாம் சமஸ்தானத்திற்கும்:
சரஸ்வதி டாக்கீஸ் லிமிடெட், விஜயவாடா

அதிர்ஷ்டசாலி

கி.ரா. கோபாலன்...

ஒரு ஜோடிப் புருக்கள் வான வீதியில் குதூகலமாகவும் சுதந்திரமாகவும் ஒன்றை மிஞ்சி யொன்று எட்டப் பறப்பதுபோல் அந்த இளம் தம்பதிகளின் வாழ்க்கை இன்பமாக ஓடிக்கொண்டிருந்தது. அந்த வீட்டிலிருந்து அவளுடைய மெல்லிய இனிய குரலில் ஏதேனும் ஒரு பாட்டுக் கேட்கும். இல்லாவிட்டால் எல்லையற்ற மகிழ்ச்சியில் பொங்கும் அவளுடைய சிரிப்பொலி கேட்கும். கொஞ்சம் நெருங்கிப் போய்ப் பார்த்தால் அந்த மணமொத்த தம்பதிகளின் விளையாட்டும் தமாஷ்ப் பேச்சுக்களும் விவரமாக விளங்கும். கல்யாணமான மூன்று மாதத்திற்குள் தனிக்குடித்தனம் நடத்தும் அவர்கள் வேறு எப்படித்தா னிருக்கமுடியும்?

அன்று சாயந்திரம் ராமலிங்கம் வீட்டுக்கு வந்தபொழுது அவன் கையில் ஒரு பெட்டியிருந்தது. அந்தப் பெட்டியைப் பார்த்தவுடனேயே அது ஒரு நகைப் பெட்டிதான் என்று பானு எளிதில் தெரிந்துகொண்டாள். "அது என்ன? இங்கே கொடுங்கள்; நான் பார்க்க வேண்டும்" என்றாள் பரபரப்போடு.

"ஏன் இவ்வளவு அவசரம்? இந்தப் பெட்டியையே விழுங்கிவிடுவாய் போலிருக்கிறதே?" என்று சொல்லிக்கொண்டே பெட்டியைப் பின்புறமாக மறைத்துக் கொண்டான் ராமலிங்கம்.

"ஊஹூம்! விளையாடாதீர்கள்! அதைக் கொடுக்கப் போகிறீர்களா, இல்லையா?" என்றாள். கோபமும் வருத்தமும் கொண்டவள்போல் முகத்தை வேறு வைத்துக்கொண்டாள் பானு.

ராமலிங்கம் அந்தப் பெட்டியைத் தன் கையில் வைத்துக்கொண்டே திறந்து காண்பித்தான். "இது உனக்குப் பிடித்திருக்கிறதா?" என்றான் அவள் முகத்தையே பார்த்துக்கொண்டு. பெட்டியிலுள்ள நகைகளை மெதுவாக எடுத்தான். வைர அட்டிகை ஒன்றும், சுற்றிலும் முத்துக்கள் நடுவில் பச்சைக் கல் பதித்த தோடு ஒரு ஜதையும் இருந்தன. அவன் பார்வைக்கு அவை பழைய காலத்து நகைகளாகத் தோன்றினாலும் எந்தப் பெண்ணும் விரும்பும் வண்ணம் கவர்ச்சிகரமாகத்தா னிருந்தன. எவ்வளவு ஆர்வத்தோடு பானு அந்த நகைகளை எடுத்தாளோ அவ்வளவு ஆர்வத்தோடு அணிந்து கொண்டும் விட்டாள்.

அப்பொழுது அவன் அவள் அழகை அள்ளிப் பருகுகிறவன்போல் "நகையைக் கையில் எடுத்த அவசரம் தணியு முன்னே அலங்காரமும் செய்துகொண்டு விட்டாயே? இது உனக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது, இல்லையா?" என்றான்.

"எனக்குப் பிடித்திருக்கிறது என்று உங்களுக்கு எப்படியோ தெரிந்து விட்டது, இல்லையா?" என்றாள் பானு.

"இதென்ன பிரமாத விஷயம்! உன் முகத்தைப் பார்த்தால் விளங்காதா? அதுதான் கதை கதையாகச் சொல்லுகிறதே. இந்த நகைகள் என் தாயார் வைத்துப் போன சொத்து. கிரமமாக உனக்குக் கிடைக்க வேண்டியவை……"

அவள் அடங்கா மகிழ்ச்சியோடு கழுத்திலிருந்த அட்டிகையைத் தொட்டுக் கொண்டே "அப்படின்னா நான் ரொம்ப அதிர்ஷ்டக்காரிதான்" என்று சொல்லிக் கொண்டே குறும்பாகப் பார்த்தாள்.

"கொஞ்ச நாள் பொறுத்திரு. இது உன்னிடமே வந்து சேரும். இதை இப்போ உன்னிடம் காண்பிக்கலாம் என்றுதான் கொண்டு வந்தேன்" என்றான். கண நேரத்திற்குள் அந்த அட்டிகையும் தோடும் மறுபடியும் பெட்டியை அலங்கரித்தன. அவன் பெட்டியை மெதுவாக மூடிச் சட்டைப் பைக்குள் பத்திரமாக வைத்துக் கொண்டான். அந்தக் கண நேரத்திற்குள் அவளுடைய பிரகாசமான முகமும் கறுத்துச் சோபையிழந்து விட்டது. கணப் பொழுதில் அலைபோல் எழும்பிய ஆசையும் அடங்கிப் போய் விட்டது.

ராமலிங்கம் அவளை ஒரு விதமாகச் சமாதானம் செய்யப் பிரயத்தனப் பட்டான். "பானு, இது உன்னுடையதே தான். ஆனால் ஒருவாரம் வரையில் வேறு ஒருவரிட மிருக்கும். அப்புறம் உன்னிடமே திரும்பி வந்து விடும். கொஞ்சம் பொறுமையாய் மாத்திரம் இரு" என்றான்.

"ஒரு வாரம் வரையில் ஏன் பிறரிடம் இருக்க வேண்டும்?"

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல ராமலிங்கம் தயங்கினான். அவன் இப்

படிக் கேட்பதில் தவறென்ன இருக்கிறது? ஆனால் எதையும் விவரமாக அவனிடம் சொல்லுவது அப்பொழுது அவனுக்கு உசிதமாகப்படவில்லை. "பானு, நீ கேட்பதெல்லாம் சரிதான்; ஆனால் இதைப் பற்றிய விஷயமெல்லாம் நீ தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. இவை உனக்கே திரும்பி வரும் வரை பொறுமையாயிரு" என்றான். பானு அதற்கு மேல் எதுவும் பேசவில்லை. அவன் அப்பொழுதே அந்த நகைப்பெட்டியை எடுத்துக் கொண்டு வெளியே போய் விட்டான்.

ஒரு வாரம் சென்றது. இரண்டு வாரம்—ஒரு மாதமும் ஓடிவிட்டது. அந்த நகைகளைப் பற்றிய தகவலே இல்லை. அதை அடியோடு மறந்து விடவும் பானுவால் முடியவில்லை. ராமலிங்கமும் மௌனமாகவே இருந்தான். ஆனால் அவளால் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லையே?

ஒரு நாள் இரவு. வீட்டு மேல் மாடியில் நிலவொளியில் உட்கார்ந்து அவர்களிருவரும் பேசிக் கொண்டிருந்தனர். அந்த நகைகளைப் பற்றி மறுபடியும் பேச அதுதான் அவளுக்குச் சரியான சமயமாகப் பட்டது. "அதிருக்கட்டும். அந்த நகைகளைப் பற்றிய விஷயத்தை அப்புறம் நீங்கள் என்னிடம் சொல்லவேயில்லையே?" என்றான் அவனிடம் நெருங்கி உட்கார்ந்து.

இதைக் கேட்டதும் அவன் முகத்தில் ஏன் அவ்வளவு மாறுதல்? மனதில் வெறுப்பும் கவலையும் தோய்ந்த உணர்ச்சியோடு, "அதைப் பற்றிய கவலையை விட்டு விடு, பானு! அது நம்முடைய சொத்தல்ல. அது உனக்குக் கிடைக்காது. அந்த நகைகள் இல்லாமலேயே நீ அழகாயில்லையா? அதிர்ஷ்டமிருந்தால் நம் ஆயுளில் இதைப்போல எவ்வளவோ நகைகள் பார்க்கலாம்…" என்று சொல்லி ஒரு பெருமூச்சு விட்டான்.

இந்த வார்த்தைகள் பானுவிற்குத் துளிக்கூட சமாதானத்தை அளிக்கவில்லை. அவளுடைய குழப்பத்தைத்தான் அதிகமாக்கின. "அது எனக்குக் கிடைக்காதா? ஏன்? அது உங்கள் தாயாரின் உடைமைதானே? உங்களைவிடப் பாத்தியம் கொண்டாடக் கூடியவர்கள் வேறு யாரேனும் இருக்கிறார்களா?" என்று கேட்டான்.


"ஆமாம்; என் தாயாரின் உடைமைதான். இருந்தாலும் அது நமக்குச் சொந்தமில்லை. பானு, வீண் கேள்விகளையெல்லாம் கேட்டு என்னைக் குழப்பாதே……" என்று அவன் வெறுப்பாகவும் உதறினாற்போலும் அவளுக்குப் பதில் சொன்னான்.

"ஏன் கேட்கக் கூடாது? அவ்வளவு ரகசியமான விஷயமா அது? அதை நான் கூடத் தெரிந்து கொள்ளக் கூடாதா?"

"ஆமாம்! நீ தெரிந்து கொள்ளக் கூடாத விஷயம்தான்" என்று கண்டிப்பாகச் சொன்னான் ராமலிங்கம்.

பானு ஒன்றும் பதில் பேசவில்லை. அவளுடைய மன அமைதி அடியோடு குலைந்து விட்டது. ஆனால் அவளுடைய மனது மாத்திரம் சதா குடைந்து கொண்டேயிருந்தது.

'ராமலிங்கம் தன் தாயார் இறந்தபிறகுதான் அவளைக் கல்யாணம் செய்துகொண்டான். அவனுக்கு வேறு சகோதரனோ சகோதரிகளோ கிடையாது என்பது பானுவிற்கு நன்கு தெரியும். கிரமமாக அவனுடைய தாயார் வைத்துப்போன ஒவ்வொரு சாமானும் சொத்தும் அவனுக்குக் கிடைத்திருக்கும் பொழுது இந்த நகைகளுக்கு மாத்திரம் யார் பாத்தியதை கொண்டாட வந்தார்கள்? ஒரு வேளை அவை அடகில் இருந்து முழுகி விட்டன என்றாலும் அப்படிப்பட்ட ஏழ்மை



கிலையில் அவர்களிருந்ததாகத் தெரியவில்லையே? வேறு யார் கையிலேனும் அந்த நகைகள் சிக்கியிருக்குமோ? யாரேனும் பொய்ப் பாத்தியதை கொண்டாடி அடைந்து விட்டார்களோ? இல்லாவிட்டால் இவருடைய ஆசைக்குரிய வேறு பெண்...' இப்படியாகப் பானுவின் எண்ணங்கள் வளர்ந்தவண்ணமாயிருந்தனவே தவிர தெளிவான முடிவு எதுவும் ஏற்படவில்லை. ராமலிங்கத்தின் மீது இல்லாத சந்தேகங்களெல்லாம் கொண்டாள். அவன் தன்னை வஞ்சிப்பதாக எண்ணி வாடினாள். குடும்பம் அமைதியாகவே நடப்பது போல் தோன்றினாலும் வீட்டில் முன்போல் கலகலப்பும் சந்தோஷமும் நிலவவில்லை. இப்படியே நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன.

ராமலிங்கத்தின் உறவினர் ஒருவருடைய வீட்டில் கல்யாணம். ராமலிங்கம் பானுவையும் அழைத்துக் கொண்டு அவர்கள் வீட்டுக்குப் போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அவளையும் அழைத்துக் கொண்டு போவதினால் ஏதேனும் தீமை நேருமோ என்ற பயம் அவனுக்கு ஏற்பட்டது. ஆனால் அவளை அழைத்துக் கொண்டு போகாமலிருக்கவும் முடியவில்லை. கல்யாண வீடென்றால் உறவினர்களின் கூட்டத்திற்குக் குறைவு உண்டா? பானுவிற்குத் தெரிந்த பெண்களும் தெரியாத பெண்களும் பல பேர் வந்திருந்தனர். அந்தப் பெண்களில் ஒருத்தியின் செய்கை பானுவைக் கலங்க வைத்தது. அந்தப் பெண் பானுவைப் பார்த்ததும் அவள் கண்ணை நிரிலேயே. அவளுக்குத் தெரியும் படியாகவே ஏதோ பரிகாசம் செய்வது போல் உதட்டைக் கோணி, தோளைத் தூக்கித் தாடையில் இடித்துக்கொண்டாள். ஏன் அவள் தன்னைப் பார்த்து அப்படிச் செய்தாள் என்று பானுவிற்கு விளங்கவில்லை. 'அவளைவிட அழகில் நான் குறைந்து விட்டேனா? அந்தஸ்தில் குறைந்து விட்டேனா? ஏதேனும் அசட்டுத்தனமாகத்தான் நடந்து கொள்ளுகிறேனா?' என்று பானு எண்ணினாள்.

அந்தப் பெண் தன்னைப் பார்த்துச் செய்த இந்தப் பரிகாசச் செய்கை பானுவுக்கு ஆற்ற மாட்டாத வருத்தத்தைத் தான் கொடுத்தது. இதனால் அந்தப் பெண்ணையே கவனித்துப் பார்க்க அவளுக்கு ஆர்வம் ஏற்பட்டது. அந்தப் பெண் பேசுவது, நடப்பது எல்லாமே அளவிற்கு மிஞ்சிய கர்வத்தோடு கூடியதாக அவளுக்குத் தென்பட்டது. அந்தப் பெண்ணைச் சற்று நெருங்கிக் கவனித்த போது பானுவின் மனது 'திக்'கென்றது. ஒரு நாள் தன் கணவன் 'என் தாயாருடையது—உனக்குச் சொந்தமாக வேண்டியது' என்று எந்த வைர அட்டிகையையும் தோட்டையும் காண்பித்துச் சொன்னாரோ அதே ஆபரணங்கள் அந்தப் பெண்ணின் காதிலும் கழுத்திலும் மின்னிக்கொண்டிருந்தன. இதைக் கண்டதும் பானுவிற்கு அடக்க மாட்டாத துக்கமும் ஆத்திரமும் பீறிக் கொண்டு வந்தன. அந்தப் பெண்ணை மறுபடியும் கண்ணெடுத்துப் பார்க்கவே வெறுப்பாயிருந்தது. அந்தக் கல்யாண வீட்டில் அவளுக்கு இருக்கவே பிடிக்கவில்லை. தன் வீட்டுக்குப் போய் உட்கார்ந்து விக்கி விக்கி அழுதாலாவது ஆறுதலாகும் போலிருந்தது. அந்தப் பெண்ணுக்கும் தன் கணவனுக்கும் ஏதோ சம்பந்தமிருக்க வேண்டுமென்று நினைத்து அவள் மனது புகையத் தொடங்கியது.

அன்று இரவு வீட்டுக்கு வந்தவுடன் பொறுமை யிழந்தவளாகப் பீறிட்டு வரும் துக்கத்துடன் கண்களில் கண்ணீர் பொங்கித் ததும்ப "அந்த ராங்கிக்காரி யார்?" என்றாள் ராமலிங்கத்திடம். ராமலிங்கத்திற்கு அவள் யாரைக் கேட்கிறாள் என்பது விளங்கியது. இருந்தாலும் ஒன்றும் தெரியாதவன் போலவே "எந்த ராங்கிக்காரி?" என்றான்.

"அவள்தான்! உங்கள் தாயாரின் தோடுகளையும் அட்டிகையையும் போட்டுக் கொண்டு குலுக்கினாளே, அவள்தான்."

"அடாடா! அவள் அந்த நகைகளை வேறு போட்டுக்கொண்டு வந்திருந்தாளா? அவள் பெயர் யோகம்......"

"யோகக்காரிதான்! அவள் பெயர் எனக்கெதற்கு? ஜபம் செய்யப் போகிறேனா? அவள் யார்? அவளுக்கு உங்கள் தாயாரின் நகைகளை அடைய என்ன பாத்தியம் என்று கேட்கிறேன்" என்றாள்.

"அந்தக் கதையெல்லாம் வேணுமா? அது உனக்கு அவசியமில்லை. கேட்டால் வருத்தப்படுவாய்" என்றான் ராமலிங்கம்.

"வருத்தப்படத்தானே பெண் பிறந்திருக்கிறேன். இல்லாவிட்டால், பிறருக்குத் தாழ்மையாய்ப் போவேனா?"

"பானு! வீணாகக் கோபப்படாதே. பொறுமையாய்க் கேள். நீ எதையும் வித்தியாசமாய் நினைக்கக் கூடாதே என்றுதான் பயப்படுகிறேன். அவள் எங்கள் வீட்டோடு வளர்ந்தவள். என் அத்தையின் பெண்.

"ஓஹோ! பெண்சாதியை விட அத்தை பெண்ணுக்குத்தான் குடும்பத்துச் சொத்தில் பாத்தியம் அதிகம் போலிருக்கிறது!"

"அப்படி ஒரு சட்டமும் இல்லை. பாவம்! அவளைத்தான் நான் முதலில் கல்யாணம் செய்து கொள்வதாயிருந்தேன். என் தாயார் கூட......"

"பாவம் என்ன! அவளையே கல்யாணம் செய்து கொண்டிருக்கிறதுதானே?"

"என் தாயாருக்கு அவள் மீது மிகுந்த பிரியம். அவள் தான் தனக்கு மருமகளாக வரவேண்டுமென்று சாகும் வரையில் அபிப்பிராயப் பட்டாள். அந்த ஆசையில் அவளை விட்டோடு வளர்த்தாள். தன்னுடைய நகைகளை யெல்லாம் அவளுக்கு அணிவித்து அழகு பார்த்தாள். அவளே தனக்கு மருமகளாய் வரப்போவதாக நிச்சயித்து விட்டதால் அந்த அட்டிகையையும் தோட்டையும் அவளுக்கே கொடுத்து விட்டதாகக் கூட என்னிடம் சொன்னாள். நானும் அவளைக் கல்யாணம் செய்து கொள்ள இருந்தேன்..."

"ஏன் செய்து கொள்ளவில்லை?"

"பின்னால் அவளுடைய குணம் எனக்குப்பிடிக்கவில்லை. என் தாயார் காலமானபிறகு எல்லாச் சொத்தும் தங்கள் மேல்பார்வையி லிருப்பது போல் என்னை அடக்கவும் அதிகாரம் செய்யவும் அத்தையும் அவளும் முயற்சித்தனர். இதனால் மனஸ்தாபம் ஏற்பட்டது. அப்புறம் உன்னைக் கல்யாணம் செய்து கொண்டேன்"

"எல்லாம் சரி! அந்த நகை? அவளைத்தான் நீங்கள் கல்யாணம் செய்து கொள்ளவில்லையே அவை என்னைச் சேர்ந்தது தானே?" என்றாள் பானு.

"வாஸ்தவம்! என்னைக் கல்யாணம் செய்து கொள்ளும் அதிர்ஷ்டம் அவளுக் கில்லையே? உனக்குத்தானே கிடைத்தது"

"அப்படி யென்றால்...?"

"இந்த நகைகள் தாயார் இறக்கும் வரையில் யோகமே அணிந்துகொண்டிருந்தாள். தாயார் இறந்த பிறகு அவற்றை வாங்கிக் கொண்டு போய் 'பாங்கி'யில் பத்திரமாக வைத்திருந்தேன். நெடுநாள் வரையில் என்னோடு பேசாத அத்தை ஒரு நாள் 'யாரோ யோகத்தை பெண் பார்ப்பதற்காக வரப்போகிறார்கள். வேறு நகைகளே இல்லை; அந்த அட்டிகையையும் தோட்டையும் கொஞ்சம் கொடு' என்று கேட்டாள். அப்பொழுதுதான் அதைப் பாங்கியிலிருந்து எடுத்து வந்து உன்னிடம் காண்பித்து விட்டு அவர்களிடம் கொண்டு போய்க் கொடுத்தேன். மறுபடியும் ஒரு நாள் போய்க் கேட்டபொழுது அத்தை அழுது கொண்டே உன்னைக் கல்யாணம் செய்து கொள்ளும் அதிர்ஷ்டம் தான் யோகத்திற்கில்லை. மாமி ஆசையோடு போட்டுப் பார்த்த நகைகளையாவது அவளுக்குக் கொடுக்கக் கூடாதா?' என்று கெஞ்சினாள். எனக்கு அது மிகவும் பரிதாபமாக இருந்தது. என் தாயார் முழு மனதோடு அவற்றை அவளுக்குக் கொடுத்தது எனக்குத் தெரியும். 'சரி; வைத்துக் கொள்ளுங்கள்' என்று சொல்லி விட்டு வந்து விட்டேன்."

"இதை யெல்லாம் முன்னால் என்னிடம் சொல்ல ஏன் இஷ்டப்படவில்லை?"

"நீ ஏதேனும் வித்தியாசமாக எடுத்துக் கொண்டு விடுவாயோ என்ற பயம் தான். நகை போனால் போகட்டும். அவளுக்குக் கிடைக்க வேண்டிய நான் உனக்குக் கிடைத்தேனே......" என்றான்.

இதைக்கேட்டதும் பானுவின் மனதில் ஒரு பெரிய பனிவே கரைந்து விட்டது போல் அமைதி ஏற்பட்டது. அவனுடைய களங்கமற்ற முகத்தைப் பார்த்தாள். தான் அதிர்ஷ்டசாலிதான் என்ற கர்வமும் பெருமையும் அவளுக்கு எப்படியோ உண்டாகியது. "பயித்தியக்காரி! உங்களைக் கல்யாணம் செய்து கொள்ளத்தான் கொடுத்து வைக்கவில்லையே, அவளுக்கேன் இவ்வளவு கர்வமும் மினுக்கும்?" என்றாள் பானு.

"அது தான் அவளைப் பிடித்த துரதிர்ஷ்டம்" என்று சிரித்துக் கொண்டே சொன்னான் ராமலிங்கம்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

பணம் செய்த வேலை!

ஒருமுறை பெல்ஜியப் பிரதம மந்திரி ஸ்ரீஸ்பாக் ரேடியோவில் பேசவேண்டியதாக இருந்தது. அன்றைய தினம், எதிர்பாராத விதமாக அவருடைய கார் ரிப்பேராகிவிட்டதால் அவர் ஒரு டாக்ஸியை அழைத்து, "ரேடியோ ஸ்டேஷனுக்குப் போகவேண்டும், வருகிறாயா?" என்று கேட்டார்.

டாக்ஸி டிரைவர் முகத்தைச் சுளித்துவிட்டு "முடியாது ஸார். இன்றிரவு பிரதம மந்திரி ஸ்ரீஸ்பாக் ரேடியோவில் பேசப்போகிறார். நான் அதைக் கேட்கவேண்டும்" என்றான்.

இதைக் கேட்டதும் ஸ்ரீஸ்பாக்குக்கு உண்டான வியப்பும் திகைப்பும் கொஞ்ச நஞ்சமல்ல. ஆனால் எப்படியாவது அவர் உடனே ஸ்டேஷனுக்குப் போயாக வேண்டுமே; என்ன செய்வது!

அவர் தம்மை இன்னாரென்று அடையாளம் காட்டிக்கொள்ளாமல், இருபது டாலர் நோட்டு ஒன்றை எடுத்து டாக்ஸிக்காரனுக்குக் காட்டி. "என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டார்.

டாக்ஸி டிரைவர் உடனே பரபரப்புடன் வண்டிக்குள்ளே போய் உட்கார்ந்து "வாங்க சாமி, வாங்க! அந்த ஸ்பாக் இருபத்தைந்து வருஷமாகத்தான் சோஷியலிஸத்தைப் பற்றிப் பேசிகொண்டிருக்கிறான்! இந்தத் தடவை கேட்காவிட்டால் குடிமுழுகியா போய்விடும்?" என்றான்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

வட்ட மேஜை

★ கிடைப்பது அரிது!

நாங்கள் இவ்வாரக் "கல்கி"யில் கவர்னர் ஜெனரல் சம்பள விஷயமாக வெகு பொருத்தமாகச் சொல்லியிருக்கிறீர்கள். இந்தச் சம்பள விஷயமாகப் பேச்சுகள் கடந்த சில மாத காலமாக எங்கும் அடிபட்டு வந்தன. காங்கிரஸ் ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களே இதைப்பற்றிச் சர்ச்சையில் இறங்கியிருந்தார்கள். விஷயமறிந்தவர்கள் ராஜாஜியினுடைய பெருந் தன்மையை அறிவார்கள். அவர் சொத்து, சுகம் அனைத்தையும் துறந்து தேச சேவையே பெரிது என்று அல்லும் பகலும் உழைத்துப் பாடுபடுபவர். தனக்கு என்றோ அல்லது தன் சுற்றத்தாருக்கு என்றோ ஒருநாளும் அவர் தன்னுடைய கொள்கையை மாற்றிக் கொண்டது கிடையாது.

அவருடைய அறிவுத் திறமையை உத்தேசித்தும் நிர்வாகத் திறமையை உத்தேசித்தும், அவரை அப்பதவிக்கு மேலிடத்தார்கள் தேர்ந்தெடுத்தார்கள். காந்தி அடிகளுக்குப் பின் தேசத் தலைவர்கள் யோசனைகளைக் கேட்க ராஜாஜியைத் தான் எதிர்பார்க்கிறார்கள். ஹைதராபாத் விஷயமாகப் பலபேர் பலவிதமாகப் பேசினபோதிலும் நமது ராஜாஜி "நீங்கள் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். எல்லாம் சமாதானமாக முடியும்" என்று சொன்னார். அதுபோலவே முடிந்தது. 1946-ம் வருஷம் ராஜாஜி அவர்கள் டில்லியில் ஒரு பொதுக்கூட்டத்தில் இன்னும் 2 வருடங்களில் நமக்குச் சுதந்திரம் கிட்டும் என்றார். அந்த வாக்குப் பலித்தது. இப்பேர்ப்பட்ட தீர்க்க திருஷ்டி பெற்ற தலைவருக்கு இருபதினாயிரம் ரூபாய் கொடுப்பது பிரமாதமில்லை. இருபதினாயிரம் பவுன் கொடுத்தாலும் இம்மாதிரித் தலைவர் கிடைப்பது அரிது. நேருஜி, ராஜாஜி இருவரும் தேசத்தின் இரு கண்கள்.

பொள்ளாச்சி
26—12—48 இ. என். ஸ்ரீனிவாசன்

○●○

நாஸ்திகப் பிரசாரம்

தமிழ்நாட்டிலே நாஸ்திகப் பிரசாரத்துக்கு வலுவூட்டும் பலவற்றிலே நம் அருமைத் தமிழ்ப் படங்கள் முக்கியமான ஸ்தானம் வகிக்கின்றன என்பது என் கருத்து. நமது பக்திக்குரிய பரமசிவனையும் அன்புக்குரிய முருகனையும் இன்னும் எத்தனையோ கடவுளர்களையும் இந்தத் தமிழ்ச் சினிமாக்காரர்கள் படுத்தும்பாடு கொஞ்ச நஞ்சமல்ல! சாக்ஷாத் பரமசிவன் தம்முடைய தமிழ்ப் புராணப் படத்தை ஒருதரம் பார்த்துவிடுவாரானால், உடனே பரகதி யடைந்துவிடுவார் என்பதில் ஐயமில்லை!

சென்னை சர்க்கார் சினிமாக்களுக்கு 13000 அடி கொடுத்தது தவறு: 11000 அடிக்கு மேல் கொடுத்திருக்கக் கூடாது.

மயிலாப்பூர்
29—12—48 வெ. ரா. நாகராஜன்

[சினிமாக் காட்சியில் நடித்து மத தெய்வங்களைக் கேவலப்படுத்திக் காட்டுவதைத் தடுக்கச் சட்டம் போடுவதுபற்றிச் சென்னை சர்க்கார் ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது. இதைக் குறித்து நம் நேயர்களின் அபிப்பிராயங்களை எதிர் பார்க்கிறோம்.

—ஆசிரியர்]

○●○

ஏன் இந்தப் பாரபட்சம்?

ஸ்ரீ என். வி. வி. அவர்களுக்குச் சங்கீத ரஸிகர்கள் எல்லோரும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

28-12-48 "ஹிந்து"ப் பத்திரிகையில் சங்கீத வித்வத் சபையில் மாஞ்சி ராகத்தை விஸ்தாரத்திற்கு எடுத்துக்கொள்ளும்படி பிரேரணை கொண்டு வந்த செம்மங்குடி ஸ்ரீ சீனிவாசய்யர் அவர்கள், சில பிரபல வித்வான்கள் கூட மாஞ்சியைப் பொய்யாகவே பாடுகிறார்களென்றும், ஆகையால் இந்த ராகத்தின் ஆரோஹண அவரோஹணங்களை நிர்ணயிக்க வேண்டியது மிக அவசியமென்றும் கூறியதாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு வருஷத்திற்கு முன் பெரம்பூர் சங்கீத சபையின் ஆதரவில் முடிகொண்டான் ஸ்ரீ வெங்கடராமய்யர் அவர்களின் கச்சேரி நடந்தது. அச்சமயம் பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி அவர்கள் தலைமை வகித்தார்கள். அன்று ஸ்ரீ முடிகொண்டான் மாஞ்சி ராகத்தை விஸ்தாரமாக ஆலாபனம் செய்து சபையோரை மகிழ்வித்தார்கள். தலைவர் தமது முடிவுரையில், வித்வான் மாஞ்சி ராகத்தைக் கையாண்ட முறையை வெகுவாகப் புகழ்ந்து பேசுகையில், "ஸ்ரீ முடிகொண்டான் ஒரு உயர்தர பாடகர் மட்டுமல்ல; சிறந்த சங்கீத ஞானியும் கூட" என்று கூறி ஸ்ரீ முடிகொண்டானுக்குப் புகழ் மாலை சூட்டினார்.

இவ்வளவு பெருமை வாய்ந்த ஒரு வித்வான் சங்கீத வித்வத் சபையின் வருஷாந்திர விழாவில் கூடக் கலந்துகொள்ள சந்தர்ப்பமில்லாதிருப்பது சங்கீத உலகிற்கே ஒரு பெரும் நஷ்டமாகும். ஸ்ரீ என். வி. வி. அவர்களைப்போல் அனுபவமிருந்த ஒரு ரஸிகர் கூறியபின்பாவது, வித்வத் சபை நிர்வாகிகள் பரந்த நோக்குடன் இக்குறையைக் கவனித்து நீக்குவார்களாக.

சிவகாசி
29-12-48 ரங்கநாதன்

○●○

தேர்ந்தெடுக்க வேண்டும்!

சென்னை வித்வத் சபையில் திருவாங்கூர் ஆஸ்தான வித்வான் கும்பகோணம் ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளையவர்கள் நிகழ்த்திய தலைமையுரையில் ரேடியோ நிலையங்களைப் பற்றிக் கூறியுள்ளது கவனிக்கத் தக்கது.

கர்நாடக சங்கீதம் நமது நாட்டின் ஜீவநாடி. நமது ஒப்பற்ற பொக்கிஷம். அதன் உயர்வும் பெருமையும் மங்காதிருக்கச் செய்து

தழைத்தோங்கச் செய்வது நமது தலையாய கடன். ஆனால் நந்தமிழ் நாட்டில் கர்நாடக சங்கீதத்தின் மதிப்பு நாளுக்கு நாள் குறைவுறுவதாகவே தோற்றுகிறது. சங்கீதம் எல்லோராலும் எளிதில் ரசிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும் என்பது உண்மையே. ஆனால் கர்நாடக சங்கீதம் மக்களின் தரத்திற்கேற்ப இறங்கி வரவேண்டுமென்று எதிர்பார்ப்பது அதன் குன்றாத பெருமைக்கு இழுக்காகும். மக்கள் அதன் நிலைக்கேற்பத் தமது தரத்தை உயர்த்திக் கொளல் வேண்டும்.

இதற்கு ரேடியோவில் பாடுபவர்களின் தரத்தை உயர்த்துவது மிகவும் அவசியம். பின்னையவர்கள் கூறியுள்ளதுபோல் சங்கீதத்தில் தேர்ந்த அறிஞர்கள் கொண்ட குழுவொன்றினை யமைத்து அவர்களால் பரீட்சிக்கப்பட்டுத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களையே ரேடியோவில் பாடச் செய்ய வேண்டும்.

கோவை
28—12—48 எஸ். கிருஷ்ணமூர்த்தி

○●○

வீட்டில் உள்ளவர்களுக்கு வேண்டாமா?

டிஸம்பர் 26-ந் தேதி 'கல்கி'யில் 'ரேடியோ நிலையத்தாருக்கு' என்ற தலைப்பில் திருவனந்தபுரம் வி. எஸ். மணி அவர்கள் எழுதிய கடிதத்தைப் பார்த்தேன். அவர் எழுதியவை எல்லாம் ஆதரிக்க வேண்டிய விஷயம்தான். ஆனால் விடுமுறை நாட்கள் தவிர மற்ற நாட்களில் காலை, மத்தியான நிகழ்ச்சிகள் வேண்டாம், செய்திகள் மட்டும் ஒலி பரப்பினால் போதும் என்று எழுதி இருக்கிறார். இதற்கு என்ன அர்த்தம்? அவர் ஆபீஸ் போனால் வீட்டில் உள்ள மற்றவர்கள் மத்தியான வேளைகளில் என்ன செய்வது? மாதர்களுக்கு வீட்டில் என்னதான் வேலை இருந்தாலும், மத்தியான வேளையில் கொஞ்ச நேரமாவது ரேடியோ கேட்டால்தான் சந்தோஷமாக இருக்கும். செய்திகள் வரும் போது ரேடியோவை 'டக்'கென்று மூடி விடுபவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். நான் அதற்காகச் செய்திகள் வேண்டாம் என்று சொல்லவில்லை. செய்திகளும் அவசியம்; இதர நிகழ்ச்சிகளும் அவசியம்தான். காலை, மத்தியான நிகழ்ச்சிகளை நன்றாக அமைக்க வேண்டும் என்று சொல்லலாமே தவிர, ஒரேயடியாய் எடுத்துவிட வேண்டும் என்று சொல்வது சரியில்லை.

வளவனூர்
25—12—48 பி. பார்வதி

○●○

கவர்னர் ஜெனரல் சம்பளம்

நம் நவ இந்தியாவில் மந்திரிகள் கவர்னர்கள் உள்பட, பல இலாகாக்களில் எத்தனையோ விதமான உயர்தர உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரையும் விடக் கவர்னர் ஜெனரல் பதவிதான் பெரியது. மேற்படி உத்தியோகத்திற்குத் தகுந்த சம்பளம் நிர்ணயம் செய்யாவிட்டால் அந்த உத்தியோகத்திற்கு அர்த்தமுண்டா?

ராஜாஜி போன்ற தலைவர்கள் செய்த தியாகத்திற்கு அவர்கள் சம்பள விஷயங்களை எல்லாம் இவ்வளவு பிரமாதப் படுத்த வேண்டிய அவசியமே யில்லை. எல்லாம் தெரிந்த அவர்களையே தம் சம்பளத்தை நிர்ணயம் செய்து கொள்ளும்படி செய்யலாம். அப்படிச் செய்வதில் ஒன்றும் கெட்டுப் போய் விடாது. ஏனென்றால் சம்பளத்தை எப்படி நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

கோவில்பட்டி
27—12—48 கே. திருநாவுக்கரசு

○●○

சேனாதிபதி கரியப்பா

இந்திய சர்க்கார், லெப்டினென்ட் ஜெனரல் கரியப்பா அவர்களைச் சேனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தது பற்றி நான் மகிழ்ச்சியுறுகிறேன்.

1944-ஆம் அராக்கான் போர் முனையில் 26-வது இந்தியன் டிவிஷனில் கரியப்பா அவர்கள் குவார்ட்டர் மாஸ்டர் ஜெனரலாகப் பதவி வகித்தார்கள். அப்பொழுது நானும் 26-வது இந்தியன் டிவிஷனில் என். சி. ஓ. வாக இருந்தேன்.

இராணுவத்தில் உள்ள ஆபீஸர்களையும் சிப்பாய்களையும் வித்தியாசமின்றி நடத்தி எல்லோருக்கும் வேண்டிய உணவு-உடை முதலிய சௌகரியங்களைச் செய்து கொடுப்பதில் கண்ணும் கருத்துமாயுள்ள மேலதிகாரிகளில் ஸ்ரீ கரியப்பாவைப் போன்றவர்களை நான் பார்த்ததில்லை. இராணுவத்தைத் தலைமை தாங்கி நடத்துவதில் அவர் மிகவும் நிபுணர் என்று மூன்று மாத காலம் அவருக்கு டிரைவர் வேலை பார்த்துவந்த நான் திட்டமாகச் சொல்ல முடியும்.

விக்கிரமசிங்கபுரம்
20—12—48 க. கணபதியா பிள்ளை

○●○

விஞ்ஞானம் வளருமா?

இந்தியாவில் தலை சிறந்து விளங்கக் கூடிய விஞ்ஞான ஆராய்ச்சி ஸ்தலம் இந்திய விஞ்ஞானக் கழகம் (Indian Institute of Science) என்னும் ஸ்தாபனம் என்பது அநேகருக்குத் தெரியும். அங்கு நடக்கும் விசித்திரங்களிலே ஓர் உதாரணம் தருகிறேன்.

பேராசிரியர்கள், துணைப் பேராசிரியர்கள் (Professor, Assistant Professor) போன்றவர்களுக்குத் தலைக்குமேலே வேலை இருப்பதால் ஆராய்ச்சியிலே உதவி புரிய ஆராய்ச்சிக்கூட உதவியாளர்கள் (Laboratory Assistants) நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் விஞ்ஞானப் பட்டதாரிகள் (B.Sc). அவர்களுக்குக் கொடுக்கப் படும் சம்பள விகிதம் ரூ. 60—5—90-6-150. அரசாங்க உத்தியோகங்களிலே இருக்கும் (Upper-division) குமாஸ்தாவும் ஒரு பட்டதாரிதான். அவர்கள் 80 ரூபாயில் ஆரம்பித்து 220 ரூபாய்வரை பெறுகிறார்கள். ஆனால் விஞ்ஞானத் துறையிலே வேலை பார்க்கவேண்டும் என்ற அவா உடையவர்களின் நிலைமையை என்னவென்பது? Council of Scientific and Industrial Research ஸ்தாபனத்தின் ஆதரவில் நடை

★ வட்டமேஜைப் பரிசுத் தொகை ரூ. 25-ஐ "கேட்பது அது!" என்ற கடிதம் எழுதிய பொன்னேரி இ. என். ஸ்ரீனிவாசனுக்கும் "தமிழ் வாழ்க!" என்ற கடிதம் எழுதிய சென்னை அ. வி. இந்திரனுக்கும் ரூ. 12—8—0 விதம் பிரித்து வழங்கப்பட்டது.

பெரும் தொழில் முறை ஆராய்ச்சிகளிலே இதே வேலைக்கு மாதச் சம்பளம் ரூ. 100-ம் அலவன்ஸ் 35-ம் கொடுக்கப்படுகிறது. ஒரே இடத்தில் வேலை பார்க்கும் இரு பிரிவின ருக்கும் இடையே இந்த வித்தியாசம் ஏன்?

"போகட்டும். பணம் வேண்டாம் ஐயா! ஓய்வு நேரத்திலே இந்து ஆராய்ச்சி செய்து அதன் மூலம் உயர்ந்த பட்டங்கள் பெறவா வது அனுமதி கொடுங்கள்" என்று கேட்டால் "உங்களுக்கு நாங்கள் சம்பளம் கொடுக் கிறோம். நீங்கள் ஊழியர்கள்; மாணவர்கள் அல்ல" என்று சொல்லி அனுமதி தர மறுக்கிறார்கள். அவர்களுக்குப் புத்தகசாலை (Library) யிலிருந்து புத்தகங்கள் எடுத்துச் செல்லவும் அனுமதி யில்லை.

இம்மாதிரியான நிலையிலே அங்கே வேலை பார்க்கும் ஒருவனுக்கு விஞ்ஞான விஷயங் களில் உற்சாகம் எப்படி உண்டாகும்?

பெங்களூர்
15—12—48 எஸ். ராமச்சந்திரன்

○●○

★ தமிழ் வாழ்க!

நான் ஒரு கல்லூரி மாணவன். தமிழ்மொழி யில் பயிற்சிபெற்று வருபவன். எம் தமிழா சிரியர் ஒரு முறை, 'நம் வாழ்க்கையில் நமது குறிக்கோள் யாது?' என்பதைப்பற்றி விவாதிக்கும்போது, "முன்போன்று தமிழை வளர்க்க பெரும் புலவர்களோ, அவர்களை ஆதரிக்கவல்ல பாண்டிய மன்னர்களோ வள்ளல்களோ இக்காலத்தில் இல்லை. எனவே, தமிழை வளர்க்கும் ஆர்வம் முன் னிருந்ததுபோல் இற்றை நாளில் இல்லை என்பது தெளிவாய் விளங்கும். எனவே இனி தமிழ் மொழி, தமிழரின் மனவுறுதியையும், தமிழாசிரியர்களின் தொண்டினையும், தமிழ் மாணவரின் தன்னலமிலாத் தியாகத்தையும், தமிழ் மக்களது ஆசியையும் கொண்டே வளரவல்லது. இவ்வாறிருக்க, பிற்கால அறிஞராய்த் திகழப்போகும் இற்றைத் தமிழ் மாணவரே! நம்மில் எத்துணைவர் நம் தமிழ் மொழிக்குத் தன்னலமிலாது தியாகம் செய்ய வல்லார் உளர்? சற்று எண்ணிப் பாருங்கள்!! உங்களில் நூற்றில் ஒருவராவது, 'நான் தமிழ் மொழியை வளர்ப்பதையே என் வாழ்க் கைக் குறிக்கோளாகக் கொள்வேன்' என்று துணிந்து கூறுவீரா?" என்று ஒரு புதிர் போட்டு மாணவர் உள்ளத்தில் ஒரு புயலை எழுப்பிவிட்டார். ஆனால் அதே எங்கள் தமிழாசிரியர், தம் குமாரனைத் தமிழ் வகுப் பில் சேர்க்காமல் பிறநாட்டு மொழிகளில் ஒன்றாய பிரெஞ்சு (French) மொழியைப் பயிலும்படி விடுத்தனர்.

தமிழ் வளர்ச்சிக்கென்று பெரும் பாடுபடும் இவர் செய்த இக்காரியம் எங்களிடை ஓர் பர பரப்பை உண்டுபண்ணியது.

ஆனால் யாவரும் எதிர்பாராத வகையில் இதற்கு அவர் தந்த அதிசயமான பதில் என்ன தெரியுமா? "தமிழ் மொழியைப் போலல்லாது பிரெஞ்சு மொழியில் சிறு முயற்சியுடைய எந்த மாணவனும் குறைந் தது நூற்றுக்கு எண்பது மார்க்குகளாவது வாங்கலாம். பல்கலைக் கழகத் தேர்தலில் இதனால் என் மகன் முதலிடம் வகிக்கச் சந் தர்ப்பம் உண்டு. எல்லாப் பாடங்களிலும் முதல் மார்க்கு வாங்கும் என்மகன் 'மொழி'த் தேர்விலும் நல்ல மார்க்கு வாங்கி, என்னை யும், தன் தாயையும், உங்களையும், உங்கள் சார்பாக உங்கள் கல்லூரியையும் கௌரவிப் பான் என நம்புகின்றேன்" என்றார்.

சென்னை
15—12—48 அ. வி. இந்திரன்

[பள்ளிக்கூடங்களில் தமிழுக்கு முக்கி யத்துவம் கொடுக்கிறதாகச் சொல்லி, தமிழ்ப் பாடங்களை மேலும் மேலும் கடின மாக்குவது பெருந் தவறு. இதனால் தமிழ் மாணவர்கள் தமிழின் பேரில் வெறுப்புக் கொள்ள நேரிடும். தமிழ்ப் பாடதிட்டத் தைக் கடினமாக்குவதிலுள்ள தீமை மேற்படி கடிதத்தினால் நன்கு வெளியாகிறது.
—ஆசிரியர்]

★ ★ ★ ★

யார் பிரசித்தமடைவார்கள்?

யுத்த காலத்தில் இங்கிலாந்தின் பிரதம மந்திரியாக இருந்த சர்ச்சில் தம்முடைய மாப்பிள்ளை மீது ஏதோ காரணம்பற்றி மிக்க கோபங் கொண்டிருந்தார்.


அந்தக் கோபத்தைத் தணிக்க, சர்ச்சிலுக்கு சில உற்சாக மூட்டும் விஷயம் கூறவேண்டும் என்று அந்த மாப்பிள்ளை நினைத்தார். அதன் விளைவாக ஒருநாள் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது "இந்த யுத்தத்தின் முடிவில் யார் மிகவும் பிரசித்த மடைவார்கள் என்று நினைக்கிறீர்கள்?" என்றார் மாப்பிள்ளை.


சர்ச்சில் "முஸோலினிதான்!" என்றார்.

"என்ன?"

"ஆமாம்; முஸோலினிதான் பிரசித்தமடைவார். அவருக்குத் தான் தம் மாப்பிள்ளையைச் சுடக்கூடிய தைரியமிருந்தது!" என்றார் சர்ச்சில்.

★ ★ ★ ★


நாளுக்கு நாள்
உங்கள் சருமம் அதிக
அழகைப் பெறும்
Rexona
Rexona
கேடில் கலந்த சோப் ரெக்ஸோனா ஒன்றே. அது உங்கள் சருமத்திற்கு புது ஆரோக்கியமும், மாசற்ற சோபையும், புது அழகும் தரும்.
இன்றே ரெக்ஸோனா சோப் உபயோகிக்க ஆரம்பியுங்கள். அதன் நுரையை மெதுவாக சருமத்தில் தேய்த்துக்கழுவுங்கள். கேடில், சருமத்தை சுத்தம் செய்து மிருதுவாக்கி ஆரோக்கியமூட்டும் சக்தி வாய்ந்த தைலங்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்ட கலப்பு மருந்து. அது உங்கள் சருமத்தை அதிக ஆரோக்கியமுடையதாகவும், அப்பழுக்கற்றதாகவும், திடமாகவும் செய்ய உதவும். அன்றியும் உங்கள் சருமம் நீடித்து நிற்கும் புது அழகைப்பெறும்.
கேடில் சேர்ந்த
ரெக்ஸோனா தான்
இதைச் செய்கிறது!
ரெக்ஸோனா
சோப்
RP. 63-172 TM



இருமல், அவஸ்தை யளிக்கும் ஆஸ்துமா, மார்ச்சளி 3 நிமிஷங்களில் ஒழிக்கப்படுகின்றன

ஆஸ்துமா, மார்ச்சளி தாக்குதலால் மூச்சுத் திணறி தூக்கமின்றி அவதியுறுகிறீர்களா? அதிகமாக இருமுவதால் பிராணவஸ்தையாக இருக்கிறதா? பலஹீன உணர்ச்சியினால் வேலை செய்ய அசக்தராகவும், குளுமையான வஸ்துக்களையும் உணவுகளையும் சாப்பிட முடியவில்லையா?

எவ்வளவு நாட்களாக உபாதையுற்று எதை உபயோகித்திருப்பினும் சரி, மென்டாகோ (Mendaco) ஓர் புதிய நம்பிக்கை அளிக்கும். மயக்க மருந்துகளில்லை, புகை பிடித்தலில்லை, இஞ்செக்ஷனில்லை, ஆட்டோமைஸர் தேவையில்லை. செய்ய வேண்டியதெல்லாம் ருசியற்ற இரண்டு பில்லைகளை சாப்பாட்டின் போது உட்கொள்ள வேண்டியதே. உபத்திரவங்கள் மாயமாக மறைந்துவிடும். மூன்றே நிமிஷங்களில் மென்டாகோ (Mendaco) இரத்தத்துடன் கலந்து வேலை செய்யத் தொடங்கி, கபத்தைக் கரைத்து சிரமமின்றி ஸ்வாசத்தை அபிவிருத்தி செய்து முதல் நாள் இரவே நல்ல நித்திரையை அளித்து விரைவில் பல வருஷங்கள் யௌவன உணர்ச்சியையும் பலத்தையும் பெறுவீர்கள்.

2 வருஷங்களாக ஆஸ்துமா இல்லை

மென்டாகோ (Mendaco) அநேகமாக உடனே குணமளித்து ஸ்வாசத்தை இலகுவாக்குவது மட்டுமின்றி எதிர்கால தாக்குதல் ஏற்படாது செய்கிறது. உதாரணமாக ஜே. கிச்சட்ஸ், நாமிஸ்டன், ஒன்ட். கானடா, இருமல் மூச்சுத் திணறலால் இரவு தூக்கமின்றி 40 பவுண்டு எடை குறைந்து, இறந்து விடுவார் என எதிர்பார்க்கப்பட்டது. மென்டாகோ (Mendaco) ஆஸ்துமாவை முதல் நாளே நிறுத்தி விட்டது. இரண்டு வருஷங்களில் அவ்வுபாதையே மீண்டும் ஏற்படவில்லை.

பணம் வாபஸ் உத்தரவாதம்

மென்டாகோ (Mendaco) முதல் வேளை சாப்பிட்டதுமே நேரடியாக ரத்தத்துடன் கலந்து ஆஸ்துமாவை ஒழிக்கிறது. மென்டாகோ (Mendaco) அதிவிரைவில் வயதில் பல வருஷம் யௌவன உணர்ச்சி, பலம் இவற்றை அளிக்கிறது. வாபஸ் உத்திரவாதத்தின் கீழ் மென்டாகோ (Mendaco) உபயோகித்துப் பார்த்து தீர்ப்பளியுங்கள். மென்டாகோ (Mendaco) சாப்பிட்ட பின் பூரண குணம் பெற்று, திருப்தியளிக்காவிடில் வெற்றுப் பெட்டியை அனுப்பினால் முழுத் தொகையும் வாபஸ் செய்யப்படும். இன்றே மருந்து வியாபாரிகளிடமிருந்து மென்டாகோ (Mendaco) வாங்குங்கள். இன்றிரவு எப்படித் தூங்குகிறீர்கள், மறுநாள் காலை எவ்விதமான தெம்புணர்ச்சி ஏற்படுகிறதென்பதையும் பாருங்கள். உத்தரவாதம் உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது.

Mendaco

மென்டாகோ

★ ஆஸ்துமா ★ மார்ச்சளி நோய் ★ ஹே ஜுரம் இவற்றை நிவர்த்திக்கிறது

5வது வாரம்

சென்னை

பிரபாத்

ஸரஸ்வதி & ஸன்

தியேட்டர்களிலும்

மற்றும் அநேக நகரங்களிலும்
மக்கள் பார்த்து ஆனந்திக்கின்றனர்

மாடர்ன் தியேட்டர்ஸின்



ஆதித்தன் கனவு

டி. ஆர் மஹாலிங்கம், அஞ்சலி தேவி,
காளி என். ரத்னம், வி. டி. ராஜகாந்தம்,
லலிதா - பத்மினி முதலியோர் நடிப்பது

★

இன்ப கானம், இனிய நடனம்
தெவிட்டாத கதைப் போக்கு
இடைவிடா நகைப்பூட்டும்
ஹாஸ்யம்

★

டைரக்ஷன் :

T. R. சுந்தரம், B.A., B.Sc.(Leeds)

★

மாடர்ன் தியேட்டர்ஸ்

லிமிடெட்

சேலம் & மதுரை



அதிகப்படியான மைல்கள்

Firestone

De Luxe CHAMPION TYRES

பயர்ஸ்டோன்

டிலக்ஸ் சாம்பியன் டயர்களினால்

இரண்டு அடுக்குகள் அதிகமான கம்-டிப்பிடு கயிறு பிணைப்புகள் கொண்டவை.

அகலமான அழுத்தமான விடாமிக் ரப்பருடன் விசேஷ முறையில் சேர்த்து செய்யப்பட்ட வரம்புகளுடன் கூடியவை.



இன்று சிறந்தது - நாளை இன்னும் சிரேஷ்டமானது

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press, 116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras

கல்கி



KALKI ஜனவரி 9, 1949 4 அணா



மதராஸ் ஏஜண்டு:
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
பைக்ராப்ட்ஸ் ரோடு
திருவல்லிக்கேணி :: மதராஸ்
கோவை, நீலகிரி ஜில்லாக்கள்
& பாலக்காடுக்கு ஏஜண்டு
R. பாலபட்டாபி
(Estd. 1933)
P. B. No. 182, கோயமுத்தூர்



EASTERNS 394
ஒரிஸ்ஸா, நிஜாம் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ் நாடு, முதலிய இடங்களுக்கு ஏஜண்டுகள் :
ஸ்ரீராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்
பெஷாம்பூர் - செகந்திராபாத்
பெஜவாடா - மதுரை

லோகல் ஆபீஸ்கள் :
எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி, மவுண்டு ரோடு, ராயப்பேட்டை,
மயிலாப்பூர், தியாகராயநகர், புரசவாக்கம், எழும்பூர் - ராயபுரம்

சென்னை மாகாணத்தில் எல்லா முக்கியமான இடங்களிலும்
பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன


வழங்க வாக்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. 72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 53,00,000
ரிசர்வ் நிதி ரூ. 62,00,000
எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும்

என். கோபால அய்யர்,
செக்ரடரி



ஸ்ரீ இந்தியன் பாங்க் லிட்.

மார்ச்சளி, இரவில் இருமல்
இன்னும் சுவாசப் பை,
மார்புக் கோளாறுகளுக்கு
பெப்ஸ்
உங்களுக்குத் தேவை



சுவையுள்ள பெப்ஸ் மாத்திரை ஒன்றை உட்கொள்ளுங்கள். அது கரையும் போதே அதன் மிகச் சிறந்த மருந்து சத்துக்கள் உங்களது சுவாசத்துடன் சேர்ந்து சுவாசப் பைக்குள் சென்று, துரிதமாக ஆறுதலளிக்கிறது. பெப்ஸ் இருமலை நிறுத்தி, புண்பட்டு வெந்த மென்தோல்களுக்கு இதமளித்து கோழையைத் தளர்த்தி அகற்றிவிடுகிறது.



PEPS

சுவாச, நிவாரண
கிருமி நாசக
மாத்திரைகள்

தொண்டை, சுவாசாசயம், மார்பு நோய்களுக்கு
அதிக சக்தி வாய்ந்த பாம ஔஷதம்

ஏஜண்டுகள் : மெஸர்ஸ். தாதா & கோ., பி. டி. மதராஸ்

REGD. NO. M. 4392

